1277

# தமிழரசு

திங்கள்

OFFICE OF ... REGISTRAR ...
16 MAR 1939
MADR...



# தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | பர்மா, பினங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0---2---0 |

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட வியாசங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சென்னை

## டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப் பெற்ற வரப்பிரசாதங்கள்.

OFFICE OF THE RE[illegible]
16 MAR
MADRA[illegible]

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து
கொண்டாடப்படும் நவரத்தினங்கள்.

## இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

207675

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை இனுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கபவாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சீபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வேங்கடேச பெருமாள் செட்டி.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண் டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி லுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றாம் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப் பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர் துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,**

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனா யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்டீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்

சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி **1**-க்கு விலை ரூ. **5.**

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

**5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.**

# இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்க ளாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

## அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினுல் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனுக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸைன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26-12-34.

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# சௌம்யன்

ஓர் இனிய

சினிமாக் கதை

Ta
m211, N30TA
N39.6.3

207675

ஆசிரியர் :

**பாரதிதாசன்**

(காபிரைட்)

ஹிம்ஸையா ?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது? உலகின் நிலை என்ன? அக்ரமம் ஜயிக்குமா ?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலை அணா **6.**

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலை விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம் :—

**'தமிழரசு' புத்தகாலயம்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# பொருள் அடக்கம்


தமிழர்கள் கடமை .... 162

ஆசிரியர் குறிப்புகள் .... 164

மனச்சாட்சி .... 167

சோலை இன்பம்! .... 169

மாதர் பகுதி—இனிமைக் கடிதம் .... 170

திரை நீக்கம் .... 172

நுண்ணிய பொருளில் மன்னிய கொடு நோய் 173

தமிழ் தாழ்வெய்தக் காரணம் .... 175

'இருவர் மரணத்திற்கு........!' .... 177

சிறுவர் பகுதி—உண்மை உயர்வளிக்கும் .... 179

நகரும் பல்கலைக் கழகம் .... 182

வறுமையும் செம்மையும் .... 184

மங்கையர்க்கரசி .... 190

நகைச் சுவை .... 197

என் நண்பன் ராமச்சந்திரன் .... 200

நான் பாக்யவதி .... 207

ஏழு சர்வாதிகாரிகள் .... 210

சோதர வாஞ்சை .... 213

இலங்கை .... 214

ராஜமாலிகா .... 217

மணாளனை வஞ்சித்த மனைவி .... 221

முதலாளித் தன்மையின் அந்திய காலம் .... 227

சங்கீதப் பகுதி—இசையின் அவசியமும் பிறப்பும் .... 231

வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை .... 235


---

குறிப்பு:—'தமிழா'வில் வெளி வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

கம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் 10 | வெகுதான்யஹு பங்குனிமீ 1939ஹு மார்ச்சுமீ 15உ | இதழ் 3 |
| --- | --- | --- |

## தமிழர்கள் கடமை

தமிழ் நாட்டின் காந்தியம் தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்குப் பிடிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கட்கும் ஒத்து வரவில்லை. கிறிஸ்த்தவர்கட்கும் அதே விதம்.

தமிழ் நாட்டில் தொழிலாளர் அதை நம்புகிறார்களா? காந்தியம் தொழிலாளர்களின் விரோதி என்பதை நன்றாக அறிந்து கொண்டார்கள்.

மீதியாக உள்ள இந்துக்களில், வியாபாரிகள் காந்தியத்தை வெறுக்கிறார்கள். தமிழ் நாட்டுக் காந்தியமென்பது பார்ப்பனர்க்கு ஆக்கந் தேடத் திருவவதாரம் செய்த கம்பெனி என்பதையும் அநேகர் தெரிந்துகொண்டு காந்திய சம்பந்தத்தை அறுத்துக்கொண்டார்கள்.

இந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்றதை எதிர்த்து நடத்தும், இந்தி யெதிர்ப்புக் கிளர்ச்சியால் தமிழ் நாட்டு மக்களின் மனோ வேதனையைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

தமிழ் நாட்டில், காந்தியத்தை ஆதரிப்பவர்கள் யார்? ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள்.

(1) தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களில் பெரும்பான்மையோர் காந்தியத்தை ஆதரிக்கிறார்கள்.

(2) பார்ப்பனராக உள்ள உத்தியோகஸ்தர்கள் ஆதரிக்கிறார்கள்.

(3) பார்ப்பனரால் நடைபெறும் பத்திரிகைகள் ஆதரிக்கின்றன.

(4) பார்ப்பனரின் ஆதிக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் சினிமாக் கம்பெனிக்காரர்கள் ஆதரிக்கிறார்கள்.

(5) சொந்த நன்மையைப் பெரிதாக நினைத்துள்ள அஞ்சும் சுபாவமுள்ள மானமற்ற தமிழர்களில் மிகச் சிலர் ஆதரிக்கிருர்கள்.

மற்ற மாகாணங்களின் நிலைமைக்கும் தமிழ் நாட்டின் நிலைமைக்கும் வித்தியாசம் உண்டு. காந்தீயத்தின் அக்ரமத்தை வஞ்சகத்தைத் தமிழ்நாடுதான் அதிகமாக உணர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் சுமார் பதினைந்து வருட காலமாகப் பார்ப்பனீயத்தை, அதன் மோசத்தை, ஆரியத்தின் நாசகாலித்தனத்தை, எதிர்த்துக் கிளர்ச்சி செய்துவரும் ராமசாமிப் பெரியாரும் அவர் வீரர் கூட்டமுமே யாகும்.

இந்த நல்ல தருணத்தில் பார்ப்பனரல்லாதவர்கள் அனைவரும் ஒத்திருந்து உருவான வேலைகளைத் திறமையாகச் செய்தால் தமிழர்களின் புது நிலையை உண்டாக்கி விடலாம்.

(1) ஆரியர் யார்—அவர்களின் இயற்கை என்ன? என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

(2) பார்ப்பன உத்தியோகஸ்தர்கள், அல்லாதார்க்கு இழைத்துவரும் கெடுதல்களை அவ்வப்போது பிரிட்டிஷ் சர்க்காருக்கு எடுத்துக் காட்டி வருவதற்கே தனிக் கழகங்களை உண்டாக்கிப் பணி செய்வித்து வருதல் வேண்டும்.

(3) தமிழர்களின் பத்திரிகைகளை இன்னும் விரிவான முறையில் நடத்தவேண்டும். எழுத்தாளர்கள், கவிஞர்கள், நகைச் சுவை வல்லவர்கள், சரித்திராசியர்கள் அனைவரையும் அவைகளில் சேர்க்க வேண்டும். இன்னும் பத்திரிகைகள் துவக்கப்படுதல் வேண்டும். விரோதிகளின் பத்திரிகைகளுக்குத் தமிழர்கள் ஆதரவு தருதல் கூடாது என்பதைப் பிரசாரம் செய்ய வேண்டும்.

(4) சினிமாக் கம்பெனிகள், படக் கம்பெனிகள் இவற்றில் தமிழர்களின் கோடிக் கணக்கான முதல் நடமாடுகிறது. அதைப் பார்ப்பதன் மூலம் கோடிக் கணக்காகப் பணத்தைத் தருபவர்களும் தமிழர்களே. ஆதலால் பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்து அந்த ஸ்தாபனத்தை விடுவிக்க வேண்டும். பார்ப்பன முதலுள்ள எந்தக் கம்பெனியையும் தமிழர்கள் ஆதரிக்காதபடி பிரசாரம் செய்ய வேண்டும். இதற்குத் தனியான கழகங்கள் நிறுவப் படவேண்டும். தனியான பத்திரிகைகள் உண்டாக்கப் படவேண்டும்.

(5) தமிழராக இருந்தும், பார்ப்பனரிடம் கூடிக்கொண்டு தமிழ்ப் பெருமக்களை அவமானப் படுத்தும், கேடு சூழ்ந்துவரும் மானமற்ற தமிழர்களை, எந்தத் துறையிலும் எதிர்த்தாக வேண்டும்.

தமிழ் நாட்டைத் தமிழ் நாடாக்கத் தக்க—தமிழர்களைத் தமிழர்களாக்கத் தக்க—தமிழ் நாட்டைத் தமிழருக்கு ஆக்கத் தக்க—




## போசும் காந்தியும் தமிழர்கட்கு ஒன்றுதான்

காந்தீயத்திற்கு நாட்டில் செல்வாக்கில்லை. செல்வாக்கில்லாத தால்தான் காங்கிரஸ் என்றும் காந்தீயம் என்றும் பெயர்கூடப் பிரிக்கப்பட்டு, அப் பெயர்கள் உறுதி யடைந்தும் வருகின்றன.

போசுக்கும் செல்வாக் கிருப்பதாகக் கூற முடியவில்லை. ஏனென்றால் காந்தீயத்திற்குப் போசுக்கூட்டம் தோற்று விடும் போல் தோன்றுகிறது.

இதில் வாசகர்கள் ஆச்சரியப்படலாம். நாம் மேலே சொன்ன இருகட்சிக்கும் செல்வாக்கில்லை என்கிறோம். இருகட்சியிலும் மக்கள் நிறைய இருக்கிறார்கள் என்கிறோம். செல்வாக்கில்லை யென்றால் ஆச்சரியப்பட வேண்டியதுதான்.

விஷயம் என்ன என்றால் காந்தீயம் இப்போது வெள்ளையாய் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பக்கம்! முன்னை யெல்லாம் அப்படி யில்லை. கொஞ்சம் மறைவிடமாக!

காந்தீயத்தை மக்கள் ஆதரிக்கிறார்கள் ஏன்? மந்திரிகள் அவர்கள்! பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்கள் பக்கம்.

விஷயம் அறிந்தவர்கள் — துடிதுடிப்புள்ளவர்கள் — சுபாஷ் பக்கம்!

இன்னுமா புரியவில்லை?—காந்தீயத்திற்குப் பயந்துகொண்டு வெளிக்கு அநேகர் காந்தீயத்தை ஆதரிக்கிறார்கள். அவர்கட்குத் தெரியும் காந்தீயத்தின் புரட்டு! என்ன பண்ணுவது!

ஆனால் காந்தீயமும் சுபாஷியமும் முடிவில் ஒன்றுதான் என்று முடியவும் கூடும்.

---

தமிழ் நாட்டில் ஆரியப் பகையைக் களைந் தெறியத் தக்க—சந்தர்ப்பம் இதுவே யாகும். பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்று படுக. திராவிடர் அனைவரும் ஒன்று படுக. துறைதோறும் புகுந்து இறை தோறும் முயல்க.

அவசரவாதிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் காந்தியத்தி னின்று கழட்டிக் கொண்டார்கள் என்று நினைத்து அவர்களை சுபாஷீயத்தைக் கொண்டு இழுத்துக் கட்ட இந்த ஏற்பாடாகவும் இருக்கலாம்.

நாட்டில் பிரிவு அதிகம். பிரிவினைக்குரிய செய்கைகள் மிகவும் அதிகம். கல்வி மட்டு - பகுத்தறிவுமட்டு இந்த நிலையில் காந்தீய மாகட்டும் சுபாஷியமாகட்டும் என்ன செய்துவிட முடியும் என்று தான் நமது அநுபவம் நினைக்கிறது.

தமிழர்களின் முன்னேற்றம் இவை இரண்டினாலும் எள்ளத் தனையும் உண்டாக முடியாது.

தமிழர்களின் கலைக்கு, தமிழுக்கு, முன்னேற்றம் தேவை தமிழர்கள் தமிழர்களாகத் திகழ வேண்டும்.

தமிழர்கள் ஒற்றுமை யடைய வேண்டும். பிற விரோதிகளால் தமிழர்களின் நாகரிகம், தமிழ், தமிழ்க் கலைகள், ஈடழிக்கப்படுவ தைத் தடுத்தாக விரோதிகளை அடக்கியாக வேண்டும்.

## பழைய கப்பல் புதிய கப்பல்

திரிபுர காங்கிரஸ் மகாநாட்டில் எல்லாம் சமாதானமாகிய முறையில் மகாநாடு நடந்தது, எல்லோர் மனதையும் திருப்தி செய்தது. இதற்குள் காந்தி கட்சியைச் சேர்ந்தவர்களும் சுபாஷ் கட்சியைச் சேர்ந்தவர்களும் பல மாதிரி பேசி விட்டார்கள். அதிலும் கனம் சென்னை பிரதம மந்திரியார் பேசியது எல்லார் மனதையும் சலிக்கச் செய்துவிட்டது. ஏனெனில், சுபாஷ் கட்சி புதிய கப்பல் என்றும், அது ஓட்டை உடையது என்றும், அதில் ஒருவரும் ஏற வேண்டாம்; காந்தி கப்பல் பழைய கப்பல், அதில் ஏறிச் சென்றால் அபாயமின்றிக் கரை சேரலாமென்றும் பேசினர். அது காந்தியினுடைய கொள்கைக்கும், இவருடைய கொள்கைக் கும் பொருத்தமானதே. எப்படியெனில், பழைய இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு ஊர்ப்பிரயாணம் செய்வதால், பிரயாண மானது மாதக் கணக்கிலிருந்தாலும், அபாயமின்றிப் போய்ச் சேரலாம். மோட்டார் பிரயாணமும், ரயில் பிரயாணமும், ஆகாய விமானப் பிரயாணமும் புதிய கப்பலைப் போலொத்தது. ஓட்டை யுடையதென்பதற்கும் பொருத்தமானது. என்றாலும், நடை முறை யில் ஒருவரும் அனுஷ்டிக்க முடியாத ஒன்றாகும். ஆதலால், பழைய கப்பல் புதுக் கப்பல் என்ற உபமானம் ஒருவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பதை மக்கள் உணர்வார்களாக!

## ரூபாய்க்கு தம்பிடி விற்பனை வரி

சென்னை மாகாணத்தை ஆண்டுவரும் காங்கிரஸ் அரசாட்சியினிடத்தில் சில மாதத்திலிருந்து மக்கள் வெறுப்படைந்து வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நவீனமாய் ஏற்பட்ட விற்பனை வரி, புகையிலை வரி, பீடி சுருட்டு பொடி முதலிய வியாபாரங்கள் செய்பவர்கட்கும், உபயோகப் படுத்தப்பட்டவர்கட்கும், வரி விதிப்பதாலும்; விற்பனை வரியின் மூலம் ஒரு ரூபாய் சாமானுக்கு ஒரு ரூபாய் வரி விதிப்பது போலாகும் என்பதை உணர்ந்த வியாபாரிகளும், ஒரு ரூபாய் சாமானை இரண்டு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டுமென்று உணர்ந்த ஏழை மக்களும், இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வெளிவந்து விட்டார்கள். அதற்கடையாளமாக எல்லா ஜில்லாக்களிலும் எல்லா கிராமங்களிலும் கடை யடைப்பு, கூட்டங்கள் நடந்து வருவதைப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். விற்பனை வரியானது ரூபாய்க்கு ஒரு தம்பிடி என்று சொன்னாலும், அது மாறும் கைகளோ ரூபாய்க்கு ஒரு ரூபாயாகிறது. எப்படியெனில் கம்பெனிக்காரருக்கு ஒரு பை, ஏஜெண்டுக்கு ஒரு பை, அடர்த்திக்காரனுக்கு ஒரு பை, கமிஷன் வியாபாரிக்கு ஒரு பை, ஜில்லா வியாபாரிக்கு ஒரு பை, தாலுக்கா வியாபாகளுக்கு ஒரு பை, கிராம வியாபாரிகளுக்கு ஒரு பை, இப்படி ஒவ்வொரு கையாகமாறி, கடைசியில் அநுபவிப்போரிடம் வரும்போது ரூபாய்க்கு ஒரு ரூபாய் கணக்காகிறது. இந்தப் பணம் ஏழைகளைப் பாதிக்கிறது. அதனால் எல்லாரும் இந்த ஆட்சியை வெறுக்கிறார்கள். மக்களால் வெறுக்கப்படும் ஆட்சியிலிருந்து அரசை நடத்துவதைக் காட்டிலும் விலகிக் கொள்வதே அறிவுடையோர் செய்கையாகும்.

## வருந்துகிறோம்

15—12—38 (மார்கழி மாதம்) வெளியான 'தமிழரசு' இதழில், 'விலங்கு வேண்டாம் குட்டையில் மாட்டு' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்த வியாசத்தில்; கிறிஸ்தவ மதஸ்தர்களின் மனதைப் புண்படுத்துவதற்காக எழுதிய வியாசம் அல்லவென்றும், மந்திரிகள் செய்த சட்டத்தைக் கண்டிப்பதற்காகவே எழுதினதென்றும், அப்படி கிறிஸ்தவர்கள் மனது புண்படும்படி ஏதாவது இருக்கும்பக்ஷத்தில், அதற்காக வருந்தி மன்னிப்புக் கோருவதாகவும் இதன்மூலம் தெரிவிக்கின்றோம். எங்களுக்கு ஒரு மதஸ்தரைக் குறை கூறவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. ஆதலால், இதைப்பற்றிக் கிறிஸ்தவர்கள் வருந்த வேண்டியதில்லை என்று கேட்டுக் கொள்கிறோம்.

# மனச்சாட்சி

[பாரதிதாசன்]

பொன்னியும் எதிர் வீட்டு முருகியும் கறி வாங்கக் கடைக்குப் போயிருந்தபோது ஒரு பெட்டைக் கோழி மலிவான விலைக்கு வந்தது. பொன்னி அதை ஐந்தணுவுக்கு வாங்கினாள். முருகிக்கு இது விஷயத்தில் பொறுமையே கிடையாது. வீட்டுக்கு வந்தார்கள். இரண்டு நாட்கள் சென்றன.

*　　　*　　　*

காலை 10 மணி! பொன்னி தன் புதுப் பெட்டை இட்ட முட்டை ஒன்றை முருகிக்கு அன்புடன் அனுப்பினாள். முருகிக்கு அந்த முட்டை வெகு ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டது; முட்டையைக் கையால் தூக்கித் தூக்கி நிறைபோட்டாள்; அதன் பருமனைக் கண்ணால் அளந்தாள். முட்டை அதிகப் பெரிது. கனமும் உடையது.

முருகி நினைத்தாள் :—

பொன்னி நிரம்ப அதிர்ஷ்ட சாலி. அவளுக்கு ஐந்தணுவுக்கு உயர்ந்த ரகமான கோழி அகப்பட்டது. அந்தக் கோழி அவளுடைய குடும்ப முன்னேற்றத்தின் விதை.

*　　　*　　　*

அன்று மாலை 6½ மணிக்கு முருகி, தன் கொல்லைப்புறம் ஏதோ வேலையாகச் சென்றாள். அவள் மனதில் இருந்து கொண்டிருந்த அந்தப் பெட்டை தனது வைக்கோற்போரில் அடைந்திருந்தது. என்ன ருசி! எவ்வளவு பெரிது அந்த முட்டை! முருகியை இந்த ஆசை இழுத்துச் சென்றது மனிதத் தன்மைக்கு அப்பால்!

உடனே முருகியின் சிந்தனை இப்படி மாறிற்று :—

பொன்னிக்கு எப்படித் தெரியும் நான்தான் கோழியைப் பிடித்தேன் என்று! அதை நான் பிடித்துக் கொள்கிறேன். நாலைந்து முட்டைகள் என் வீட்டிலேயே இடட்டும். அந்த முட்டைகளை வேறு பெட்டையண்டை அடை வைத்துவிட்டுப் பொன்னியின் கோழியை அடித்துத் தின்று விடுகிறேன்.

ஆயினும் முருகி, இந்தக் கெட்ட எண்ணக் கிணற்றில் இன்னும் முழுகி விடவில்லை. அரை மனத்தோடு பெட்டையைப் பிடித்தாள்; வீட்டில் கவிழ்த்து வைத்துவிட்டாள்.

*　　　*　　　*

கோழியைத் தேடிக்கொண்டு பொன்னி வந்தாள். முருகி தத்தளித்தாள். முருகி அநாகரீகமான உலகில் இருந்துகொண்டு

உன் பெட்டை இங்கு வரவே யில்லையே என்று பொய்கூறி முடித்து விட்டாள்.

* * *

முருகியின் கணவன் வந்தான். முருகி தான் பொன்னிக்குச் செய்த அக்ரமத்தைச் சொன்னாள்.

அவன் சொன்னான் :—

அக்ரமத்தைச் செய்துவிட்டு இப்படிக் கஷ்டப்படுகிறாய்.

முருகி:—ஆம் பிறர் பொருளைத் திருடியவர்கள் மறுபிறப்பில் அநேக துன்பங்களை அநுபவிக்க வேண்டுமாமே ?

கணவன்:—'மறுபிறப்பு உண்டு' என்பதே இன்னும் நிச்சய மாக வில்லையே !

முருகி இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். நான் கோழியைத் திருடியதற்கு மறுபிறப்பில் தண்டனை இருந்தால் என மனம் அமைதி யடைந்திருக்கும். இப்போது என்னை அல்லல் படுத்தும் மனச் சாட்சிக்கு ஓர் ஆறுதலும் இல்லாமல் போய் விட்டதே. பெட்டை பொன்னியுடையது என்பதை என் மனம் நன்றாய் அறியும். பொய் கூறிவிட்டேன். வேதனையிலிருந்து மீள முடியவில்லை என்றாள்.

முருகி மறைத்து வைத்திருந்த பெட்டையைத் தூக்கிக் கொண்டு பொன்னியின் வீடு நோக்கி ஓடினாள். பொன்னியிடம் உண்மை கூறினாள். மன்னிப்புக் கேட்டாள்.

கிடைத்த அந்த மன்னிப்பில் முருகிக்கு ஐந்நூறு கோழியினால் ஏற்படும் இன்பம் ஏற்பட்டது.

---

பில் கலெக்டர்:—முதலியார்வாள் நாய்களுக்குப் பாஸ் வாங்க வேண்டிய நாள் வந்துவிட்டது. உங்கள் வீட்டில் நேற்று நாய் குலைக்கும் சப்தம் கேட்டதே.

முதலியார்:—இல்லை இராக்காலங்களில் ஏதாவது சப்தமானால் நாங்களே குலைத்துக் கொள்வோம். —வேப்பேரி K. B. துரைசாமி

ஒருவர்:—(ஓட்டல்காரனைப் பார்த்து) ஐயா, இன்று காப்பி மிகவும் நன்றாக இருக்கிறது.

ஓட்டல்காரன்:—ஆம், அந்த மடப்பயல் நான் குடிப்பதற்கு வைத்திருந்ததை உங்களுக்குக் கொண்டுவந்து கொடுத்து விட்டான்.

—T. S. சிவநேசன்

# சோலை இன்பம்!

[புதுவை. S. சிவப்பிரகாசம்]

(ஆறுமுக வடிவேலவனே என்ற மெட்டு)

கண்ணைக் கவர்ந்திடும் வண்ண மலர்ச்சோலை
கண்டேன் உளமகிழ்ந்தேன்!—அங்குப்
பண்க ளமைத்துநற் புள்ளினம் பாடிடும்
பாட்டில் செவி குளிர்ந்தேன்! (1)

தென்றல் நறுமணம் வீசுவதால் எழில்
தேகம் நனிகுளிர்ந்தேன்—அங்கு
மன்றல் புரிந்திடும் மாங்குயில் வேடிக்கை
காண மனமகிழ்ந்தேன்! (2)

மாமயில் பன்னிறத் தோகை விரித்தாடும்
மாட்சி யுரைப்பதுவோ!—அங்குக்
கோமள வல்லியர் ஆடுதல் பாடுதல்
கோலம் உரைப்பதுவோ! (3)

அந்திப் பொழுதெங்கும் பொன்னிறம் வீசின;
ஆகா அதனெழிலில்,—மிகச்
சிந்தை தடுமாறிச் சீவனெலாங் காதல்
தீயில் எரிந்தனவே! (4)

அன்னந் தன்பேட்டை அருகழைத் தேமிக
ஆர்வ மொடுகுலவும்!—அங்கே
இன்னன காட்சிகள் ஆயிரங் கண்டுநான்
என்னுளஞ் சோர்கையிலே, (5)

பின்புற மாய்வந்தே என்னிரு கண்களை
யாரோ மறைத்துநின்றார்—அவர்
என்னுயிர்க் காதலி என்றறிந் தேன்பின்னர்
இன்பம் உரைப்பதுண்டோ! (6)




# இனிமைக் கடிதம்

[ப. சுந்தரவேலு, புதுவை.]

தோழி வடுவா!

‘சுளிக்கச் சொல்லேல்’ என்று ஔவை உரைத்த முதுமொழியின் பொருள் பிறர் மனம் நோகும் முறையில் பேசாதே என்பதாகும். அப்பொழுது நாம் எப்படிப் பேசினால் பிறர் மனம் சந்தோஷ மடையு மென்று யோசிக்கக் கடமைப் பட்டிருக்கிறோ மல்லவா? நம் எண்ணத்தை முகச்சாயலும் உரையுமே பிறர்க்கு நன்கு வெளிப்படுத்துவதால் நம் மனம் நொந்தாலும் பிறர் மனம் நோகாது நடந்து கொள்ள இனிமையாகப் பேசுவது அவசியமே.

ஓரிடத்தில் வெல்லத் துண்டு ஒன்றிருந்தால் ஈ எறும்புகள் எவ்விதம் அது இருக்குமிடம் தேடிச்சென்று மொய்க்கின்றனவோ அதைப் போலவே இனிமையாகப் பேசுபவனை மக்கள் நாடிச் செல்வதைப் பார்க்கலாம். இது அனுபவசித்தம். இனிமைச் சொல் அன்புடையாரிடம் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி என்பதால் அன்னவர் தம்மிடம் பழகும் மக்களை நல்வழிப் படுத்துவார்.

அன்பு, சாந்தம், உண்மை முதலிய நற்குணங்கள் அமைந்து நம் வார்த்தையானது அழகா யிருக்க வேண்டு மென்றிருக்க, அதை விட்டுப் பிறர்க்குத் துன்பந்தருதலும் கோபம் மூட்டலுமாகிய சொற்களைப் பேசுவது எப்படி இருக்கு மென்றால்,

‘இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று’ என்று

தெய்வப் புலவர் கூறிய திருவாக்கிற் கொப்பாகவே இருக்கும். இக்குறளின் முக்கியக் கருத்து, பேசுவதற்கு இனிமைச் சொல்லி ருக்க அதை உபயோகியாது வன்சொல்லை உபயோகிப்பது முறை யன்று என்பதாகும்.

இனிமைச் சொல் வன்சொல்லை வெல்லும் என்பதை,
'வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாரை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்'

என்ற செய்யுளால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் நம் ஔவைப் பிராட்டியார். இதனால் பெறப்படுவது யாதெனில் இனி மைக்கு உயர்வும் வன் சொல்லிற்கு இழிவும் உண்டென்பதுதான்.

நமக்கொரு தீங்கும் செய்யவில்லை கழுதை. குயில் நமக் கொரு நன்மையும் செய்ய வில்லை. ஆனால், கழுதை வாய் திறந்தால் வெறுக்கிறோம். குயில் கூவினால் களிப்பெய்துகிறோம். காரணம் கழுதைக் குரலில் இனிமை இல்லை. குயில் குரலில் இனிமை உண் டென்பதேயாகும். இதனால், நாமறிந்து கொள்ள வேண்டியது மக்க ளனைவரும் இனிமையையே நாடுகிறார்கள்—விரும்புகிறார்கள் என் பதை. ஏன் உண்மைதானே ?

மக்கள் விரும்பும்படி நாம் பேசப் பழகிக் கொள்வது முதற் கடமையாகும். அவ்விதம் பேசப் புகுவது இது நல்லது இது தீது என்றறியாச் சிறு வயதிலேயே இனிமைச் சொல் பேசப் பழக்க வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழி யைப் போல் சிறு வயதில் கற்பித்து வரும் வழக்கமே அவன்சாகும் வரை கையாளுகிறானாதலால் இன் சொல்லை நந்தம் மக்களுக்குப் புகட்டி வருதலே முறை. அதை விட்டுக் குழந்தைகளுக்குத் தகாத சொற்களைச் சொல்லித் தந்து, அவர்கள் அதைப் பேசும் போது அதைக் கேட்டுச் சந்தோஷ மடைவது மடமைத்தன மல்லவா? நீ உன் குழந்தைக்குப் போதித்து வரும் முறையும் இவ்விதமே. அவ் விதஞ் செய்வதை விட்டு இனிமைச் சொல்லைப் பழக்கி வந்தால் எத் துணையோ சிறப்பல்லவா ? இதை நீ யோசனை செய்து நடப்பாய் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு

கடவுளிடம் காதல் வரித்து உன்
சுக ஜீவிய சௌக்கியத்தை வேண்டும்,
சுந்தராம்பாள்.

# திரை நீக்கம்

[பாரதிதாசன்]

ஓர் பார்ப்பனனைப் பார்த்து நீ தமிழனல்ல என்றால் தமிழன் தான் என்கிறான். நீ ஓர் ஆரியன் என்றால், ஆரியர் திராவிடர் பிரச்னையே கூடாது அதெல்லாம் பிரிவை உண்டாக்கும் என்கிறான். இதுவரைக்கும் எந்தப் பார்ப்பானாவது நான் ஆரியனல்ல என்று சொல்லி இருக்கிறானா யோசித்துப் பாருங்கள்.

* * *

இத்தனை பெரிய உலகத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் என்பது எல்லாத் தேசத்திலும், எல்லா ஜாதியாரிடத்திலும் கண்டதுண்டு. இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் பார்ப்பனனிடம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்த்ததுண்டா? படிக்காத பார்ப்பான் புரோகிதனாகி விடுகிறான். தமிழ் படித்த பார்ப்பான் தமிழை அழிக்கத் தொடங்கிப் பொருளும், புகழும் அடைகிறான். நோயாளிப் பார்ப்பான் பக்ஷணம் விற்கிறான். இங்கிலீஷில் பட்டம் பெற்ற பார்ப்பான் இங்கிலீஷ்காரனை ஆதரிக்கக் கிளம்புகிறான். அவர்களின் பந்துக்களாக உள்ள பார்ப்பனர் தேசியத்தில் இறங்கி விடுகிறார்கள். அறைகுறை இங்கிலீஷ்கள் தமிழ்ப் பத்திராசிரியர்களாகி விடுகிறார்கள்.

* * *

பார்ப்பனர்களால் நடத்தும் பத்திரிகைகள் இப்போதும் நல்ல படியாகத்தான் நடந்து வருகின்றன. ஏனெனில் பார்ப்பனர்கள் ஒவ்வொரு பத்திரிகையிலும் இரண்டிரண்டு காப்பிகள் வாங்குகிறார்கள். அது மாத்திரமல்ல சில தமிழர்கள் இருட்டில் இருக்கிறார்கள் இப்போதுதான் விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தடவுகிறார்கள்.

* * *

என் மகன் பல துறையிலும் அறிவில்லாதவனாக இருக்கிறான். சங்கீதமா, எழுத்துவன்மையா, தமிழ் இலக்கியமா இலக்கணமா, இங்கிலீஷிலாவது தமிழிலாவது உள்ள கலைகளா ஒன்றுமில்லை. என்ன செய்யலாம் என்று கேட்டான்.

தமிழ்நாடு தானே சார் இது. ஒன்றும் தெரியாதவன் விமரிசனம் எழுதலாமே.

* * *

என் நண்பர் ஒருவர்க்குப் போட்டிப் பரிசு கிடைத்திருக்கிறது. எதில் என்று கேளுங்கள். வியாசம் எழுதுவதில். ஆனால் அந்தப் போட்டிப் பரிசில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

# நுண்ணிய பொருளில்
# மன்னிய கொடு நோய்

[த. உலகநாதன், கரந்தைத் தமிழ்க் கல்லூரி, தஞ்சை]

உலகில், கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய நச்சுக் கிருமிகள் பலவகையான நோய்களை உண்டாக்குகின்றன. அக் கிருமிகள் நுண்ணியனவாயினும் அவை உண்டாக்கும் கொடு நோய்கள் கணக்கிலடங்கா. மனிதர்களை யமன் வாயிற் சேர்க்கின்றன. உண்மையுணராத மக்கள் அந்நோய்கள் தெய்வம் தம்மேல் கொண்ட சீற்றத்தாலும், முற்பவத்திற் செய்த வினையாலும் உண்டாகின்றன வென்று கூறிச் செல்வர். எனினும், விஞ்ஞானக் கண் படைத்த பேரறிஞர்கள், இத்தகைய கொடிய நோய்கள் உண்டாதலின் காரணத்தை உலையா உழைப்போடு கண்டு பிடித்துக் கூற்றுவன் கொலைத் தொழிலைக் குறைத்து வருகிறார்கள். 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்னும் பொய்யா மொழியின் மெய்யுரைக்கு இவர்களே இலக்கன்றோ?

இத்தகைய பேரறிஞர்களுள் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் றிகழ்ந்த 'சர் ரோனல்ட் ராஸ் (Sir Ronald Ross) என்னும் ஆங்கில விஞ்ஞானப் பேரறிஞர் ஒருவராவர். இவர் காலத்தில் மலைச்சுரம் (Malaria) என்னும் கொடுநோய் ஆண்டாண்டுதோறும் ஆயிரமாயிரமாக மக்களை வருத்தியது. இந்நோய் உண்டாகும் காரணத்தை அறிதற் பொருட்டு ராஸ் லண்டன் நகர்விட்டு இந்தியாவிற்கு வந்து ஆராய்ச்சி செய்தார். அவர் நெடுநாள் உண்மையறியாது உழன்றார். பற்பல இன்னல்களும் இடையிடையே அவர் தொண்டைத் தடைப்படுத்தின. எந்த இடையூறுக்கும் ராஸ் சலிக்கவில்லை. இரவெல்லாம் விளக்கண்டை கண் விழித்தார்; பசியையும் பாராது கண்ட கண்ட பொருள்களை யெல்லாம் உற்று நோக்கினர்; வியர்வை பெருகி அவர் ஆடைகளை யெல்லாம் நனைத்தது; கண்ணீர் பெருகி பூதக் கண்ணுடி யந்திரத்தைத் துருப்பிடிக்கச் செய்தது; உற்றுப் பார்த்த காரணத்தால் கண்களும் மங்கி, தான் விரும்பிய இடங்கட்குச் செல்லும் போது வழி தவறினர். ஆண்டுகள் பல சென்றன. முயற்சி வீண் போகுமா? கடைசியில் ராஸ் 'அனொபெலிஸ் (Anopheless) என்ற ஒருவகைப் பெண் கொசுகின் முட்டைகளை ஆராய்ந்து, அவற்றில் மலைச்சுரக் கிருமிகள் இருப்பதைக் கண்டார். உடனே அவர் மட்டிலா மகிழ்ச்சி கொண்டார்; இருக்கைவிட்டு எழுந்தார்; 'கண்டேன்' 'கண்டேன்' என்று ஆடினர், பாடினர். கூற்றுவனுக்கும் தனக்கும் நடந்த போரில் தனக்கு வெற்றியை அளித்த இறைவனை வாயார—உளமார பின்வருமாறு பாடி வணங்கினர்.

21 ஆகஸ்டு, 1897.

இன்றே நன்னாள் ! இன்றே நன்னாள் !
இறைவ னருள்செய் இன்றே நன்னாள் !
என்பா லிறைவனார் எடுத்த கருணையால்
இன்றொரு நுண்பொருள் இனிதே கண்டேன்.
மக்களை வருத்திய மலைச்சுர மதனின்
துப்புக ளறியத் தொடங்கியும் காணேன்.
கண்கணீர் சொரியக் கங்குலில் விழித்தேன்,
வியர்த்து மென்றன் முயற்சி யொழித்திலேன்.
இடைவிடா தியற்றிய என்னுடைத் தொண்டால்
ஆண்டான் டாகபல் லாயிர உயிர்தமை
அழித்தவிக் கொடுநோய் ஆவதை அறிந்தேன்.
இன்றே நன்னாள் ! இன்றே நன்னாள் !
மக்களுக் கினிமேல் மலைச்சுர மதனால்
ஆகிய அச்சம் அழிந்தது, ஒழிந்தது.
கூற்றுவ, நின்றன் கொடுமைக ளெங்கே ?
சவக்குழி யே,இனி அவக்குழி யேநீ !
‘ நுண்ணிய முட்டையுள் மன்னிய திந்நோய்’
என்றெனக் கருளிய இறைவ நின்றன்
பாதம் பணிவேன் ! பாதம் பணிவேன்
நின்னரு ளல்லால் நிகழ்வதொன் றுண்டோ ?
நின்குறிப் பறியும் நேர்மையில் மக்கள்
உடுக்களின் நிலையை உன்னியே யுழல்வர்.
ஒருபெரும் முதல்வநின் உள்ள நெகிழ்ச்சியை
பொருளென மதியாப் பொருளில் காட்டினையே
அறிவுச் சுடரே ! அழியாப் பொருளே !
விஞ்ஞா னத்தின் விளக்கே போற்றி,
பாமா லையாலுனைப் பராவித் தொழுவேன்
பற்பல இன்னலுட் படிந்தும் ஈற்றில்
வெற்றியே தந்தாய் வேந்தே யதனால்
இன்றே நன்னாள் ! இன்றே நன்னாள் !

இஃது சர் ரோனல்ட் ராஸ் (Sir Ronald Ross) அவர்கள் இயற்றிய ‘On his discovery of the Malaria Parasite’ என்ற பாட்டின் மொழி பெயர்ப்பு.

# தமிழ் தாழ் வெய்தக் காரணம்

[டி. அந்தோனி சாமி]

**நம்முடைய** தாய் நாட்டில் வழங்கும் மொழிகள் பல உள. அவற்றுள் சொல் நயம் பொருள் நயம் வாய்ந்து பலகலை நிறையப்பெற்று விளங்குவது நந்தமிழ் மொழியே யாகும். இச் சிறப்பு வாய்ந்த நாட்டில் நாமுதித்தும், நமக்குச் சொந்தமாகிய தமிழ் மொழியை அறவே மறந்து, அதைச் சரிவரக் கற்பதற்கு வேண்டிய முறைகளை நாம் கைக்கொள்ளாமையால், தமிழ் மொழி நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது. தற்போது தமிழ் மொழியானது, தென்னிந்திய மக்களுக்குரிய மொழியோ அல்லது பிறநாட்டார் மொழியோ என்கிற நிலைமையில் வந்துவிட்டது. தமிழரசர் தமிழ் நாட்டை யாண்ட காலத்துத் தமிழும் தனியரசு நடாத்தியது. இதினின்று பெறப்படுவது யாதெனில் ஒரு மொழியின் ஆட்சிக்கு அம்மொழியினரின் ஆதரிப்பு இன்றியமையாதது. தமிழ் மன்னராட்சி என்று தமிழ் நாட்டில் மறைந்ததோ, அன்றே தமிழ் மொழியின் பொலிவும் மறைந்தது.

இவற்றிற்கெல்லாம் காரணம் அன்னிய நாட்டு மொழி தாண்டவமாடுவதுதான். நம் தமிழர்கள் தம் தாய் மொழியை வெறுத்துப் பிறமொழியைக் கற்பது; ஒருவன் தன் தாயை அவமதித்துப் பிறன் தனக்குக் கொடுக்கும் செல்வத்தின் பொருட்டு வேறொருத்தியைத் தாயென்பதற்கு ஒப்பாயிருக்கிறது. இன்னும் சிறிது காலத்தில் தமிழ் மொழியானது குன்றி, நம் நாட்டுக்குரியது ஆங்கிலமே என்கிற நிலமை ஏற்பட்டு விடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இனித் தமிழராகிய நம்மவர்களுக்குள் நமது மொழியையே யல்லாது பிற மொழிகளைத் தலை யெடுக்க விடக்கூடாது என்ற வீர உணர்ச்சி ஏற்பட வேண்டும். நாம் நம் மொழியைத் தவிர்த்துப் பிறமொழியை விரும்புவதுபோல், எத்தேசத்தவர்கள் தம் தாய் மொழியை நீத்துப் பிறமொழியைக் கற்க முன் வருகின்றனரென்று எண்ணி யறிய வேண்டும். அன்னியர் தம் ஆட்சியில் தம் மொழியைப் பரவச் செய்ய வேண்டும், பிறமொழியைத் தாழச் செய்ய வேண்டுமென்று எண்ணுவார்களே யல்லாது நம்மைப் போல எண்ணார்.

இன்னும் சில வள்ளல்களும் தமிழ் மொழியை எவ்வளவு ஆதரித்திருக்கிறார்களென்றும், அது முன்னேற எவ்வளவு செல்வத்தைச் செலவு செய்திருக்கிறார்களென்றும் நாமறிகிறோம். பண்டைக் காலத்தில் தமிழை யுணர்ந்த பாரி, காரி, ஆய் முதலான வள்ளல்களும் கீரன், நக்கீரன், பொய்யாமொழி போன்ற புலவர்

களும் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்குக் காரணரா யிருந் தனர். அத்தகையோர் தற்போதில்லா திருப்பதும் தமிழ் மொழின் தாழ்ச்சிக்குக் காரணமாகின்றது. மற்றெல்லா மொழிகளையும் விடத் தமிழ் சிறந்ததெனப் பிறநாட்டாருஞ் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

இன்னும் கம்பனும் இளங்கோவும் கவிமழை பெய்து மக்கள் வாழ்வு வளம்பெற உழைத்த இத்தமிழ் நாட்டில், பாண்டிய மன்னர் மதுரை நகரில் முத்தமிழை முறையுடன் வளர்க்க, மூன்று சங்கங் களை ஏற்படுத்தித் தமிழ்த் தாய்க்குப் பெருமை யளித்ததால் தெருக் கள்தோறும் தமிழ் முழங்கிக் கொண்டிருந்தது. அந்நிலை இப்போது அறவே யற்றுப்போய் தமிழ் பேசுவது அவமானமென்றும், தமிழ் பயிலுதல் வீணென்றுங் கருதும் நிலையில் வந்துவிட்டது. பண்டைய தமிழ் மன்னர்களிலும் பெரும்பாலோர் புலமை பெற்றிருந்தனர். ஒரு புலவன் ஒரு அரசனை யடைந்தால் அவன் அவரை எதிர் கொண்டழைத்து, ஆசனமளித்து, வினவி சன்மானங்க ளளித்துப் புலவர் புறப்பட்டால் தானும் எழுடி பின்தொடர்ந்து வாகன மளித்து, வழி செல்லச் செய்தது, பாண்டிய அரசர் தமிழின்பால் வைத்திருந்த பெருமதிப்பை விளக்குகிறது. அந்நிலை தற்காலத்து அறவே யற்றுப் போயிற்று.

அன்றியும் ஜி. யூ. போப் என்னும் ஐரோப்பியப் புலவ ரொருவர் தமிழைக் கற்றுணர்ந்து அதன் பெருமையை விளக்கி யுள்ளார். இவர் குறளையும் நாலடியாரையும் திருவாசகம் மற்றும் நமது சைவ சித்தாந்த சாத்திரங்களையும், தம் மொழியில் மொழி பெயர்த்து அவற்றைத் தம் மக்களுக்கு விளக்கி யிருக்கிறார். இன்னாரின் செய்கையை யுணர்ந்தேனும் தமிழர் தமிழைக் கற்க முன்வராதிருப்பது ஒரு பெருங் குறையே. தமிழை யாதரித்த பண்டைக் காலப் புலவர்கள் இன்ப ரசம் ததும்பும் பல காவியங் களை எழுதி யிருக்கின்றனர். அத்தகையோர் தற்போது எவருமிலர்.

அன்னிய மொழியாகிய ஆங்கில ஞானம் அரசியல் விஷயங் களில் இன்றியமையாததாய் அமைந்து போனமையாலும், அக்கல்வி மக்கள் அரசாங்க உத்தியோகம் வகிக்க அவசியமானதாய் ஏற்பட்டதாலும், அன்னிய மொழியைக் கற்றலில் ஏற்படுஞ் சிரமத்தாலும், நம் தாய் மொழியை நம் மக்கள் கைவிட்டனர். இவைகளை யெல்லாங் கூர்ந்து நோக்கின் தமிழின் பெருமை நன்கு விளங்குவதோடு, இக்காலத்திய அதன் சீர்குலைவும் தெற்றென விளங்குகிறது.

# ‘இருவர் மரணத்திற்கு......!’

[கம்பதாஸன்]

இடியொடு மின்னல் கலந்தே—ஊர்
ஏரி குளங்கள் நிரப்பிச்
சடசட என்று மழைதான்—பெய்யச்
சாத்தூர் புறத்துள்ள சேரிக்
குடிமகன் குப்பனென் பானும்—தன்
குடிசைக்குள் ஏங்கி இருந்தான்
துடித்திடும் தன்மனை யாட்டி—கொண்ட
துயரொலி கேட்டு நடந்தான். (1)

அம்மா துயர்தவிர்ப் பீரே—என
தன்புடைப் பெண்டாட்டி இன்னுள்
வெம்பிடு கின்றனள் பிள்ளை—பெறும்
வேதனைப் பட்டிடு கின்றாள்
செம்மை மருந்து கொடுக்க—அங்குச்
சீக்கிர மேவர வேண்டும்
கைம்மாறு யாதொன்றும் இல்லை—உமை
கடவுளென்றே தொழு கின்றேன். (2)

ஊருக்குழைத் துழைத் தென்றும்—நான்
உமியினைப் போற்கிடக் கின்றேன்
ஆருக்கடா தர்மம் வேண்டும்—பணம்
ஐந்து தந்தால்வரு வேன்நான்
சார மில்லாத வெருங்கை—முழுந்
தானிடு மோஎன் மருந்தின்
சீரென்ன பேரென்ன போடா—இங்குச்
சித்திரம் பேச வந்தாயோ. (3)

சாமிஇக் குப்பன் வணக்கம்—கொஞ்சம்
தயவு புரிந்திட வேணும்
பூமியை நானுழு துங்கள்—கடன்
போக்கிடு வேனிது மெய்மை

தாமதி யாமற் பணந்தான்—ஐந்து
தந்திட வேண்டு மென்றுண்டே
சேம மருத்துவக் கூலி—தந்து
தேற்றுவீர் என்மனை யாளே. (4)

வெள்ளியடா இன்று போடா—இன்று
வேற்றவர்க் கொன்றும் கொடேன்யான்
கொள்ளிக்கும் சல்லி கொடேனே—முன்னோர்
கொண்ட வழக்கத்தை மீறேன்
தள்ளிடுவாய் அந்தப் பேச்சை—வேறு
சங்கதி உண்டெனில் கூறு
சொல்லிவிட்டேன் என்று சொல்லித்—தொந்தி
தொட்டுருட் டிக்கொண்டு சென்றான். (5)

மூட வழக்க நெருப்பே—மிக
முண்டெரிந் திட்டதி னாலே
ஆடலடங் கிற்றோர் தேகம்—சென்
றடைந்ததுவே சுடு காட்டில்
தேடினன் குப்பனை ஆண்டை—அவன்
சேதியும் எங்கணு மில்லை
மேடையிற் குந்திய ஆண்டை—தொந்தி
மெல்லப் பிசைந்திட லானான். (6)


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| தடவை 1-க்கு ஒரு பக்கத்திற்கு | | ரூ. 20. |
| ,, ,, | ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத்திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
'தமிழரசு'
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.




## உண்மை உயர்வளிக்கும்

[வேப்பேரி, கே. பி. துரைசாமி]

ஒரு சன்யாசி காட்டு வழியாகப் போய்க் கொண்டு இருந்தார். ஒரு திருடன் அவரை வழி மறித்து உன்னிடம் உள்ள பொருள்களை எல்லாம் கொடுத்து விட்டுப் போ என்றான். சன்யாசி அவன் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டச் சொன்னார். அவர் தன் கையை மூடிக்கொண்டு இருந்து விட்டு, அவன் கையில் ஏதோ போடுவது போலக் காட்டித் திறந்தார். உடனே என்ன ஆச்சரியம் திருடன் கை நிறையப் பவுன்கள் விழுந்தன.

திருடனுக்கு அவரிடம் பயமும், பக்தியும் ஏற்பட்டது. சுவாமி எனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும் என்று கெஞ்சினான். சன்யாசி அப்பா நீ இந்தத் திருட்டுத் தொழிலை விட்டு விடு என்றார். திருடன் ஐயோ எனக்கு வேறு தொழில் ஒன்றும் தெரியாதே இது தான் என் ஜீவனம். என்ன செய்வேன் என்றான். சன்யாசி அப்படியானால் பொய் சொல்லாமல் இரு என்றார். திருடன் அப்படியே என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

திருடனுக்குச் சன்யாசி கொடுத்த பவுன்கள் எல்லாம் செலவாகி விட்டது. ஒருநாள் இரவு திருடப் புறப்பட்டான். ஒரு பெரிய தெரு வழியாகப் போனான். அந்த ஊர் ராஜா நகர் சோதனைக்காக மாறு வேஷத்தோடு எதிரே வந்து கொண்டு இருந்தார். திருடனைப் பார்த்து விட்டார். நீ யார்? என்று ராஜா கேட்டார். திருடன் ஐயா நான் ஒரு திருடன் என்றான். ராஜாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. திருடன் இப்படி உண்மை பேசுவானா! என்று யோசித்தார். பிறகு இன்னும் பார்ப்போம் என்று எண்ணி, எங்கே திருடப் போகிறாய்? என்று கேட்டார்.

திருடன்:—ராஜா அரண்மனையில்.

ராஜன்:—நானும் கூட வரட்டுமா?

திருடன்:—இஷ்ட மிருந்தால் வா.

ராஜன்:—திருடினால் எப்படி பங்கு?

திருடன்:—ஆளுக்குப் பாதி தான்.

ராஜன்:—சரி என்னிடத்தில் எந்தப் பூட்டுக்கும் சாவி இருக்கிறது. அரண்மனையில் எல்லா இடமும் எனக்குத் தெரியும். உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன். ஆனால், நான் உள்ளே வர மாட்டேன்.

திருடன்:—வேண்டாம். வெளியே காவல் இரு.

இருவரும் அரண்மனையை அடைந்தனர். ராஜா சாவிக் கொத்தைத் திருடனிடம் கொடுத்தார். திருடன் சப்தமின்றி, கதவுகளைத் திறந்து உள்ளே சென்றான்.

திருடன் பொக்கிஷ சாலையை அடைந்தான். சொற்ப விலையுள்ள நகைகளைத் திருட அவனுக்கு இஷ்டமில்லை. எல்லாவற்றையும் சோதித்தான். கடைசியில் ஒரு பெட்டியில் மூன்று ரத்தினங்கள் இருப்பதைப் பார்த்தான். அவைகளின் பிரகாசத்தால் அவைகளை விடச் சிறந்தவை இல்லை என்று அறிந்தான். பிறகு மூன்றையும் எடுத்தால், தானும் மற்றத் திருடனும் சரியாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாதே என்று எண்ணினான். அதனால் இரண்டு இரத்தினங்களை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற எதையும் தொடாமல், இருந்தவை இருந்தபடியே விட்டு விட்டு வெளிவந்தான்.

ராஜன்:—என்ன எடுத்து வந்தாய்?

திருடன்:—விலையுயர்ந்த மூன்று இரத்தினங்கள் இருந்தன. நமக்குள் பங்கிட்டுக் கொள்ள முடியாது என்று, ஒரு இரத்தினத்தை வைத்து விட்டு இரண்டு எடுத்து வந்தேன். இந்தா உனக்கு ஒன்று என்று ராஜாவிடம் ஒன்றைக் கொடுத்தான்.

ராஜாவினுடைய வியப்புக்கு அளவே இல்லை.

ராஜன்:—உன் பெயர், இருப்பிடம் இவைகளைச் சொல் மறுபடியும் சந்திப்போம் என்றார்.

திருடன் அவ்வாறே சொல்லி விட்டுப் போனான்.

பொழுது விடிந்தது. ராஜா அவசரமாக, மந்திரி முதலானவர்களை அழைத்து, நேற்று இரவு பொக்கிஷ சாலையில் ஏதோ சப்தம் கேட்டது. அதன் காரணத்தை அறிய வேண்டும், என்று கூறி மந்திரி, நீர் போய் எல்லாம் சரியாய் இருக்கிறதா, பார்த்து வாரும் என்றார். மந்திரி எல்லாம் பார்த்து விட்டு இரண்டு இரத்தினங்கள்

இல்லாமலிருப்பதை அறிந்தான். மூன்று இரத்தினங்கள் இருந்தது அவனுக்குத் தெரியும். யாரோ இரண்டு திருடி இருக்க வேண்டும். இந்த ஒன்றையும் நாம் எடுத்துக் கொண்டு மூன்று இரத்தினங்களும் இல்லை என்று சொல்லி விடலாம் என்று நினைத்து அப்படியே செய்தான்.

உடனே ராஜா திருடனுடைய வீட்டுக்கு ஓர் ஆளை அனுப்பி, அவனை அழைத்து வரச் சொன்னார். திருடன் மிக்க பயத்தோடு வந்தான்.

ராஜன் அவனை மரியாதையோடு அழைத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்து, அப்பா நீ யார்? உன் தொழில் என்ன? என்று கேட்டார்.

திருடன்:—நான் ஒரு திருடன்.

ராஜன்:—நீ சமீபத்தில் எங்கேயாவது திருடினது உண்டா?

திருடன்:—உண்டு.

ராஜன்:—எப்போது? எங்கே திருடினாய்? உன்னோடு வேறு யாராவது வந்தது உண்டா? என்ன திருடினாய்?

திருடன்:—அரசே என்னை மன்னிக்க வேண்டும். நான் நேற்று இரவு தம்முடைய அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து இரண்டு இரத்தினங்களைத் திருடினேன். என்னோடு வேறொருவர் இருந்தார். அவரிடம் ஒன்று கொடுத்தேன். இதோ என்னிடம் ஒன்று இருக்கிறது என்று கூறி அந்த இரத்தினத்தை அரசன் முன் வைத்தான்.

ராஜன்:—உன்னோடு இருந்தது யார் தெரியுமா?

திருடன்:—சரியாய்த் தெரிய வில்லை. வந்த ஆளின் உயரம், பருமன், பேச்சுக்குரல் இவைகளிலிருந்து தாங்கள் தான் வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் என்றான்.

ராஜன்:—ஆம் நீ சொல்வது சரியே. இதோ மற்றொரு இரத்தினம் என்று அதையும் மேஜை மேல் வைத்தார். பிறகு அவர் மந்திரியைப் பார்த்தார். மந்திரி மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்று நீங்களே எண்ணிப் பாருங்கள். அவன் அரசன் பாதத்தில் விழுந்து மற்றொரு இரத்தினத்தையும் வைத்து விட்டு நடுங்கி நின்றான்.

அரசன் உண்மை உரைத்த திருடனைத் தன் முதல் மந்திரியாக்கினான். உண்மையே உருவாயுள்ள அவனுடைய முன்னிலையில் வேறு யாரும் பொய்சொல்ல அஞ்சினர். அரசாட்சி வெகு சிறப்பாய் நடந்து வந்தது ஆகையால் சிறுவர்களே! இக் கதையினால் பொய் சொல்லக் கூடாதென்றும், உண்மையே பேச வேண்டும் என்று விளங்குகிறதல்லவா?

# நகரும் பல்கலைக் கழகம்

[மிஸ். R. T. இந்திரா, நாகூர்.]

சைனா ஜப்பானியப் போரால் பல்லாயிர மக்கள் மடிந்தன ரென்றும், மடிந்து வருகின்றன ரெனவும், தினசரி செய்தித் தாள் மூலம் நாம் அறிகின்றோம். எதிரியைத் தாக்கும் நாடிடையுள்ள மக்களும், தாக்கப்பட்ட நாடிடையுள்ளவர்களும் மன நிம்மதியின்றி என்ன நேர்ந்ததோ, இனி என்ன விளையுமோ, எப்பக்கம் என்ன தான் ஏற்பட்டிருக்கின்றதோ, என்பன போன்ற எண்ணங்களிடை மூழ்கியிருப்பர் என்பதை மறுக்கவியலா. அதிலும் சைனாவின் நிலைமையோ மிக மிகப் பரிதாபகரமானது. வீட்டை யிழந்தவர் எண்ணிறந்தோர். பிள்ளைகளைப் பரிகொடுத்தோர் பல பேர். கணவனைக் கொள்ளை கொடுத்த காரிகைகள் கணக்கற்றவராவர். ஆனால், இந்த நாட்டின் தலைவர்கள் இதர போலித் தலைவர்களைப் போன்று, முதலைக் கண்ணீர் விடுவது என்பதினை விடுத்து, உள்ளும் புறமும் ஒருமித்து நாட்டைப் பலவகையாலும் காப்பாற்றப் பாடு படுகின்றனர் என்பது அறியக் கிடக்கின்றது. கல்வியறிவோடு கூடிய மாணவ மாணவிகளே, எதிர்கால வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் என்பதினை மனத்திடைக் கொண்டு, கல்வியைக் காப்பாற்ற வேண்டி மிக மிகச் சிலாகிக்கத் தகுந்த வழிகளைப் பின்பற்றி வருகின்றனர் சீனர்கள் என்பது, மிஸ் பேல் பெக் (Miss. Bearl Buck.) எழுதிய வியாசத்தின் மூலம் தெரிய வருகின்றது.

ஜப்பான் சீனாவின் மேல் படை யெடுத்திருக்கின்றது. படை யெடுப்பின் பயனாக சீனர்கள் மேற்குப் பக்கமாக உள் நாட்டை நோக்கிச் செல்கின்றனர். இப்பிரதேசமானது தற்கால சீனர்களால் பார்க்கப் படாததும், அவர்கள் நாகரீகம் பரவப்படாததும் பழைய சைனாவிற்கு ஹிருதயம் போன்று விளங்கினதுமான இடமாகும். உலகினருக்கே அதைப் பற்றிய ஞாபகமேயில்லா ஓர் தனி யிடம். கல்வியைக் காப்பான் வேண்டி பல்கலைக் கழகங்களெல்லாம் இப்பிரதேசங்களுக்கு நகர்ந்து சென்றன, சென்று கொண்டுமிருக்கின்றன. இவ்வாறு ஒரு சில மக்கள் போவதைக் கண்டு, 'பயந்து பின்வாங்குகின்றனர் சீனர்கள்' எனக்கூறில் என்ன பொருத்தமோ! சன்கிங் (Chungking) யுனான்பு (Yunanfu) என்னுமிடங்களில் இரண்டாண்டுகளுக்கு முன்பே, நான்கி (Nanki) பல்கலைக் கழகம் அமைக்கப் படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து, வெகு பத்திரமாக எவ்விதச் சேதமுமின்றி கலாசாலை நடந்து வருகின்றது. நான்கி கலாசாலையை ஜப்பானியர் தாக்கியான பிறகு 'ஒழிந்தது மாபெரும் கல்வி மன்றம்' என நினைத்தனர். உண்மையாதெனில் பாழாக்கப் பட்டது பல்கலைக் கழகக் கட்டிடமே. இக்கழக யிடமாற்றத்தைக் கண்ட இதர நானுவிதக் கலாசாலைகளும் நகர ஆரம்பித்தன. அப்படி

யல்லால் இன்றைய சைனுவின் கல்வி நிலைமை என்ன? மாணவ மாணவிகள் தங்கள் தங்கள் சாமான்களுடன் கரடுமுரடான காட்டுப் பாதைகள் வழி நடந்தும், யுத்தத்திற்கென அமைத்துள்ள அரசாங்க மோட்டார், ரயில்களிலும் ஆயிரம் ஆயிரமாக பல நூறு மைல்கள் மேற்குப் பக்கமாகப் போவதைக் காணில் ஆச்சரியத் தோடு கூடிய வருத்தமாக விருக்குமன்றோ?

தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பாவித்து நடக்கும் இறைவனுதலால், சிற்றுயிருக்குற்ற துணை கல்வியே என்பதினை மனத்திடைக் கொண்டு, போதிய ஆதரவளித்து மாணவ குழாத் தினரை வழியனுப்புகின்றனர் சீனத் தலைவர்கள். வேறு நாட்டவ ரென்னிலோ பால் மணம் மாறு வெகு பால்யர்களையும் வெடிகுண்டுக் கிரையாக்கி, அவர்கள் இறந்துபட்டதைக் குறித்துக் கொண்டாட் டங்களும் கொண்டாடுவர். எதிர்கால நாட்டின் ஸ்தாபகர்கள் வாலிப மாணவர்களே என்பதினைக் கடைப் பிடித்தொழுகி ஆவன செய் வதை உலக சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக் கப் பட வேண்டிய தன்றோ.

ஜப்பானியர்கள் கல்வியறிவில்லாத மக்களையும் வயது சென்றோ ரையும் மடிக்கட்டும்—நாட்டைப் பிடிக்கட்டும்—கொள்ளையடிக் கட்டும் ஏன்?—பரந்த தேசமாகிய சைனுவின் எல்லாப் பகுதிகளை யும் கைவசப்படுத்தப் போகின்ருரோ? ஆனுல், தங்கள் நாட்டு இளங் சிங்கங்கள் போதிய கல்வியறிவு பெற்று உள் நாட்டில் பத்திரமாக விருக்கட்டும். எதற்காக? சைனுவை மறுபடியும் பழைய நிலைமையை விட, பதினுயிர மடங்கு சிறந்த நாடென பொலிவுறச் செய்வதற்கே என நினைத்தனர் போலும். என்னே நம் சீனர்களின் முன்னெச் சரிக்கையோடு கூடிய பரந்த நோக்கம்! அவர்கள் எண்ணம் நிறை வேற கடவுள் அருள் புரிவாருக.

---

## கட்டுரையாளர் கவனிக்க

'தமிழரசு' அன்பர்கள் அனுப்பும் கட்டுரை, வியா சம், சிறுகதை முதலியவை பெரும்பாலும் பக்கங்கள் அதிகமாகவே யிருக்கின்றன. அப்படிக்கின்றி 'புல்ஸ் கேப் பேப்பர்' (Foolscape Paper) 6 பக்கங்கட்கு அதிகப்படாமல் எழுதி யனுப்பும்படியும், அவை ஒரே பக்கத்தில் தெளிவாகவும் எழுதக் கோருகிறோம். அப்படிப்பட்ட வியாசங்கள்தான் முதன் முதலில் கவ னிக்கப்படும்.

# வறுமையும் செம்மையும்

['குமாரன்']

மழை காலம். காலை 10 நாழிகைக்கு மேல் ஆகிறது. வானத்தில் மேக சஞ்சாரம் சூரியனைத் திரை போட்டு மறைத்து விட்டது. வடந்தைக் காற்றின் சாரல் வடக்கு பார்த்த வீடுகளை யெல்லாம் பலமாகத் தாக்குகிறது.

அக்கிரகாரத்தின் கோடியில் ஒதுக்கப்பட்டது போல் தன்னந் தனியான ஒரு பழைய வீடு. பிய்ந்து தொங்கிய பழங்கூரையும், இடிந்து தகர்ந்த சுற்றுப்புறச் சுவர்களும், வெடித்து ஓட்டைவிட்டு நின்ற வாயிற்கதவும் வீட்டின் வயோதிக நிலையைக் காட்டிக் கொண்டிருந்தன. இயற்கைச் சீதோஷ்ணத்தை அந்த வீடு துளி கூடத் தாங்கக்கூடாத நிலையிலிருந்தது. எனவே மழைச்சாரல், தனிமையும், பழைமையும் கொண்டு தவித்து நிற்கும் அந்த வீட்டையும், அதிலுள்ளோரையும் பலமாக உலுக்கியது.

விஸ்வநாத கனபாடிகள் அந்தக் குளிரிலும் ஸ்நானாதி நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, திண்ணையிலமர்ந்து வேதபாராயணம் செய்து கொண்டிருந்தார். வீட்டினுள்ளே அவர் தாயார் தன் முக்காட்டை இழுத்துப் போட்டுக் கொண்டு, தெருக் கதவை ஒருக்கணித்து வைத்து விட்டுச் சிவ ஜபத்தில் ஈடுபட்டிருந் தாள். சமையலறை யோரயாக கனபாடிகளது பத்தினி தர்மசம் வர்த்தனி அம்மாள் தன் ஈரப் புடவையின் ஒரு முந்தியைக் கம்பத் தில் சுற்றிவிட்டு, குளிர் வெட வெடக்கத் தெரு வாயிற்படியைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். புதல்வி ஜெகதாம்பாள் கிணற்றங்கரைக்கு எடுத்துப் போய்த்துலக்கிய பாத்திரங்களைக் கொண்டு வந்து வைத்துவிட்டு 'என் அம்மா! இன்னும் அடுப்பு மூட்ட வில்லையா?' என்றாள். மூன்று வயதுள்ள புதல்வன் சிவ ஞானம் 'அம்மா! சாதம் போடேண்டி!' என்று தரையில் விழுந்து புரண்டான்.

வெளியிற் போயிருந்த கனபாடிகளது மூத்த புதல்வன் வீட்டி னுள்ளே நுழைந்தான். பெரியவரும் பாராயணத்தை முடித்துக் கொண்டு எழுந்து உள்ளே வந்தார். பாட்டி ஜபத்தை முடித்து ருத்திராக்ஷ மாலையைக் கண்களில் ஒற்றிக் கொண்டு எழுந்தாள். இவர்கள் எல்லாரும் இப்படி எழுந்து வந்ததைக் கண்ட சிவஞானம் தன் அழுகையை நிறுத்தி அவர்களைப் பார்த்தான். மற்ற எல்லோர் நாட்டமும் அதே சமயத்தில் மூத்த புதல்வன் சந்திரசேகரன் மீது விழுந்தது.

'ஹூம்! ஒண்ணும் பிரயோஜன மில்லை. நான் எவ்வளவு வேண்டியும் அவர் கேட்பதாயில்லை. முடியாது என்று ஒரேயடி

யாய்ச் சொல்லி விட்டார்.......' என்று அவன் உதட்டைப் பிதுக்கினன்.

'உம். அவரைச் சொல்லிப்பயன் என்ன? எல்லாம் நம்முடைய காலமல்லவா?........' என்ருள் பாட்டி விசனத்தோடு.

'இப்படி அந்த மனுஷன் ஈவிரக்க மில்லாமற் சொல்லிவிடுவாரென்று நான் நினைக்கவேயில்லை! பகவான் நம்மை இப்படி சோதிக்கிருரே!' என்ருர் கனபாடிகள் மனமுடைந்தவராய்.

அவர் பத்தினி வாய்திறக்க வில்லை. ஆனல், அவள் கன்னங்களில் உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் அவள் பேச்சை விட உருக்கம் வாய்ந்தனவாகக் காணப்பட்டன. சிவஞானம் தன் தாய் கண் கலங்கி நிற்பதுகண்டு தானும் அழலானன். பெரியவர் முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்தார். பாட்டி 'சர்வேசா! இது என்ன காலமடா அப்பா!' என்று முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

வெளியூருக்குப் போய் வந்த அலுப்பாலும், பசியாலும் சந்திரசேகரன் அப்படியே கண்ணயர்ந்தான்.

பத்து வருஷங்களுக்கு முன்னல் அந்தக் குடும்பத்தாருக்கு இருந்த செல்வமும், செல்வாக்கும்—காட்டூர் கனபாடிகள் என்ருலே அந்தப்பக்கத்தில் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனல், கால தேவதையின் கொடுமைக்கு ஆளான குடும்பங்களில் இதுவும் ஒன்ருகிவிட்டது. ஒரு காலத்தில் அவர் தயவை எதிர் பார்த்து நின்றவர்கள் பலர், இப்போது சீருஞ் செல்வமும் தழைக்க வாழ்கின்றனர். அவர்களில் யாரும் தங்கள் பழைய நிலையை நினைத்துக் கனபாடிகளுக் குதவ முன்வரவில்லை.

வீடு இடிந்து விழுந்தாலும் விழட்டும், மேற்கூரையை வரிச்சுகள் உள்பட வருணனும், சூரியனும், வாயுமாகப் பங்கிட்டுக் கொள்ளட்டும். ஆடிக்கொண்டிருக்கும் நிலைக்கதவுகள் தடாலென்று நிலத்தில் சாயினுஞ்சாயட்டும். ஆனல், இந்தக் குழந்தைகளுடன் எத்தனைகாலம் பசி யென்றும் பட்டினி யென்றும் வாடிக்கிடப்பது?

சந்திரசேகரனுக்கு வயது 23. கிராமப் படிப்பை முடித்துக் கொண்டு கொஞ்சகாலம் சும்மா இருந்தான். பிறகு 2 கல் தூரத்திலுள்ள வெள்ளனூரில் செட்டியார் ஒருவரிடத்தில் கணக்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தான். மாதச்சம்பளம் 5 கல நெல்லும் 3 ரூபாய் பணமும். கனபாடிகள் 4 பிள்ளைகளுக்கு வேத அத்தியயனம் செய்யக் கற்பித்துக் கொண்டு வந்தார். அதற்கு 4 கல நெல் கிடைத்தது. ஆனல், திடீரென்று இரண்டு வித வரும்படிப் பாதைகள் மூடப்பட்டு விட்டன.

செட்டியார் செலவைச் சுருக்க எண்ணி எல்லாவற்றையும் தானே கவனிக்கப் போவதாகக்கூறி சந்திரசேகரனை வீட்டுக்

கனுப்பி விட்டார். அதே காலத்தில் வேதாத்தியாயனம் செய்த பிள்ளைகள் லௌகீகார்த்தமான இங்கிலீஷ் படிப்புக்காக, பட்டணம் சென்று விடவே கனபாடிகளது சம்பாத்யமும் நின்றது.

சந்திரசேகரன் வேலையினின்று நீக்கப்பட்ட பிறகும் இரண்டொரு சமயம் செட்டியார், அவர்கள் குடும்பத்திற்குப் பொருள் உதவி செய்துள்ளார். இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு தான் சந்திரசேகரன் அன்று காலையில் அவரிடம் போயிருந்தான். அதனுல் தான் அன்று எல்லோரும் அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

செட்டியார் தன்னுல் இனி ஒரு மணி நெல்லும் கொடுக்க முடியாதெனக் கூறிவிட்டார். இந்தக் கண்டிப்பான பதில் சந்திரசேகரனைத் திடுக்கிடச் செய்தது. 'எல்லாம் நம்முடைய காலவித்தியாசம்' என்றெண்ணிக் கொண்டு திரும்பிவிட்டான்.

அக்கிரகாரத்திலிருந்து யாரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. வறுமையின் உச்சநிலையில் அந்த எளிய குடும்பம் இன்று தத்தளித்தது. 'ஐயோ! குழந்தைகள் முகத்தைப் பார்த்தாவது பகவான் மனம் இரங்கலாகாதா?' என்று விசனித்தாள் பாட்டி.

அதே சமயம் சாரலுக்காக மூடப்பட்டிருந்த கதவு திறக்கப்பட்ட ஓசை கேட்டு அனைவருந் திரும்பிப் பார்த்தனர்.

வாசற்படியில் ஒரு இளமங்கை 15, 16 பிராயத்தினள் நின்ருள்.

'அம்மா! கனபாடிகள் வீடு இது தானு?'

'அம்மா! யாரம்மா நீ?' என்ருள் பாட்டி.

அந்தப் பெண்பாவை பதில்கூருது பின்புறந்திரும்பி 'இது தான். உள்ளே கொண்டு போய் இறக்கிவை' என்ருள். ஒரு குடியானவன் குனிந்தபடி உள்ளே நுழைந்து தன் தலையில் சுமந்து வந்த ஒரு பெரிய கூடையை இறக்கிவைத்தான். குழந்தைகள் ஆவலாய் ஓடிவந்து கூடையிலிருப்பது என்னவென்று கவனித்தன. கனபாடிகளும், அவரது தாயாரும் விஷயம் புரியாமல் எழுந்து வந்து குடியானவனையும், கூடையையும் மாறி மாறி நோக்கினர். தர்மசம்வர்த்தனி அம்மாள் மட்டும் தெருவாயிற்படியில் நிற்கும் பெண் மணி யார் என்பதையறிய ஆவலோடு எழுந்து வந்து 'அம்மா! உள்ளே வா' என்ருள்.

அவள் உள்ளே வந்ததே, பாட்டி 'இதெல்லாம் என்ன?' என்று ஒரே கேள்வியாகக் கேட்டாள். அவ்வடிவழகி சொன்னுள்:-

'அம்மா! உங்கள் வீட்டுப்பிள்ளை செட்டியாரிடம் காலையில் வந்தபோது அவர் கோபத்திலிருந்ததால் முடியாது என்று கூறி

விட்டார். நீங்கள் அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள். பிறகு, நான் சாவதானமாக அவரிடங் கூறியதே அவர் இதைக் கொடுத்து வரும்படி என்னை அனுப்பினர்.'

பத்து நாளைக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களும் கூடையிலிருந்தன. 'குழந்தாய்! நீயும் உன் பெற்றோர்களும் ஒரு குறைவுமில்லாமல் க்ஷேமமாய் வாழவேண்டும்' என்று பெரியவர் ஆசீர்வதித்தார். 'நீ மகராஜியா யிருக்கணும். உன் குடும்பம் கனைகோத்திரமா நன்னு வாழணும்' என்று பாட்டி வாழ்த்தினள். மற்றவர்கள் தங்கள் நன்றியைப் பார்வை மூலம் வெளிப்படுத்தினர். தர்மசம்வர்த்தனிக்கு மட்டும் அந்தப் பாவையிடத்தில் ஒரு அலாதியான பிரீதி உண்டாயிற்று.

செட்டிப்பெண் வீட்டிற்குப் போகப் புறப்பட்டாள். 'இரு அம்மா! சமைக்கிறேன். சாப்பிட்டுப் போகலாம்' என்றார்கள் மாமியாரும் மருமகளும். 'ஆமாம் அக்கா! அம்மாளும், நானும் சுருக்கச் சமைச்சுடரோம். நீ சாப்டுட்டுப் போகலாம்' என்றாள் ஜெகதாம்பாள் ஆசையோடு.

'பரவாயில்லை. இன்னொரு சமயம் வருகிறேன்.' என்று சொல்லிப் புறப்பட்டாள் செட்டிமகள்.

'இனி எப்போ அக்கா வருவே?' என்றாள் ஜெகதாள் நெடுங்காலம் பழகியவள் போல.

இந்தச் சமயத்தில் சந்திரசேகரன் பசி மயக்கத்தினின்றும் தெளிந்தான். எழுந்து மெதுவாகத் தன் தங்கையுடன் பேசியது யார் எனக்கவனித்தான். அது கண்ட செட்டிமங்கை 'போய் வருகிறேன்' என்று சொல்லிக் கொண்டு ஓடிப்போய் விட்டாள்.

அடுப்பு மூட்டப்பட்டது. சமையல் நடந்து கொண்டிருந்தது. பாட்டி 'இன்று பகவான் நமக்குப்படி போட்டு விட்டார். கடவுளை நம்பினோர் கைவிடப்படாரல்லவா!' என்று பகவத்தியானத்திலமர்ந்து விட்டாள். கனபாடிகளும், அவரது பத்தினியும் அச்செட்டி குமாரியைப் பற்றிப் பேசலாயினர்.

'என்ன அன்பு! என்ன அடக்கம்!' என்றார் கனபாடிகள்.

'என்ன தங்கமான குணம்! எத்தனை அழகான சிரிப்பு! முகத்தில் தேஜஸ்....சொட்டரதே!' என்றாள் பார்யாள்.

'ஜாதியில் செட்டிப் பெண்ணா யிருந்தாலும் மனுஷ்யாளிடத்தில் எத்தனை வாஞ்சை!'

'செட்டியாரின் சமயம் பார்த்து நம் நிலைமையை அவருக்குப் படும்படி சொல்லிக் கொஞ்சங்கூடப் பெருமை பாராட்டாமல்

தானுங்கூட வந்து கொடுத்துட்டு........அடடா! நாம் என்ன செய்யப் போறோம் அந்த பொண்ணுக்கு!'

'நான்கூடச் சாப்டுட்டுப் போகச்சொன்னேனே!' என்றாள் ஜெகதா.

* * *

ஒரு வாரஞ் சென்றது. மீண்டும் ஒரு கூடையில் உணவுப் பண்டங்கள் செட்டியார் வீட்டிலிருந்து வந்தன. இந்த முறை அந்தப்பெண் அணங்கு வரவில்லை. கூடை தூக்கிவந்த ஆள் ஒரு கடிதம் கொடுத்தான். சந்திரசேகரன் அதை விரித்துப் படித்தான்.

'நமஸ்காரம்! உங்கள் மூத்த புதல்வரை முன்போல் வேலை பார்க்க வரும்படி செட்டியார் எழுதச் சொன்னார். ஆதலால் உடனே வந்து வேலையை ஒப்புக்கொள்ளச் சொல்லுங்கள்.'

இது வீட்டிலுள்ள எல்லோருக்கும் எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அன்று மத்தியானத்திற்குமேல் சந்திரசேகரன் வெள்ளனூர் சென்று வேலையை ஒப்புக் கொண்டான்.

ஒரு மாத மிருக்கலாம். செட்டியார் வீட்டில் விசேஷம். அவள் பெரியவளான வைபவந்தான். கனபாடிகளும் அவர் சம்சாரமும் ஜெகதாம்பாளையும், சிவஞானத்தையும் அழைத்துக் கொண்டு செட்டியார் வீட்டிற்குச் சென்றார்கள்.

வீட்டுத் தோட்டத்தில் அவள் நின்றிருந்தாள். தாயும் மகளும் அவளைப் பார்ப்பதற்காக அங்கே சென்றனர். அவர்களைக் கண்டதே அவள் முகமன்கூறி வரவேற்றாள்.

பேச்சின் நடுவே ஜெகதாம்பாள் 'நீதான் எங்க வீட்டிலே சாப்பிடப் படாதுன்னுட்டு வந்துட்டியே அக்கா!' என்றாள்.

'இல்லையம்மா! நீங்க எல்லாரும் இஷ்டப்பட்டா எப்போதுமே உங்க வீட்டிலே சாப்பிட்டுண்டிருக்க எனக்கு ஆசைதான்' என்றாள்.

'என் அக்கா இந்தப்பொய்! நீ எப்போதுமே எங்காலத்திலே சாப்பிடறதுன்னு ஒங்க செட்டியார் எல்லாம் சம்மதிப்பாளா?'

'ஒங்க அப்பா அம்மா எல்லாரும் சம்மதிச்சுட்டா அது போதும். செட்டியார் ஒண்ணுந்தடை சொல்லமாட்டார்' என்றாள் வனிதை.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கனபாடிகள் சம்சாரம் 'நீ எங்கள் ஆத்துக்கு வர நாங்க எவ்வளவோ கோடி கோடியான்னு புண்ணியம் பண்ணியிருக்கணும்! யார் வீட்டுப் பொண்ணானால் என்ன? குணந்தானே பெரிசு' என்றாள்.

இரண்டொரு மாதங்களாயின. ஒரு தினம் மாலை அக்கிரகாரத்திலிருந்து ஒரு வண்டி புறப்பட்டது. அதில் கனபாடிகள் வீட்டு ஜனங்களிருந்தார்கள். அஸ்தமிக்குஞ் சமயத்தில் வண்டி செட்டியார் வீட்டெதிரில் போடப்பட்ட பெரிய பந்தலோரமாக நின்றது. எல்லோரும் வண்டியிலிருந்து இறங்கினர்.

பந்தலுக்குள் பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. மேளக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. செட்டியார் கனபாடிகளையும் அவருடன் வந்தவர்களையும் சந்தன தாம்பூலங்களுடன் வரவேற்றார். இரண்டு சுமங்கலிகள் சந்திரசேகரனைக் கிழக்கு முகமாக நிற்கச் செய்து ஆலத்தி யெடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முத்துவிநாயகர் ஸ்டோர்,**
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

**லங்கா குரோஸரி ஸ்டோர்,**
செட்டித் தெரு, கொளும்பு.

**தி. ஞானப்பிரகாசம்,**
122, மோகல் வீதி, ரங்கோன்.

**வி. சா. காசி செட்டியார்,**
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

**A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,**
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

**A. N. லெட்சுமணன் செட்டியார்,**
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

**A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,**
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# மங்கையர்க்கரசி

[தாழையூத்து G. தஸ்தகீர்]

மாலை 4-30 மணி இருக்கும். திருச்சி டவுன் ஹைஸ்கூலில் இருந்து கூட்டங் கூட்டமாய் மாணவர்களும் மாணவிகளும் தத்தம் கரங்களில் புத்தகங்களுடன் வெளிக் கிளம்பினர். அவர்களில் சிலர் உல்லாசமாய் உரையாடிக் கொண்டும், மற்றுஞ் சிலர் பாட விஷயமாகப் பேசிக் கொண்டும் சென்று கொண்டிருந்தனர். இவர்களின் பின் ஒரு அழகிய பேபி ஆஸ்டின் கார் பள்ளியிலிருந்து வந்துகொண் டிருந்தது. அதில் காமனும் காமுறத் தக்க மதியைப் பழிக்கும் மடமயிலாள் ஒருத்தி வீற்றிருந்தாள். அவள் மன்மத பாணங்களும் தயங்கும் தபசிகளி னுள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து, மனோ நிலையைத் தகர்த்தெறிந்து அவர்கள் தம் தவ நிலையை வெறுத்து, தத்தளிக்கச் செய்யும் வன்மையை யுடைய நங்கை மயிலாள். அவளது சிவந்த மேனியும், எடுப்பான நாசியும், கோவையை ஒத்த அதரங்களினிடையே முத்துக் கோர்த்தது போன்ற பல் வரிசையும், தன் அளகாபாரத்தைச் சீவிச் சடை பின்னித் தொங்கவிட்டிருக்கும் நேர்த்தியும், அவளணிந்திருந்த நீலவர்ணச் சேலையும் அதற்குத் தகுந்த ரோஸ் நிற ஜாக்கெட்டுடையும், அவளது இயற்கை அழகோடு அமைந்த மேனியை மென்மேலும் அழகு பெறச் செய்துகொண்டு இருந்தது. இவ்வாரணங்கைக் கண்ட இருமருங்கிலும் சென்று கொண்டிருந்த மாணவர்கள் தத்தம் விழிகளை இவளின்பால் செல்லவிட்டுக் கொண்டு திருப்ப முடியாது தயங்கினர். 'தேன் அதிகமாயுள்ள பூவில் நுழைந்த வண்டு அதை விட்டு விரைவில் வெளியே வராததைப் போல மாணவர்களின் கண்களாகிய வண்டுகள் அவளுடைய முகமாகிய தாமரையை விட்டு அகலாமலிருந்தன. பின்னர் சிறிது நேரத்தில் காரும் விசையாய்ப் பறந்து சைவ வேளாளர் வீதியில் கண்கவர் வனப்பும், அழகிய சித்திர வேலைகளுடன் அமைந்த 'சுந்தர நிலயம்' எனும் மாளிகையின் முன் வந்து நின்றது. நின்றவளவில் கலாசாலையில் நக்ஷத்திரங்கள் போன்ற பெண்களினிடையே உலவும் சந்திரன் போன்று விளங்கும் மங்கையர்க்கரசி என நாமம் பூண்ட இள நங்கை அன்ன நடை நடந்து கடிதில் வீட்டினுள் சென்றாள்.

காலமோ இளவேனில், பொழுதோ சாயங்காலம், இடமோ சுந்தர நிலயம் மாளிகையின் பின்புறமுள்ள ஆனந்தப் பூங்காவனம். மந்தமாருதம் அன்றலர்ந்த மல்லிகை முல்லை இருவாட்சி ரோஜா இன்னும் இவை போலொத்த அநேகவிதப் புஷ்பங்களின் நறுமணத்தை அள்ளி அள்ளி வீசா நிற்கிறது. விருட்சங்களின் மேல்படர்ந்து பின்னிக்கொண்டிருக்கும் இளம்புஷ்பக் கொடிகளைப் பார்க்குமிடத்து, காதலர்கள் இவ்விதமாக இணைபிரியாது இருக்க வேண்டுமென்பதை மாந்தர்களுக்கு அறிவிப்பது போலுமிருந்தன. ஆங்கு இருந்த சலவைப் பளிங்கு மேடை மீது அழகும் அறிவும் திகழ்ந்து விளங்கும் சுமார் 20 வயதுள்ள வாலிபன் ஒருவன் வீற்றிருந்தான். அவன் நாமம் உத்தம சீலன். அவனின் முகத் தோற்றம் ஏதோ ஒரு சிந்தனையில் மூழ்கி யிருப்பதைப்போல் காணப்பட்டது. அவன் அடிக்கடி கீழ்த் திசையை நோக்கிக்கொண்டிருந்தான். சற்று நேரத்தில் ஒரு வாலிபன் அவ்விடத்தை நோக்கிவந்து கொண்டிருந்தான்.

வந்தவன் சிவந்த மேனியும் அருள் நிறைந்த முகமும் வாய்ந்த அழகன். இனிமையும் எழிலும் வாய்ந்த அவன் அழகில் மன்மதனைப் போன்றவன். அதிகம் செல்வானேன்? அவன் வெளியில் செல்லும்போது அவனழகைக் கண்டு மயங்காதவர்களில்லை. அநேகங் கன்னிகைகளும் அவர்கள் வீட்டில் மறைந்து நின்று சாளரத்தின் வழியாக அவனைக் கண் குளிரக் கண்டு அக மகிழ்வார்கள். இன்னோரன்ன அழகானுபாவன் மதுரையை அடுத்த ஜெயபுரி என்னும் ஊரில் தனவந்தர்களில் ஒருவராகிய ஷண்முகம் பிள்ளை யின் புதல்வன். இவனுக்கு ஸரஸா என்ற தங்கை ஒருவள் உண்டு. இவனும் நமது உத்தம சீலனும் பால்ய சிநேகிதர்கள். முன் இருவரும் திருச்சி காலேஜில் B. A. வகுப்பில் கற்று வந்தார்கள். இப்பொழுது இவன் சென்னைக்குச் சென்று M. A. வரை கற்றுத் தேறி வந்திருக்கிறான். தன் சுற்றத்தார்களையும் சிநேகிதனையும் காணவே திருச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன் வந்தவன், தனது உயிர்த் தோழனாகிய உத்தம சீலன் அவனைத் தன் வீட்டிற்கு வரும்படி அழைக்க, அப்படியே இவன் தன் நண்பனைக் காண இவ்வெழில் அமைந்த நந்தவனத்திற்குள் பிரவேசித்தான். அவனைக் கண்ட தும் உத்தமசீலன் ஆனந்தங் கொண்டான் என்றாலும், மீண்டும் அவ னுடைய முகத்தில் விசனக்குறியே தோன்றிற்று. அதை ஒருவாறு அடக் கிக் கொண்டு ஓடிச்சென்று அவனை எதிர்கொண்டழைக்க, அவன் நெருங்கி வந்து இவன் மருங்கில் அமர்ந்து, தன் நண்பன் ஏதோ விசனமுடையவனாய் இருக்கிறானென உணர்ந்து தனது செங்கரத்தை அவன் தோளில் வைத்தான்.

'நண்பா நறுமணங் கமழும் நல்விளங்காற்று மெல்லென வீசி மனத் திற்கு ஒருவித ரம்மியத்தை ஊட்டும் இம்மாலை நேரத்தில் உன் சுந்தர வதனம் பொலிவற்று வாடியிருப்பதின் காரணமேன்' என்றான்.

உத்:—அன்பா! எவ்விதமிருந்தால் தான் என்ன?' (கண்ணீர் வடி கின்றது)

வந்தவன்:—என் அழுகின்றனை? உனக்கு ஏற்பட்ட விபத்து யாது? தயை கூர்ந்து ஒளிக்காது புகல்வாயாக. என நவின்று தன் கரத்தால் அவன் கண்ணீரைத் துடைத்தான்.

உத்தமசீலன் தன் நண்பனின் இரு கரங்களைப் பற்றியவாறே,

'மங்களநாதா! (இதே ஆங்குவந்த இளைஞனின் நாமம்.) உன்பால் யான் ஒளித்து வைத்திருக்கும் விஷயம் யாதுளது? ஒன்றுமில்லை. ஹா! நான் ஒரு அனாதையாம். தாய் தந்தை அற்றவனாம். இதோ என்னை இது காறும் வளர்த்து, சகலவித சௌகரியங்களைச் செய்துவரும் சோமசுந்தரம் பிள்ளை எனது சொந்த தந்தை அன்றாம். இவரின் சகோதரனும் எனது தந்தையுமான ஷண்முகம் பிள்ளையும் என் அன்னையும் என் இளவயதில் இச் சிறிய தந்தையின் வசம் ஒப்புவித்து, கடல்கடந்து சிங்கப்பூர் சென்று விட்ட தாயும், பின் இவரின் பத்தினியாகிய என் சிறிய அன்னை மங்கையர்க்கர சியைப் பிரஸவித்து, பிரஸவ ஜன்னிகண்டு மகளையும், கணவரையும், மண் ணில் மனங்கலங்க விட்டுமறைந்தாள் என்றும், தன் ஆருயிர்க் காதலியைப் பிரிந்தபின் வேறொரு மனைவியைக் கண்ணெடுத்தும் பாராது தன் வாழ்க் கையைத் துறவி போலாக்கி, தாயற்ற மங்கையர்க்கரசியையும் அனாதை

யாகிய என்னையும் அவரைத் தவிர ஆதரிப்பார் ஒருவருமில்லையாகையால், எங்களை செல்வமாக தன்னுயிர் போன்று வளர்த்து வருகிறார் என என் தந்தையின் பழைய நண்பராம் ஒருவர் இன்று சொலக் கேள்விப்பட்டேன். பின் என் சிறிய தந்தையிடம் உசாவுகையில் அவரும் அப்படியே என்றார், என விசனமுடன் கண்ணீர் பெருக மொழிந்தான். இவ்வுருக்கமான வசனத்தைக் கேட்ட மங்களநாதன் மனம் உருகி, 'நண்பா! நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நாடும்! என்பதற்கொப்ப வீணே மனச் சஞ்சலமடைவதினால் யாதுபயன்? ஆண்டாண்டு தோறும் அழுது புலம்பினாலும் வருவரோ உயிர்நீத்தார்.? நீ கவலைப் படாதே. கண் கலங்காதே, உன் தந்தையை விடப் பதின் மடங்காக உன்னைக் கண்ணிமை போல் காத்து, உயரிய வாஞ்சையுடன் ஆதரிக்கும் உன் சிறிய தந்தை இருக்க உனக்கொரு குறைவும் இல்லை. அவர் ஆருயிர் உள்ளம் உனக்கு எவ்வித இடைஞ்சல் வரவும் சரியாது' எனக் குழந்தையை அன்னை தேற்றுவது போல் தேறுதல் சொல்லிச் சமாதானம் செய்தான்.

அப்பொழுது ஒரு வேலையாள் ஓடிவந்து மரியாதையுடன் எஜமானர் உத்தமசீலனை அழைப்பதாகச் சொல்ல, நண்பனைக் கொஞ்சம் தாமதிக்கச் செய்து விரைவில் வருவதாகக் கூறி அவ்விடம் விட்டு அகன்றான். தனித்திருந்த மங்களநாதன் ஆங்குபூத்திருந்த நறுமலர்ச் செடிகளை உற்று நோக்கியவாறு இருக்கையில், பூங்காவிற்கு உரியாளான பூங்கோதையாம் மங்கையர்க்கரசி, ஆங்கு அழகுடன் மலர்ந்திருக்கும் புஷ்பங்களைக் கொய்வதற்காகச் செல்லுகையில், சற்றுத் தூரத்தில் பளிங்கு மேடைமீது தனிமையாக மங்களநாதன் வீற்றிருப்பதைக் கண்டு, ஒருவகை ஆனந்த உணர்ச்சி அடைந்து, தன்னையே மறந்தவளாய் ஆங்கு ஒரு செடியின் கீழ் மறைந்திருந்து தன் விழிகளால் அவனழகைப் பருகிக் கொண்டிருந்தாள். அந்த யுவதியின் கயல்விழிகள் இரண்டும் அவ்விளைஞனின் தோள்களில் ஆழ்கின்றன. மங்கையர் தம் மனத்தை வாங்குந்தடந் தோளான் அல்லவா? மங்களநாதன். மங்கையர்க்கரசி தன் மனத்திடை எழும் உணர்ச்சிகளை அடக்கச் சக்தியற்று தவிக்கிறாள். காமன் அம்புகள் அவளை வாட்டத் தொடங்குகின்றன. கூந்தல் சிதைகிறது. ஆடை நழுவுகிறது. நெருப்பில்பட்ட வல்லிக்கொடி போல் சாம்புகிறாள். காதல் தீ தாக்கத் தாக்க அவள் மிகவும் இளைக்கிறாள். மேன்மையான நறுமண மலர்கள் அவளுக்குக் கூர்மையான முட்கள்போல் சுறுக்கென்று குத்துகின்றன. அடிபட்ட அழகிய மயிலைப்போல் பூஞ்செடியின் மீது மெல்லச் சாய்கிறாள். எழுகிறாள், பின் ஒருவாறு மனத்திடங் கொண்டு சரேலென மங்களநாதனின் முன்பு பூத்திருக்கும் செடி ஒன்றின் மீது தன் செங்கரமொன்றை வைத்து, அச்செடி மறைவில் உடம்பை மறைத்தும் மறைக்காமலுமாக நின்று 'மங்களநாதரே' எனக்குயிலினுமினியமெல்லிய குரலால் அழைத்தாள். இதனைச் செவியுற்ற மங்களநாதன் அழைத்தது யாரென அறிய குரல்வரும் திசையை நோக்கினான். இவனுக்கு எதிரே அழகே உருவெடுத்தாற் போல் நம் இளமங்கை தன் மதிவனத்தை நிலத்தின் கண் செலுத்தி நாணமுடன் நிற்பதைக் கண்டான். அவ்வளவில் இவ்வழகேசன் அவளழகில் ஈடுபட்டு இமைத்த கண்ணை வாங்காது, இவளை அன்றோ உயிருக்கு உற்ற துணையாகக் கொண்டு காலங் கழித்தல் வேண்டும். அப்பொழுதன்றோ ஜென்மம் சாபல்யமாகும், என நினைத்தவாறு, 'அம்மணி

நீவிர்யாரோ?' எனக் கேட்டான். 'ஐயா நான் இம்மாளிகையின் சொந்தக்காரரான சோமசுந்தரம் பிள்ளையின் அருந்தவக் குமாரி, என் பெயர் மங்கையர்க்கரசி' என அன்பு ததும்பின மொழிகளால் சொன்னாள்.

மங்களநாதன்:—ஓகோ, மங்கையர்க்கரசி என்பது நீ தானா? நான் உன்னை இதுகாறும் சந்தித்திராவிடிலும் உன்னைப்பற்றி உன் தமையனும் என் நண்பனுமாகிய உத்தமசீலன் சொல்லக் கேள்விப் பட்டுள்ளேன். ஆனால், இப்போது நீ இவண் தனியாய் இங்குற்றதேனோ?

மங்கையர்க்கரசி! நாணம் மிகக் கொண்டு. 'அன்பரே அடியாள் பன்னெடு நாளாகத் தங்கள் நற்குணங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டு வந்தேன். பின் தங்களின் திருவதனத்தைக் காணப் பெரிதும் முயற்சித்தேன். ஒரு சமயம் நான் கலாசாலையினின்றும் வருகையில் என் தோழி தங்களைக் காண்பித்தாள். அது முதல் எனது பேதை உள்ளம் என்னை அறியாமலே......த...ங்...க...ளை...நா...டி...ன...து. இக்கணமும் நாடுகின்றது. தங்கள் திரு உருவத்தைச் சதா தியானித்துக் கொண்டு வருகையில் ஈண்டு மேடைமீது தங்களைக் கண்டேன். அளவிலா மகிழ் கொண்டேன். எனினும் காதல் தீயின் வேட்கை மிகுதியால் அடக்க வொண்ணாது தங்களின் பால் வசனிக்க வந்துற்றேன். இவ்விதம் நான் காதல் கொண்டது சாஸ்திர நீதியோ? அன்றோ? யானறியேன். எது எப்படி யிருந்தாலும் அதனைக் கவனியாது விடுத்து, அடியாளின் வேண்டு கோளை ஏற்றுக் கடைக் கணித்தருள்வீர்களாக!' எனத் தட்டுத் தடங்கலாகக் கூறி அவனது கரத்தைப் பற்றி முழங்காற்படி யிட்டாள்.

எதிர்பாரா இவ்வசனங்களைக் கேட்ட நம் மங்களநாதன் ஆச்சரிய மிக வடைந்து அவள் காதலைக் கண்டு, உவகை மிகக் கொண்டு. 'அறிவுள நங்காய்! அஞ்சற்க. இதுகாறும் எம்மாதையும் கருதாத என்னுள்ளம் கண நேரத்தில் உன் அழகில் வயப்பட்டு ஏங்குகின்றதை என்னென்பேன், ஆதலால் என் அன்பிற்குரிய காதலி' என மொழிந்து, மேல் பேச முடியாமல் தவித்து மண்டியிட்ட மங்கையர்க்கரசியைத் தூக்கி, மல்லிகைக் கொடியானது கொம்பை எப்படிச் சுற்றிக் கொள்ளுமோ, அதுபோல அவளை மார்புறத்தழுவிப் பலமுறை முத்தம் ஈந்தான். இதுவரையில் பெண்களின் சுகமே அறியாத மங்களநாதனும், ஆண்களின் ஸ்பரிசமே பட்டறியாத மங்கையர்க்கரசியும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தினார்கள். நந்தவனத்தில் வீசியது தென்றல் காற்று. இவர்களினிடையே வீசியது இன்பக்காற்று. அந்திநேரம் புஷ்பிக்கும் மலர்கள் மலர்ந்தது மணக்கின்றன. இவர்களினிடையே காதல் என்னும் புஷ்பம் மலர்கின்றது, அம்மணந்தான் வீசுகின்றது.

ஆலிங்கனத்தில் ஈடுபட்ட இக்காதலர்கள் அதிசீக்கிரத்தில் தத்தம் பெற்றோர்களைக் கலந்து, மணவினை முடிவு செய்து கொள்வோமென ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி முத்தமிட்டு, மங்கையர்க்கரசி காதல் நாயகனைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து, பின்புற வாசல்வழியாக வீட்டினுள் சென்றாள். மங்களநாதன் காவினைக் கடந்து செல்கையில் உத்தமசீலனை எதிரே கண்டு விடை பெற்று வருவதாகக் கூறி அகன்றாள்.

'சுந்தரவிலாஸ்' மேன்மாடியில் ஒரு ஹாலில் அழகிய சோப்பாக்களும் மேஜைகளும் இருந்தன. அவற்றின் ஒன்றில் சுமார் 45 வயதுக்கு மேற்படாத சோமசுந்தரம்பிள்ளை தன்கையில் தமிழரசு சஞ்சிகையை ஏந்தியவராய் வீற்றிருந்தார். அவருக்கு எதிர்முகமாக சுமார் 16 வயதுடைய மங்கை ஒருவள் சற்று விசனத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

இதனைக் கண்ணுற்ற சோமசுந்தரம் பிள்ளை திடுக்கிட்டு அவளை அருகிலழைத்து, 'மங்கையர்க்கரசி! என் செல்வி! ஏனம்மா நீ விசனமுற்றிருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது? யாராவது துடுக்காகப் பேசினார்களா? அல்லது எப்பொருளும் கெட்டுவிட்டதா? ஒன்றும் பயப்படாது சொல்லம்மா' என்று ஆத்திரத்துடன் சமாதானம் செய்தபடி வினவினார்.

இதைக் கேட்ட மங்கையர்க்கரசி தான் கொண்டிருக்கும் காதலை ஏற்றுக் கொள்வரோ அல்லது மறுப்பரோ என்ற எண்ணங் கொண்டு, தந்தையின் பாதங்களைப் பணிந்து, 'பிதாவே, நீங்கள் கேட்டபடி எனக்கு ஒன்றும் நேரிடவில்லை. எனது சகோதரரின் நண்பரும் அவருடன் காலேஜில் கல்வி கற்று வந்தவரும், அழகும் நற்குணமும் ஒருங்கு அமைந்தவருமாகிய மங்களநாதன் என்பாரை நீங்களும் அறிவீர்கள். அன்னவரை இன்று நம் நந்தவனத்தில் கண்டேன். என்னை அறியாமலேயே என்னுள்ளம் அவரை நாடிவிட்டது. என் உடலை அவருக்கு உடமையாக்கிவிட்டேன். என் காதலை அங்கீகரித்து என் காதலனை அடைய உதவி புரியுங்கள்' எனப் பரிவுடன் தன்னுள்ளக் கருத்தைப் பகர்ந்தாள். தந்தைக்கு இக்குழந்தையின்மீது அளவு கடந்த பிரியம் உண்டாகையினால், அவள் கூறிய வசனங்களைச் செவியிலேற்று மகிழ்வடைந்து அன்பு ததும்ப 'என் செல்வி! ஆம். அறிவேன் உன் காதலனை. அவன் உன்னழகுக்கேற்ற அழகன். பணக்காரன், படித்தவன், சற்குணமே ஆபரணமாகப் பூண்டவன். நான் முன்னரே, அவனே உனக்குகந்த மணவாளன் எனத் துணிந்து இது விஷயமாக அவனின் பெற்றோர்களைக் கலந்து மிருக்கின்றேன். இதற்காக நீ கிஞ்சித்தும் கலங்க வேண்டாம். உனது விருப்பத்தின்படியே அந்த உத்தமனை உனது காதலன் மங்களநாதனை, மணம் புரிந்து கொள்ளலாம். உன் மண வைபவத்துடன் அவனின் தங்கை ஸரஸாவிற்கும் உனது சகோதரன் உத்தம சீலனுக்கும் விவாகம் முடித்துக் கொள்ளும்படியாக, இதோ அவனின் பெற்றோர்கள் நிருபம் வரைந்திருக்கிறார்கள். பார் எனக் கடிதம் ஒன்றைக் காண்பித்தார். நம் மங்கையர்க்கரசிக்கோ 'பழம் நழுவி பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்ததுபோல்' அளவுகடந்த ஆனந்த மீறி, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். அதரங்களில் குறுநகை தவழ்ந்தது. அச்சமயம் உத்தமசீலன் ஏதோ காரிய நிமித்தம் அவ்வறையினுள் நுழைய அவனும் இதனைக் கேள்வியுற்று அகமகிழ் வெய்தி, நிருபம் மூலம் தன் பெரிய தந்தையின் எண்ணத்தைத் தன் நண்பனுக்கு அறிவித்தான்.

மறுவாரம் மங்கையர்க்கரசியின் திருமணப் பேச்சுக்கள் கிளம்பின. பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் சிறந்த செல்வந்தர்களாகையால், 'சுந்தர நிலையம்' எனும் மாளிகையைக் கண்களைக் கவரக் கூடிய அதியற்புத வேலைப்பாடுகளமைந்த சிங்காரிப்புக்களால் அலங்கரித்தனர்.

கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு துரிதமாய் நடந்துகொண்டிருந்தன. வேதங்களைக் கரைகண்டதாகக் கூறும் ஜோதிடப் புலிகள் பலர் தங்களை வரவேற்கவில்லை என்றே அல்லது வாஸ்தவமாகவோ சம்மந்தி வீட்டார்களிடம் சென்று இருவருக்கும் விவாஹப் பொருத்தம் சரி அல்லவென்று துர்ப்போதனை செய்ய ஆரம்பித்தனர். இரு வீட்டார்களும் காதல் மணத்தை அங்கீகரிக்கக் கூடியவர்களா யிருப்பதினால் இவர்கள் போதனை ஆங்குப் பலிக்கவில்லை. குறித்த நாளில் அதிகாலையில் சுபமுகூர்த்தத்தில் சுந்தர நிலையம் எனும் மாளிகையில் இருஜோடி மணமக்களுக்கும் அநேகம் பெரியோர்கள் ஆசீர்வதிக்க, வெகு சிறப்பாகக் கலியாணம் இனிது நிறைவேறியது. ஏழைகளுக்கு அனேக தான தருமங்கள் கொடுக்கப்பட்டன.

சம்பந்தி வீட்டார்கள் பெண்களைத் தம்முடன் அழைத்துச் செல்லும் வழக்கப்படி, மங்கையர்க்கரசியை அனுப்ப வேண்டுமென்று சோமசுந்தரம் பிள்ளையிடம் கேட்டார்கள். பிள்ளையும் இதற்கு மாறு சொல்லவில்லை. எனினும் தனது உயிர் நிலையாக இருக்கும் மங்கையர்க்கரசியைப் பிரிவது இதுவே முதல் தடவை யாதலால், அவரை அறியாமல் துக்கம் கண்களை மறைத்தது. இதை வெளிக்குக் காட்டினால் தன் மகள் வருந்துவாள் எனத் தன்னைத் தேற்றிக்கொண்டு அவளை அழைத்துத் தடவிக் கொடுத்து, 'என் கண்மணி நீ உன் மாமியார் வீடு சென்று நல்ல பெண், புத்திசாலி எனப் பெயர் பெற்று பெரியோர்களுக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து மரியாதையாய் நடப்பாயாக' என்று புத்தி கூறித் தக்க வரிசைகளோடு அனுப்பினர். அவரும் மங்களநாதனும் பிள்ளைவாளை நமஸ்கரித்துச் சந்தோஷ விடை பெற்று அகன்றார்கள்.

சோமசுந்தரம் பிள்ளை தன் புதல்வி தன்னை விட்டுப் பிரிந்தாள் என்ற வருத்தத்தை, உத்தமசீலனும் அவன் பத்தினி ஸரஸாவும் தம்முடன் இருப்பதைக் கண்டு ஒருவாறு தவிர்த்து வந்தார். இதனிடையில் உத்தமசீலன் வேலைக்குப் பிரயத்தனம் செய்ததால் அதிர்ஷ்டவசமாகத் தஞ்சை ஜில்லாவில் தாசில்தார் வேலை கிடைக்கப் பெற்றுத் தன் மனைவியுடன் பிள்ளைவாளின் சந்தோஷ விடைபெற்று ஆங்குவதியலானன். சோமசுந்தரம் பிள்ளைக்குத் தன் வாழ்க்கை தனிமையாகி விட்டது என்று தனக்கு மென்மேலும் விசனம் அதிகரிக்க அதிகரிக்க மிகவும் மெலிந்து விட்டார்.

இரவு வேளை மணி 9-க்கு மேலிருக்கும். நிசப்தம் குடிகொண்டிருந்தது. பூர்ணச்சந்திரன் தன் கிரணங்களை ஒளிவுடன் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறன். மங்களநாதனின் மாடியில் ஓர் அறை மின்சாரத் தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அங்கே ஓர் அழகிய சோபாவின் மீது நமது மங்களநாதனும் மங்கையர்க்கரசியும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். அவாகள் சம்பாஷணை வருமாறு மங்களநாதன்:—காதலி உன்னிடம் ஒரு விஷயம் கூறத் துணிந்தேன். அதாவது வருகிற திங்களன்று நான் மேற்படிப்புக்காக லண்டனுக்குப் புறப்பட ஏற்பாடாயிருக்கிறது. நான் அங்குச் சென்று வர சுமார் இரண்டு வருஷம் செல்லும்

மங்கையர்க்கரசி:—நாதா! நீங்கள் வருவதற்கு இரண்டு வருடம் பிடிக்கும். உங்கள் திருமுகத்தைப் பார்க்க இரண்டு வருடமா செல்ல

வேண்டும். ஐயோ இவ்விரண்டு வருடத்தையும் நான் எவ்வாறு கழிப்பேன். இப்போதே தாங்கள் இருக்கும்போதே உங்களை ஒருநாள் பார்க்காதிருந்தால் என் நெஞ்சும் என் கண்களும் படும்வேதனையே என்னால் பொறுக்க முடியவில்லையே. இவ்விரண்டு வருடங்களையும்.................ஹா......... நினைக்கும்பொழுதே மனம் கலங்குகின்றதே இப்பிரிவை யான் எங்ஙனம் சகிப்பேன்?

மங்களநாதன்:—என் கண்மணி காதற் களஞ்சியமே கலங்காதே மனத்தைப் பதறவிடாதே. இவ்விரண்டு வருடங்களையும் இரண்டு நாட்களாக என்? உன் மேல் இருக்கும் பிரியத்தினால் இரண்டு நிமிஷமாகப் பாவித்துக் கழித்து, நான் சீக்கிரம் வந்து விடுகிறேன், என்று ஆறுதல் அளித்துச் சமாதானம் செய்தான். பின்னர் குறிப்பிட்ட நாளில் மங்களநாதன், மங்கையர்க்கரசி முதலானவர்களிடம் பிரியா விடைபெற்றுச் சென்று விட்டான்.

மங்கையர்க்கரசி சிறந்த குணம் வாய்ந்த சாமர்த்தியமுள்ள பெண்ணாகையால் புக்ககத்தில் மிகவும் கொண்டாடப்பட்டாள். சகல காரியங்களிலும் நன்கு பழகி வீட்டுக் காரியங்களைச் செவ்வையாகச் செய்து முடிப்பாள். அன்றாடமும் தன் நாதனின் பேரில் உள்ளத்தை ஓடவிட்டுக்கொண்டிருந்தாள். கணவன் பிரிந்த இரண்டொரு வாரத்திற்குள் மாமி, மாமனார் அவர்களின் உத்தரவு பெற்றுத் தந்தையிடம் வந்து சேர்ந்தாள். மங்களநாதன் சென்று மாதங்கள் ஒன்றாகி, இரண்டாகி ஒரு வருடமாயிற்று. இவ்விதம் சந்தோஷமாயும், ஒற்றுமையாயும் இருக்கும் குடும்பத்தில் ஒரு பேரிடி இடித்துப் பாதாளத்தில் தள்ளியது போலான சம்பவம் நேர்ந்து விட்டது. அந்தோ! (இன்னும் வரும்)

---

வெகு நாள் கழித்து தன் நண்பரைக் காண அவர் வீட்டிற்கு வந்து அவரைக் கண்டான்.

நண்பன்:—என்ன! வித்வான் சார்! உங்கள் குமாரர்கள் மிருதங்கம் தபேலா முதலியது கற்றுக் கொண்டார்களே ஏதாவது 'ஆபர்கள்' கிடைத்து வருமான முண்டா?

வித்வான்:—நண்பா என்ன சொல்வேன். என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இவர்கள் கற்றது முதல்கொண்டு கச்சேரிக்குப் போகவே யில்லை! இங்கேயேதான் கச்சேரி ஆர்ப்பாட்டமாய் நடக்கிறது. அதனால் பக்கத்து வீடு சலிசாய் விலைக்கு வாங்க நேர்ந்தது.

—G. R. ராஜன், குகை

ராமு:—என்னடா சோமு இப்படிக் கயற்றைக் கொண்டு வயிற்றைக் கட்டி யிருக்கிறாய்? வலிக்கவில்லையா?

சோமு:—வலி பெரிதல்ல, கடன் கொடுத்தவர்கள் வந்தால் இதற்குமேல் வலிக்கும். ஆகையால் நான் என் தாத்தா சொல்லிய படி (வயிற்றைக் கட்டினால் கடன் அண்டாது) செய்தேன்.

—A. கந்தசாமி

# நகைச் சுவை



செட்டியார்:—(ஒரு கடன்காரனைப் பார்த்து) என்ன முதலியாரே உங்கள் கடன் வெகு நாளாக நின்றுகொண் டிருக்கிறதே.

முதலியார்:—ஏன் அவ்வளவு கஷ்டப்படுகிறீர். நின்றுகொண் டிருந்தால் ஒரு நாற்காலி போட்டு உட்கார வையுமே.

—வேப்பேரி K. B. துரைசாமி

வேலைக்கார சுப்பன்:—எஜமான் உங்களை தேடி வந்தவரிடம் நீங்க சொன்னப் போலே ஊட்லே இல்லேன்னு சொன்னேன்.

ஜமீன் தார்:—போய் விட்டாராடா?

வேலைக்கார சுப்பன்:—இல்லை எஜமான். அது பொய் என்று சொன்னார். ஆனால் உள்ளே வந்து பாருங்கோன்னு சொன்னேன்.

—J. P. சங்கரன்

கருப்பன்:—நடு இரவில் டாக்டரை அவசரமாக எழுப்பினான்.

டாக்டர்:—ஏன் தூங்கும்போது தொந்தரவு கொடுக்கிறாய்.

கருப்பன்:—ஐயையோ! என் தொண்டையில் எலிக் குஞ்சு புகுந்து விட்டது.

டாக்டர்:—(தூக்கத்துடன்) அப்படியானால் ஒரு பூனையை விழுங்கிவிடு.

—N. N. லிங்கம்

தாயார்:—கண்ணே! உனக்கு அன்னத்தைப்போல் ஒரு பெண் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். உனக்குச் சம்மதந்தானா?

மகன்:—அம்மா! அது எனக்கு வேண்டாம். அது என்னைத் தண்ணீர் நிறைந்த குளங்களில் கொண்டுபோய் அமிழ்த்திவிடும்.

—V. K. சுப்பிரமணி

பையன்:—ஏனம்மா நான் என் பேனாவை உடைத்துவிட்டால் என்ன செய்வாய்?

தாயார்:—உன்னை நன்றாய் அடித்துக் கையுங் காலும் கட்டி ஒரு அறையில் தள்ளிப் பூட்டிவிடுவேன்.

பையன்:—அப்படியானால், அந்த அறையில் அப்பா என் பேனாவை உடைத்துவிட்டு முழித்துக்கொண் டிருக்கிறார். போய் ஒரு கை பார்.

—D. C. கண்ணன்

ஐயர்:—(தன் மனைவியைப் பார்த்து) என்னடீது எப்போ பார்த்தாலும் இந்தச் சண்டைதானு? எங்கே உன் மாட்டுப் பொண்ணு?

மனைவி:—எல்லாம் உங்கமாட்டுப் பொண்ணுதான் நானென்ன பண்ணுவேன்? அந்தச் சனியன் வீட்டிலே கால் வைத்ததிலிருந்து இந்தக் குஸ்திதான்.

ஐயர்:—(தன் மகனைப் பார்த்து) என்னடா இது. நித்தியம் விடிந்தால் இதுவே பெரிய தொல்லையாய்ப் போச்சு. என்பேரில் பிசகுடா. உன்னை ஒரு பிரம்மச்சாரியாய் நிறுத்தி யிருந்தால் எனக்கு இந்தத் தொந்தரவு இல்லையடா.

மகன்:—இந்த யோசனையைத் தாத்தாவே பண்ணியிருந்தால் ஒருத்தருக்கும் ஒரு தொல்லையும் இல்லை. —S. V. K. சபாபதி

அசிரியர்:—அடே ராமா! ஏண்டா வெறுமனே பேசறே? ஏறு பெஞ்சுமேலே.

ராமன் (மாணவன்):—பெஞ்சுமேலே ஏறிக் கொண்டுதான் பேச வேண்டுமா சார்? —V. சுவாமிநாதன்

காதலன்:—கண்ணே, நம்மிருவருக்கும் ஏற்பட்டிருக்கும் காதலைப்பற்றி நீ யாரிடமும் சொல்லாதே.

காதலி:—அது முடியாத காரியம். சோமுவிடம் மட்டும் சொல்லித்தான் ஆகவேண்டும். 'எந்த மூடனும் உன்னை நேசிக்க மாட்டான்' என்று முன்பு என்னை ஏளனம் செய்தான்.

—T. S. சிவநேசன்

தெருவில் ஓர் பையன் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தான். அப் பம்பரம் தெருவில் சென்று கொண்டிருந்த ஓர் பெரியவர் பக்கத்தில் விழுந்தது.

பெரியவர்:—அடே ஆளைப் பார்த்துப் பம்பரத்தைக் குத்து இனிமேல் இப்படிச் செய்தால் அடிப்பேன்.

பையன்:—சும்மா பக்கத்தில் விழுந்ததற்கே இந்தப் போடு போடுகிறீர்களே. ஆளைப் பார்த்து மேலே குத்தினுல் சும்மாவா விடுவீர்கள்? —S. ரத்தினம்

(ஒரு ஸ்டூடியோவில் ராமாயணம் ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கையில்,)

டைரக்டர்:—அடே சொக்கனுதா! (வேஷம் தரித்த) ராமர் என்னடா செய்கிறுர்? சீக்கிரமாக வரச் சொல்.

சொக்கனுதன்:—ராமர் ராவணனுக்கு மீசை ஒட்டிக்கொண்டிருக்கிறுர். —வேப்பேரி K. B. துரைசாமி

இன்ஸ்பெக்டர்:—நீ என்ன சாதி.

கிராமப் பெண்:—என் புருஷனுக்குப் பெண்சாதி.

இன்:—உன்னுடைய வர்ணம்?

கிரா:—என் தலைமயிர் மட்டும் கருப்பு. ஆனால் என் உடம்பு கொஞ்சம் கருப்பு.

இன்:—அட பைத்தியமே, உன்னுடைய குலமென்ன?

கிரா:—குலம், கோத்திரம் எதற்குக் கேக்குறிங்கோ இந்தக் காலத்திலே. —G. கண்ணுசாமி கிராமணி

பையன் அழுதுகொண்டு வருவதைக்கண்ட ஒரு பெரியவர் ஏனப்பா அழுகிறாய்.

பையன்:—என்னுடைய பூனை நேற்று இறந்து விட்டது தாதா.

பெரியவர்:—நேற்றையதினம் என்னுடைய தாயார் இறந்தாளே அதற்கு நான் அழவில்லையே.

பையன்:—உங்களுடைய தாயாரை நீங்கள் குழந்தைமுதல் வளர்த்து யிருந்தால் தெரியும்........... —V. N. பெரியசாமி

மனைவி:—உங்களைத்தானே! ஏன் இப்படி இரண்டு கைகளையும் தலையில் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்? உடம்புக்கு என்ன! தலைவலியா?

புருஷன்:—இல்லேடி அசடே! நான் நாளைக்கு சினிமாவிலே சேரப் போறேன். சோகரஸமாக ஆக்ட் செய்ய இப்போது தயார் செய்துகொண்டு பார்க்கிறேன். போடி உள்ளே! இங்கே வராதே!

—N. பஞ்சாபகேசன்

முத்தம்மாள்:—தம்பி! இனிமேல் நீ சிங்காரத்துடன் கேலியாக விளையாடக்கூடாது. அவளை உனது தங்கைபோல் பாவிக்கவும்.

துரைராஜ்:—ஆமாம் நன்று யிருக்கிறது வரிசை! உங்களுக்கு நான் தம்பி, உங்கள் மகளுக்கு அண்ணனா ஆவது! காலம்தான் கெட்டாலும்! வரிசையுமா கெடவேண்டும்!

—S. பெரியதுரை பல்லடம்

தாய்:—மணி! என்ன விளையாட்டு விளையாடுகிறாய்?

மணி:—மோட்டார் விளையாட்டு. நான்தான் டிரைவர். தம்பி தான் மோட்டார்.

தாய்:—சற்று நேரத்திற்குமுன் தம்பி வாயில் என்ன ஊத்தினாய்?

மணி:—பெட்ரோல். பெட்ரோல் ஊற்றினால்தானே மோட்டார் ஓடும்! —P. கதிர்வேல்

# என் நண்பன் ராமச்சந்திரன்

[சி. குழந்தைசாமி]

என் நண்பன் ராமச்சந்திரனுக்கு இருபது வயதிலேயே 'அதிகப் பிரசங்கி'ப் பட்டம் கிடைத்து விட்டது. அதற்குக் காரணம் அவனுடைய நடத்தையே. யாரா யிருந்தாலும் எதிர்த்துப் பேசுவான்; எல்லாம் தன் இஷ்டப் படியே நடத்துவான்; பிறர் என்ன சொன்னாலும் கேட்க மாட்டான். எங்களூரில் ராமச்சந்திரனுக்கு நான் ஒருவன் தான் நண்பன். ஆனால், அவனைப் போல் எனக்கும் 'அதிகப் பிரசங்கி'ப் பட்டம் கிடைக்க வில்லை. என்றாலும் என்னைப் பற்றிப் பலரும் பலவிதமாகச் சொல்லிக் கொண்டார்கள். 'ஏது இந்தப் பயலுக்கும் வரவர புத்தி கெட்டுப் போயிட்டுது' என்பார் என் தகப்பனார். 'அந்த அதிகப் பிரசங்கியோடே சேராதே, அவன் சொல்வதொன்றையும் கேளாதே என்று எத்தனை முறை நான் உன்னிடம் சொன்னேன்; நீ கொஞ்சங்கூட என் வார்த்தையை லக்ஷியம் பண்ணுவதுண்டா?' என்பாள் என் தாய். 'கோயில் குளத்துக்குப் போகாமல், கீழ்ச்சாதி வீட்டிலெல்லாம் சாப்பிட்டுக் கொண்டு திரியும் ராமச்சந்திரனோடு என்ன நட்பு உங்களுக்கு?' என்று இலக்கணமாகச் சினந்து கொள்வாள் என் மனைவி. 'என்ன சார் நீங்களும்! அந்த ராமச்சந்திரனைக் கட்டிகொண்டு அழுரேளே!' என்பார் நண்பர் நாராயணய்யர். ஆயினும், நான் இவர்களின் வார்த்தைகளை லக்ஷியம் பண்ணாமல் ராமச்சந்திரனோடு நெருங்கிப் பழகிவந்தேன். ஏனென்றால் மற்றவர்களுடைய கண்ணுக்கு ராமச்சந்திரன் ஓர் அதிகப் பிரசங்கியாகக் காணப் பட்டாலும், நான் அவனை ஓர் உத்தமனாகவே கருதினேன்.

ராமச்சந்திரன் வெளி மினுக்கையும் வெற்றார வாரத்தையும் விரும்புகிறவனல்ல. அவனுடைய மனசாட்சிக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதன்படியே நடப்பான். யான் என்ன சொன்னாலும் கேட்க மாட்டான். மனிதர்களிடையில் ஜாதிமத வித்தியாசமே இருக்கக் கூடாது என்பது அவனுடைய கொள்கை ஆகவே, அவன் ஜாதிமத வித்தியாசம் காட்டுவதை அடியோடு நிறுத்து விட்டான். பள்ளர் சமைத்தாலுஞ் சரி, பறையர் சமைத்தாலுஞ் சரி, உணவு சுத்தமாக இருந்தால் சாப்பிடுவான். இந்துக்களுடைய கோவிலானாலுஞ் சரி, மகமதியர்களுடைய மசூதியானாலுஞ் சரி, கிறிஸ்தவர்களுடைய தேவாலய மானாலுஞ் சரி தாராளமாக உள்ளே நுழைந்து கடவுளை வணங்குவான்.

ராமச்சந்திரனின் கலியாண சம்பந்தமாக அவனுக்கும் அவனுடைய தகப்பனார் கிருஷ்ணய்யருக்கும் நீண்ட நாள் விவாதம் நடந்தது. தான் கலியாணம் செய்வதா யிருந்தால் ஏதாவது பிற

ஜாதிப் பெண்ணையே மணந்து கொள்வதாக ராமச்சந்திரன் கண்டிப்பாகக் கூறி விட்டான். ஆனால், கிருஷ்ணய்யருக்கோ கலப்பு மணம் என்றால் கொடிய நஞ்சாக இருந்தது. ஆகவே, ராமச்சந்திரன் பிறஜாதிப் பெண்ணை மணந்து கொள்ளக் கூடாதென்று அவர் பிடிவாதம் செய்தார். கிருஷ்ணய்யர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஒன்றும் பிரயோஜன மில்லாமல் போய் விட்டது. ஆகவே, அவர் ராமச்சந்திரனை வீட்டை விட்டு வெளியே போகும்படி சொல்லி விட்டார். ராமச்சந்திரனும் பதில் ஒன்றும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

தன்னை எப்படியாவது ஒரு நாள் வீட்டை விட்டு வெளியே துரத்தி விடுவார்கள் என்று ராமச்சந்திரனுக்குத் தெரியும். அப்படி வீட்டை விட்டு வெளியேறியதும் கையில் பணமில்லாமல் காலந் தள்ளுவது மிகவும் கஷ்டம் என்பதையும் அவன் அறிவான். அதற்காக அவன் எப்பொழுதும் கவனமாகவே இருந்து வந்தான். பத்திரிகைகளுக்குச் சிரிப்புச் சுவை மிகுந்த கட்டுரைகளும், உள்ளங் கொள்ளை கொள்ளும் ருசிகரமான சிறு கதைகளும் எழுதியனுப்புவது ராமச்சந்திரனின் வழக்கம். அதிலிருந்து அவனுக்கு மாதாமாதம் குறைந்தது முப்பது ரூபாயாவது கிடைக்கும். ராமச்சந்திரன் தன் தாய் தந்தையர்களை விட்டுப் பிரிவதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகவே பத்திரிகைத் தொழிலில் இறங்கி விட்டான். ஆகவே, அவன் வீட்டை விட்டு வெளியேறும் போது அவன் கையில் ரொக்கமாக நானூறு ரூபாய் இருந்தது.

வீட்டை விட்டு வெளியேறிய ராமச்சந்திரன் மாதம் ஐந்து ரூபாயில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்தான். ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு அவன் வாடகை வீட்டில் இருக்கும் பொழுது தான் முதல் முதல் நான் அவனைச் சந்திக்க நேர்ந்தது. முதல் நாள் நான் அவனுடைய வீட்டுக்குப் போகும் பொழுது, அவன் ஒரு சிறு கதை எழுதிக் கொண்டிருந்தான். ராமச்சந்திரன் மேற்படி கதையை எழுதி முடித்து, பத்திரிகைக்கு அனுப்புவதற்காக உறையில் போட்டு மேல் விலாசம் எழுதிக் கொண்டிருக்கையில் நான் அவன் வீட்டினுள் நுழைந்தேன். என்னைக் கண்டதும் ராமச்சந்திரன் 'வாருங்கள் வாருங்கள்' என்று சொல்லி விட்டு ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினான். நான் அதை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு அவனிடம் பேசலானேன். உன்னை உன் தகப்பனார் வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டாராமே!' என்றேன்.

'துரத்துவதென்ன? என் கலியாண விஷயமாக எனக்கும் என் தகப்பனாருக்கும் பெரிய தாவா நடந்தது. நான் கண்டிப்பாகக் கலப்பு மணமே செய்வேன் என்றேன். அவர் கூடாதென்றார்

207675

ஆகவே, நான் வீட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று" என்றான் ராமச்சந்திரன்.

'என்ன இருந்தாலும் தகப்பனார் வார்த்தையை மீறுவது சரியல்ல' என்றேன். இதைக் கேட்ட ராமச்சந்திரன் வாயைக் கையினால் மூடிக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தான். இடையிடையே என்னையும் பார்த்தான்.

நான் என்னுடைய ஆடை அலங்காரங்களில் அதிகக் கவலையுள்ளவன். அவற்றில் ஏதாவது கோளாறு என்ன என்று நினைத்து சுவற்றிலிருந்த கண்ணாடியில் என்னைப் பார்த்துக் கொண்டேன். ராமச்சந்திரன் 'அலங்கார மெல்லாம் சரியாய்த்தான் சார் இருக்கிறது. ஒன்றிலும் பிசகில்லை. நான் சிரிக்கிறது வேறு விஷயம். இப்போது இந்தியாவிலிருக்கும் ஜாதி வேற்றுமையை அடியோடு துலைக்க வேண்டுமானால், நாம் கலப்பு மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை நீர் நன்றாக அறிவீர். தகப்பனார் தடுக்கின்றார் என்று கலப்பு மணம் செய்யா திருந்தால், அதைவிடக் கேவலம் வேறென்ன இருக்கிறது. அதைத் தெரிந்திருந்தும் தகப்பனார் வார்த்தையை மீறக் கூடாதென்கிறீரே' என்றான்.

'நீ சொல்வது சரிதான். ஆனாலும் உற்றார் உறவினர்களின் சம்மத மில்லாமல் நீ கலப்பு மணம் செய்வதா யிருந்தால், உன்னுடைய பிற்கால வாழ்க்கையில் பல கஷ்டங்கள் ஏற்படு மென்று நினைக்கிறேன்' என்றேன்.

'அடேயப்பா! இதுதானா பிரமாதம்? எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலுஞ்சரி—ஏன் என் உயிருக்கே ஆபத்து வந்தாலுஞ்சரி—நான் கலப்பு மணமே செய்வேன்' என்றான். நான் 'உன் இஷ்டம்' என்று சொல்லி விட்டு எதிரே மேஜையின் மேல் கிடந்த தினசரிப் பத்திரிகை யொன்றை எடுத்து வாசிக்கலானேன். அதில் ஓரிடத்தில் ராமச்சந்திரன் அனுப்பிய விளம்பரம் ஒன்று இருந்தது. அது பின் வருமாறு:—

'ஜாதிமத பேதமின்றி வாழ்வதே உத்தம வாலிபர்களின் கடமை என்ற எண்ணமுடைய, பிராமண வம்சத்தைச் சார்ந்த இருபத்தைந்து வயதுள்ள வாலிபர் ஒருவருக்கு இருபது வயதுக்குட்பட்ட பெண் ஒன்று தேவை. முழுவிபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

K. ராமச்சந்திரன்

ஆசாரிபள்ளம், நாகர் கோயில்.

மேற்படி விளம்பரத்தை வாசித்ததும் எனக்குப் பெரும் ஆச்சரியம் உண்டாயிற்று. 'நீ பெரிய தைரியசாலி தானப்பா' என்று

என்வாய் என்னை யறியாமலே சொல்லிற்று. 'சொல்வது சுலபம், ஆனால், செய்வது கடினம்' என்பார்கள். ஆனால், தைரிய மிருந்தால் சொல்வது சுலபம் செய்வது சுலபம் என்று சொல்லிக் கொண்டு சிரித்தான் ராமச்சந்திரன். ஆறு மாதங்கள் சென்றதும் ராமச்சந்திரன் மிஸ் மேரி லீலா என்ற ஆதிதிராவிட கிறிஸ்தவப் பெண்ணை விவாகம் செய்து கொண்டான். மேரிலீலா பி. ஏ. வகுப்பில் ஒரு வருஷம் படித்து விட்டு ஏதோ எதிர்பாராத காரணத்தால் அத்துடன் நிறுத்தி விட்டவள். அப்படி ரொம்ப அழகானவள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவளுடைய முகத்தில் புன் சிரிப்பு சதா தாண்டவ மாடிக் கொண்டிருக்கும். அவளுடைய படிப்புக் கொத்த அறிவையும், அறிவுக் கொத்த சொல்வன்மையையும் பலரும் போற்றினார்கள்.

ஒரு நாள் நான் ராமச்சந்திரனுடைய வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே ராமச்சந்திரனும் மேரிலீலாவும் மதவிஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்கள் இருவரும் இருந்த அறையினுள் நுழையும் போது ராமச்சந்திரன் 'நன்றாக ஆலோசித்துப் பார்த்தால் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று சொல்வதற்கில்லை' என்றான். இதைக் கேட்டதும் எனக்குப் 'பகீர்' என்றாகி விட்டது. 'ஏது உன் புத்தி வரவரக் கெட்டுப் போய் விட்டதே' என்றேன். அதற்கு மேரிலீலா 'கடவுள் ஒருவர் இருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி உலகத்தில் நாமெல்லோரும் சமாதானமாக ஒருவருக்கொருவர் துன்பம் செய்யாமல் வாழ முடியும். நாஸ்திகர்களும், கொலை செய்யாதே, களவு செய்யாதே, விபச்சாரம் செய்யாதே என்றுதான் சொல்லுகின்றார்கள். ஆதலால் ஒருவர் கடவுள் இல்லை என்று சொன்னால் நாம் அவரை வெறுக்கக் கூடாது. ஆனால், அவர் நல்லொழுக்கம் வேண்டா மென்று சொல்வாரானால் அவரை வெறுக்கலாம்' என்றாள். 'சரி. நீ கடவுள் உண்டென்று நம்புகிறாயா?' என்று நான் கேட்டேன். 'எனக்குச் சந்தேக மாகத்தான் இருக்கின்றது' என்றாள். அப்பொழுது ராமச்சந்திரன் என்னை நோக்கி:—

'கடவுள் ஒருவர் உண்டென்று சொல்கின்றார்களே, அவர் பரிபூர்ணமான இரக்க முடையவராகத்தானே இருக்க வேண்டும். அப்படி யிருந்தும் அவருடைய படைப்பில் ஏன் வறுமை நோய் முதலிய இன்னல்கள் இருக்கின்றன?' ஏன் எனக்கிருக்கும் இரக்கம் கடவுளுக்கில்லையா?' என்றான்.

இதைக் கேட்டதும் என் உடல் வெடவெட என்று நடுங்க வாரம்பித்தது. 'ராமச்சந்திரா! இதென்ன வேடிக்கை? உன் புத்தி இப்படியும் கெட்டுப் போக வேண்டுமா?' என்றேன். அதற்கு அவன்:—

'இல்லை. நான் இப்படிச் சொன்ன போதிலும், எவ்வுயிர்க்கும் எவ்விதத் தீங்கும் செய்யேன். இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகள் படுந் துன்பத்தைப் பார்த்து என் நெஞ்சம் புண்பட்டதினாலேயே, நான் அவ்வாறு சொல்ல வேண்டியதாயிற்று' என்றான். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் மள மளவென்று வடிந்தது. அதைக் கண்ட மேரிலீலா 'போதும் போதும் வீணாகத் தத்துவங்களைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பல பெரியாரும் இதைப்பற்றி வாதாடிச் சலித்து விட்டனர். நமக்கேன் அந்தத்தொல்லை. நம்மால் பிறவுயிர்களுக்கு நன்மைகள் ஏதாவது செய்ய முடியுமா என்பது பற்றி ஆலோசிப்போம்' என்றாள். 'வீட்டில் கொஞ்சம் வேலை இருக்கின்றது' என்று விடை பெற்றுக் கொண்டு நான் வந்து விட்டேன்.

* * *

இதெல்லாம் பழைய கதை. நாங்கள் இவ்வாறு எத்தனையோ நாட்கள் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தோம். ஆனால், ராமச்சந்திரனுடைய வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதல் ஒன்று ஏற்பட்டது. ராமச்சந்திரனும் மேரிலீலாவும் இல்லற வாழ்க்கையை இரண்டு வருஷங்கள்தான் நடத்தினார்கள். அவர்களுக்கு அப்பொழுது ஓர் பெண் குழந்தையும் பிறந்திருந்தது. அக் குழந்தைக்கு சேஷம்மாள் (ராமச்சந்திரனின் தாயார் பெயர்) எனப் பெயரிட்டான். சேஷம்மாள் ஆறுமாதக் குழைந்தையாய் இருக்கும்பொழுது மேரிலீலா ஒருநாள் திடீரென்று மாரடைப்பால் இறந்து போனாள்.

மனைவியை இழந்த ராமச்சந்திரனின் மனம் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தது. அவன் கண்களுக் கெதிர்ப்பட்ட ஒவ்வொரு பொருளும் மேரிலீலாவைப் பற்றிய எண்ணங்களை எழுப்பின. நாட்கள் செல்லச் செல்ல அவனுடைய துக்கமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. தனிமையாக இருந்தாலுஞ்சரி, பிறருடன் பேசிக் கொண்டிருந்தாலுஞ்சரி, மேரிலீலாவின் எண்ணம் அவனைச் சதா வருத்திக் கொண்டிருந்தது. இரவும் பகலும் மேரிலீலாவைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த ராமச்சந்திரனின் நிலைமை மிகவும் வருந்தத் தக்கதாயிருந்தது.

வருஷங்கள் பத்து கழிந்தன. சேஷம்மாள் எவ்விதக் கவலையுமின்றி ராமச்சந்திரனிடம் வளர்ந்து வந்தாள். சில சமயங்களில் அவள் ராமச்சந்திரனைப் பார்த்து 'ஏனப்பா நீ இப்படித் தாடிவளர்த்திருக்க? வீட்டை விட்டு வெளியே போகாதிருக்காயே ஏனப்பா?' என்று கேட்பாள். அப்பொழுது அவன் 'கண்ணே! இந்தத் தாடியை உங்கம்மாளின் ஞாபகத்திற்காக வளர்க்கிறேன்' என்று சொல்லுவான். அவன் கண்களில் நீர் பெருகும். சேஷம்மாள் துக்கத்தால் முகங்கறுத்துத் தன் பாவாடையினால் அவன் கண்ணீரைத்

துடைப்பாள். ராமச்சந்திரன் ஒரே ஏக்கமாக அப்படியே உட்கார்ந்திருப்பான். அவ்விதக் காட்சிகளை நான் எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிறேன். அச்சமயங்களில் 'ராமச்சந்திரனும் இறந்து போனால் சேஷம்மாளின் கதி என்ன வாகும்' என்று நான் எண்ணுவதுண்டு.

பாருங்கள் வாசகர்களே! பாவியாகிய நான் எண்ணியது போலவே காரியம் நடந்து விட்டது. சேஷம்மாள் பன்னிரண்டு வயதுப் பெண்ணாயிருக்கும் பொழுது ஒருநாள் ராமச்சந்திரன் திடீரென்று இறந்து போனான். அவனுடைய பரிதாபகரமான மரணத்தின் போது நான் அவனருகிலேயே இருந்தேன். அவன் இறந்த காட்சி இன்னும் என் மனக்கண் முன் தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு நாள் நானும், ராமச்சந்திரனும், சேஷம்மாளுமாகப் 'பயோனியர் பிக்சர் பாலஸில்' (Pioneer Picture Palace) சினிமா பார்த்து விட்டு வந்தோம். அப்பொழுது சுமார் பத்துமணி இருக்கும். சினிமாவுக்குப் போகும் பொழுதே ராமச்சந்திரன் 'நான் வரவில்லை நீங்கள் இருவரும் போய்விட்டு வாருங்கள்' என்றான். நான் தான் அவனை வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு போனேன். சினிமா முடிந்து வீட்டுக்குத் திரும்பிவரும் வழியிலேயே ராமச்சந்திரன் 'எனக்கு ஒரு மாதிரியாக வருகிறது' என்றான். விரைவாக ராமச்சந்திரனின் வீடு வந்து சேர்ந்தோம். வீட்டினுள் நுழைந்ததும் அவன் ஒரு சாய்வு நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தான். அவனுடைய தேகமெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. நான் அவனுடைய பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒரு தினசரிப் பத்திரிகையால் அவனுக்கு விசிறிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவன் திறுதிறுவென்று விழித்த வண்ணம் 'சார்! நான் இறந்து போவேன் போலிருக்கே' என்றான். நான் 'சீ! உளறாதே' என்றேன். அதற்கு அவன் 'இல்லை...........நான் இறந்து போவேன்......................ஆதி சக்தியைப் பிரிந்த நான் இதோ திரும்பவும் அங்கே போய்ச் சேரப் போகின்றேன்.......................என் செல்வப் பெண் சேஷம்மாள்.......................உங்கள் அடைக்கலம்' என்றான் 'வீ........க், வீ........க்' என்று இரண்டு சப்தம். அவன் ஆவி அடங்கி விட்டது. அன்று முதற்கொண்டு சேஷம்மாள் என் வீட்டிலேயே வளர்ந்து வருகின்றாள்.

பேராற்றலும் பேரறிவும் பேரிரக்கமும் உள்ள ஒரு முழு முதற் கடவுள் உண்டு என்னும் உணர்ச்சி ராமச்சந்திரனின் உள்ளத்தில் அநேக வருஷங்களாக இல்லாதிருந்த போதிலும், புல் பூண்டு முதற்கொண்டு மனிதன் ஈறாகவுள்ள எல்லா உயிர்களிடத்

தும் அன்பு காட்ட வேண்டு மென்ற அவாவுடைய ராமச்சந்திரன் தனது மரண சமயத்திலாவது 'ஆதிசக்தியைப் பிரிந்த நான் இதோ திரும்பவும் அங்கே போய்ச் சேரப் போகின்றேன்' என்று சொல்லியதிலிருந்து அவனை ஓர் உத்தமன் என்று கருதுகின்றோமல்லவா? கடவுள் ஒருவர் உண்டு என்று நம்பும் ஒருவன் கொலை, களவு, கள், காமம், சூது என்ற பஞ்சமா பாதகங்களைச் செய்கின்றான்; கடவுள் இல்லை என்று சொல்லும் நாஸ்திகன் பிறவுயிர்களிடத்து அன்பும் இரக்கமும் காட்டி நல்லவனாய் நடக்கின்றான். இவர்களில் நல்லொழுக்கம் முள்ள நாஸ்திகனன்றோ மேலானவன். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தத்துவத்தைக் கொண்டுவரலாம், ஆனால், எல்லோரும் நல்லொழுக்க முடையவர்களாய் இருக்க வேண்டும். நல்லொழுக்கம்; ஒற்றுமை, அறிவு, செல்வம், சமாதானம், முதலியவற்றைச் சுமந்து வரும் மரக்கலமாகும். நல்லொழுக்கமே வறுமை, நோய் முதலிய இன்னல்களை நீக்கும் சக்தியுடையது.

---


இனம்! இனம்!! இனம்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

### பழைய இரண்டாம் பாகம் இனம்

வேண்டுவோர் 4 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

---

## 'தமிழரசு' பைண்டு வால்யம்

### 4-வது மலர்

12 மாத சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து மிக அழகாக பைண்டு செய்திருக்கிறது. வேண்டுவோர் 12 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் 1 புஸ்தகம் அனுப்பி வைக்கப்படும். வெளி நாடுகளுக்கு மாத்திரம் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# நான் பாக்யவதி

[சரோஜா]

'அந்தி மங்கும் நேரம். பொன் கிரணங்களின் சாயை தூரத்திலுள்ள மலைச் சிகரங்களில் படிந்திருந்தன. பசும்புல் நிறைந்த சமவெளி, பறவைகள் தத்தம் கூட்டை நோக்கிப் பறந்து சென்றன. காறு மெல்ல ஏதோ ரகசியம் பேசுவது போல் ஓடிக் கொண்டிருந்தது. இக் காக்ஷிகளைக் கண்டு பெருமூச் செறிந்தவாறு நின்று கொண்டிருந்தாள் பூர்ணிமா.

'நான் ஒரு பறவையாய் ஜனித்திருந்தாலும் யதேச்சையாய் வாழலாமே! வாழ்க்கையின் சந்தோஷம் ஒன்றையும் அனுபவிக்கக் கொடுத்து வைக்க வில்லை. 'துர்அதிர்ஷ்டம் பிடித்தவள்' என்னும் வெறுப்புக் கலந்த சொற்கள் அவள் வாயினின்று வந்து கொண்டிருந்தன.

ஆம்! பூர்ணிமா செல்வந்தனின் மனைவி தான். அவளுக்காக அமலநாதன் எதையும் தியாகம் செய்வான். ஏழைகளிடம் இறக்கமுடையவன் ஆயினும், தன் உயிரை விட மேலான பொருளாய் நினைத்தான் மதுவை. பூர்ணிமாவின் மன விரக்திக்குக் காரணம் அவன் செய்கையே. அவளது ஆப்த மித்ரர்கள் புஸ்தகங்கள் தான். அது ஒழிந்தால் இயற்கை யின்பத்தை அள்ளி அள்ளிப் பருகி ஆனந்த வெள்ளத்தில் திளைப்பாள். மதுவின் பழக்க மேற்பட்டால் மனிதன், எவ்வளவு தூரம் சமூகத்தால் இழிவாகக் கருதப் படுகிறான் என்பதை அமலநாதன் உணராதிருந்தது ஆச்சர்யமே. அவன் கல்வி கற்றவன் தான். இருந்தும் என்ன பயன்? பூர்ணிமா தன் விவாக காலத்தில் கட்டின கோட்டைகள் எல்லாம் பொடி சூர்ணமாகத் தகர்த் தெரியப்பட்டன. மிகவும் உற்சாகத்துடன் அமலநாதன் தன்னுடன் வாழ்க்கை நடத்துவான் என்று நினைத்தாள். அந்தோ! பேதைப் பெண், அதன் முடிவை ஒரு மாதத்திற்குள் உணர்ந்து கொண்டாள்.

'பூர்ணிமா! என்ன ஆழ்ந்த யோசனை? இப்படி எத்தனை காலம் தனி வாழ்கை நடத்தப் போகிறாய்?' என்று கூறிய வண்ணம் அமலன் அவள் கைகளைப் பிடிக்கப் போனான். விஷ சர்பத்தைக் கண்டால் எவ்வளவு நடுக்க முண்டாகுமோ அதைவிடப் பன்மடங்கு நடுக்கத்துடன் கைகளை உதறி இழுத்துக் கொண்டு, ஆம்! என் வாழ்நாளின் கடைசி அத்யாயத்தின் முடிவு வரையில் என்ற ஒலி கம்பீரமாய் ஒலித்தது.

அமலநாதன் அவளைக் கனிந்த பார்வையுடன் நோக்கி, 'பூர்ணா! நீ என்னை வெறுப்பதின் காரணத்தைக் கூற மாட்டாயா? நான் என்ன உன்னிடம் அன்பில்லாதவனா?' பூர்ணிமா, 'மறுபடியும்

உங்களை மன்றாடுகிறேன். அந்தத் துர்ப்பழக்கத்தை விட்டு விடுங்கள். மது என்னும் அரக்கன் உங்களை முழுமோசமான நிலமைக்குக் கொண்டு வந்து விடுவான். ஊரார் எவ்வளவு இழிவாகப் பேசுகிறார்கள். என் ஹிருதயத்தைப் பாலைவனமாக்கியது, உங்கள் இழிவான செய்கையே. அதை ஒழித்தால் என் மனம் உங்களிடம் அன்பு காட்டும். இல்லாவிடில், விரோதி போல்தான்' எனத் துணிவாகக் கூறினாள்.

'என்ன!' என்ற எதிர்ச் சொல்லைக் கேட்ட சந்திரனும் நகைத்து, பூர்ணிமாவின் கொள்கையை ஆமோதிப்பவன் போல் மேகத்துள் மறைந்து இருளை உண்டாக்கினான். அவ்விருள் அமலனை நோக்கி, 'அமலா! நீ மதுவின் பழக்கத்தை விட்டால் க்ஷேமப்படுவாய். இல்லாவிடில் உன் வாழ்வும் என்னைப் போல் சோபையற்றுப் போய்விடு மென்று' சொல்வது போல் விளங்கியது.

அமலநாதன் குடிகாரனாயிருந்தாலும், பூர்ணிமாவைக் குடித்து விட்டு ஹிம்ஸிப்பது கிடையாது. தன்னிறையிழந்து சயனித்து விடுவான். இல்லாவிடில் தன் போக்காகச் சிரிப்பதும், பேசுவதுமாக இருப்பான். சில சமயங்களில் ரோட்டில் விழுந்து விடுவான். தற்செயலாய் அவனைக் கவனித்தவர்கள் வீட்டை விசாரித்துக் கொண்டு வந்து விட்டுப் போவார்கள். குடி மயக்க மில்லாத சமயங்களில், அவனைப்போல் யாரும் கிடையாது.

* * *

அமலநாதனுக்குக் கடுஞ்சுரம். பூர்ணிமா கவலையுடன் அவன் முகத்தைக் கவனித்தவாறு உட்கார்ந்திருந்தாள். என்னதான் அவள் மனம் அவன் செய்கையை வெறுத்தாலும், அவனை வெறுத்துத் தள்ளவில்லை. வைத்தியர், அவனுக்குக் குடலில் துளை விழுந்து விட்டதென்றும், பிழைத்தால் புனர்ஜன்ம மென்றும் சொன்னார். நிசப்தமான இரவில் கானாறு இவள் மனோவேகத்துடன் போட்டியிட்டது. சந்திரனும் இவள் பரிதாபத்துக்கு இரங்குபவன் போல் மேகத்துள் மறைந்ததும், மறையாதது மாயிருந்தான்.

'பூர்ணா! அதோ பார், யாரோ வருகிறார்கள். பிடி! அவர்களை விடாதே' என்று வாய் பிதற்றிக் கொண்டிருந்தான் அமலன். பூர்ணிமா கண்களை மூடியவண்ணம் ஸோபாவில் சாய்ந்தாள். மறுபடியும் விழித்தெழுந்த போது சூரியனின் இளங் கிரணங்கள் ஜன்னல் வழியாய் உள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்தது. அமலநாதனுடைய சுரமும் சிறிது குறைந்திருந்தது. மலர்ந்த விழிகளுடன் பூர்ணிமா அவனைக் குனிந்து நோக்கினாள். அவன் ஹீனஸ்வரத்துடன், 'பிரியா! என்னை மன்னிப்பாயா? ஹிருதய பூர்வமாகச் சொல். சீக்கிரம்!' என்றான். பூர்ணா ஆச்சர்ய மடைந்தவளாய் ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் அமலன் ஆழ்ந்த நித்திரை

யிலிருப்பதை உணர்ந்து வெளியே சென்று தோட்டத்தைக் கவனித்தபடி நின்றிருந்தாள்.

* * *

பௌர்ணமியின் இரவு. மதி என்னும் மன்னன் தன் ஏகாட்சியை உலகத்தில் செலுத்துகிறான். தூரத்திலுள்ள மரத்தில் ஆந்தை கிளை கூட்டும் சத்தம் கேட்டது. நக்ஷத்திரங்கள் இப்புத்துணர்ச்சி பெற்ற தம்பதிகளை நோக்கிக் கண்ணைச் சிமிட்டுவதுபோல் தோன்றியது. காட்டுப் புஷ்பங்களின் மணம் கம்மென்று வீசியது.

'பூர்ணு! கடந்த பௌர்ணமியின் இதே இரவு உன் சொற்களில் என்ன கம்பீரமும், அழுத்தமும் கலந்து தொனித்தது. கடவுளும் உன் மனோ உறுதியை நோக்கி என்னைப் புனர்ஜன்மமெடுக்கச் செய்தார். இதோ! இப்படிப் பார்' என்று அவள் முகத்தைத் திருப்பினான் அமலநாதன்.

அவள் காதல் நிறைந்த பார்வையுடன், 'ஆம்! உங்களைப் புனர்ஜன்மமெடுக்கச் செய்த இறைவனை ஒவ்வொரு நிமிடமும் வணங்குகிறேன். இனியும் பழைய வழக்கம் பிடித்துக் கொள்ளுமோ என்கிற பயம் எனக்கு அடிக்கடி உண்டாகிறது. அமலன் அவளை நோக்கி 'அன்பே! என்னுயுள் பரியந்தம் அவ்வழக்கத்தை அனுசரிக்க மாட்டேன்;'

'ஆனல், நான் பாக்யவதிதான்.' என்றுள் பூர்ணிமா. அத்தொனியுடன் எதிர் மரத்திலிருந்த ஆந்தையும் கிளை கூட்டிற்று.

---


## ரிஜிஸ்தர் அறிவிப்பு

### கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெம்பர் 114.

1. "லக் பீடி" டிரேட் மார்க்கு.
2. "இன்பசாரம்" டிரேட் மார்க்கு.
3. "கோல்டனல்" டிரேட் மார்க்கு.
4. "காஸ்டோலின்" டிரேட் மார்க்கு.

ஷை டிரேட் மார்க்குகளை Mr. M. மாசிலாமணி முதலியார், அவர்களால் தயாரிக்கப்படும், மருந்துகள், பீடி வகையறுக்களுக்கு இந்தியன் பீனல் கோடு 478, 479-வது செக்ஷன்களின் படிக்கு ரிஜிஸ்தர் செய்துள்ளார்கள். ஷை டிரேட் மார்க்குகளைப் போல் உபயோகிப்பவர்கள் நஷ்ட ஈடு முழுமைக்கும், சிவிலிலும், கிரிமினலிலும், ஜவாப்தாரியாவார்களென இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மருந்து தயாரிப்பவர்கள் :

**31, வைத்தியனுத முதலி வீதி, சென்னை.**

# ஏழு சர்வாதிகாரிகள்

[ஆசிரியர். வேலாயுதன்]

[பற்பல காலங்களில் வசித்துவந்த—வசித்து வருகின்ற சர்வாதிகாரி களைப்பற்றிக் குறிப்பாய் எழுதப்பட் டிருக்கிறது. வாசகர்கள் உணர்ந்து கொள்ளலாம். சந்தேகத்திற்குக் கட்டுரையின் கீழ், சர்வாதிகாரிகளின் பெயர்கள் குறிக்கப்பட் டிருக்கின்றன.]

**யுத்தம்** நடைபெறுகிறது. மிகவும் ஆபத்தான இடத்தில் எதிரிகள் ஒரு சிறு பட்டாளத்தை வளைத்துக் கொண்டனர். அது சமயம் தாய் நாட்டைக் காக்க ஓர் சர்வாதிகாரி அவசியம் வேண்டியதாயிற்று. மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்ன செய்வதென்று தோன்றவில்லை. மகா ஜனங்களுக்குப் பொருத்தமான ஒருவரைச் சர்வாதிகாரியாக ஏகமனதாய்த் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அவர் அந்த ஊரிலில்லை. இருப்பினும் அவருடைய அனுமதியின்றி வெளியூரிலிருக்கும் அப் பெரியாரையே சர்வாதிகாரியாக நியமித்தனர். சர்வாதிகாரிகளுக் களிக்கப்படும் சன்னத்துக்களுடன், அரண்மனை உத்தியோகஸ்தர்கள் புதிய சர்வாதிகாரியைத் தேடிப் பிடித்து அழைத்துவரப் புறப்பட்டனர். தேடப்படும் சர்வாதிகாரியோ, நெற்றி வியர்வை நிலத்திற் சொட்டத் தமக்குச் சொந்தமான காணி நிலத்தில் ஏர் உழுது கொண்டிருந்தார். தம் மனைவியோ அருகே நிலத்தைப் பண்படுத்தல் முதலிய வேலைகளைப் புரிந்து வந்தார். சன்னத்துக்கள் கொண்டுவந்த அரண்மனை உத்தியோகஸ்தர்கள் ஜனங்கள் ஏகமனதாய்ச் சர்வாதிகாரியாக அவரை நியமித்ததைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஏர் உழும் பெரியார் முதலில் திடுக்கிட்டாரேனும், பின்னர் மகா ஜனங்கள் தம்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பெரிதும் உவகை கொண்டவராய்ச் சர்வாதிகாரப் பதவியை யேற்றார்.

* * *

மத்திய ஆசியாவில் நான்கு வருடம் சண்டை செய்தபின், தம் தேசத்திற்கு வந்தார். இரண்டு வருடத்தில் தாய் நாட்டின் சர்வாதிகாரத் தத்துவம் தம் கையில் கிடைத்தது. தாமே சர்வாதிகாரியெனப் பட்டம் சூட்டிக் கொண்டார். தம் பகைவர்களை வஞ்சந் தீர்த்தார். தம் மனங் கொண்டவாறு அரசியலில் புனருத்தாரணஞ் செய்தார். பராக்ரம மிகுந்த கெட்டிக்கார சர்வாதிகாரிதான். ஆனால், அவர் சர்வாதிகாரத்தின் பேரில் செய்த பாதகங்களை மறக்க முடியாது. சுருக்கமாகக் கூறின், விரும்பத்தக்க சர்வாதிகாரியல்லர்.

* * *

தகப்பனருக்குக் கருமார வேலை. தாயார் ஓர் கல்விச் சாலையில் உபாத்தியாயினி. சிறுபிள்ளையா யிருந்தபோது தகப்பனருடன்

கருமார வேலையில் ஈடுபட்டார். பதினெட்டாம் வயதில் சர்க்கார் கல்விச் சாலையில் ஆசிரியரா யமர்ந்தார். அரசியலில் சம்மந்தப் படவே அரசாங்கத்தாரால் நாடு கடத்தப்பட்டார். வேளைச் சாப் பாடு வேளைக்கில்லாமல் அநேக நாள் பட்டினியா யிருந்தார். தொடர்ச்சியாக 26 மணி நேரம் பட்டினி கிடந்தார். திறந்த வெளியிலும், பாலத்தின் கீழும் படுக்கையாகும். 11 முறை ஜெயில் வாசஞ் செய்தார். தொழிலாளர்கள் இயக்கத்தை ஆரம்பித்தார். சர்க்கார் போக்குப் பிடிக்கவில்லை யென்று கிளர்ச்சி செய்தார். பின்னல், சர்க்காரைக் கவிழ்த்து அதிகாரத்தைப் பிடுங்கித் தாமே சர்வாதிகாரி ஆனர்.

* * *

சிறந்த வீரர். விரோதிகளை முறியடித்து ஏக அதிகாரி ஆனர். அப்போது அவருக் களிக்கப்பட்ட சர்வாதிகாரம் ஜீவியகாலம் வரையில். மகா அலெக்சாண்டர் உருவச் சிலையைப் பார்த்து 'என் வயதில் அவர் உலகத்தை ஜெயித்துவிட்டார். நானே இதுவரை ஒன்றுமே செய்யவேயில்லை' என்று சொன்னர். அப்போதே குடியரசின் தத்துவங்களை யெல்லாம் சுருக்கமாய்த் தம் ஆட்சியில் கொணர்ந்தார். அவர் காலத்தில் எந்த வீரனும் அப்படிச் செய்து விட முடியாது. ஒரு கக்ஷியையுஞ் சேர்ந்தவரல்லர். பொது நன்மையையே தேடினர். அரசியலில் பெருஞ் சீர்திருத்தஞ் செய் தார். சட்ட திட்டங்கள் வகுத்தார். தாம் ஜெயித்த பிரசைகளின் வாழ்க்கைச் சரித்திரம் எழுதினர். முடிவில், செனட் சபையின் முன்னல் கொலை செய்யப்பட்டார்.

* * *

சிறுவயதில் போர்ச் சேவகர். படிப் படியாகப் பட்டாளத்திற் கதிபதியானர். பின் ஆச்சரியமாய் உயர்ந்த நிலைமைக்கு வந்தார். பிற தேசங்களின் மீது படையெடுத்து வெற்றியின்மேல் வெற்றி கொண்டு தம் கீர்த்தியை நிலைநாட்டினர். ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் வேலை செய்பவர். புஜபலத்தில் ராவணனைப் போன்றார். மன உறுதியில் இரும்பை ஒப்பார். ஜெயதேவதையோ தம் கையி லடக்கம். குறுகிய காலத்தில் ஏக சக்கரவர்த்தி ஆனர். பெருஞ் சர்வாதிகாரி. அரசியல் சம்மந்தமாய்ச் சிறிது காலம் தனியே வசித்து வந்தார். பின்னல் தம் கொள்கைக் கேற்றவாறு அரசாட்சி வரவே, மறுமுறையும் அதிகார மேற்றார். எனினும் இறுதியில் மனித சுபாவமாகிய பேராசையினல் அபஜெயமுற்று, ஒரு தீவில் இறந்தார். அநேக சீர்திருத்தங்கள் செய்தவர். சிறந்த சர்வாதிகாரி.

* * *

சிறுபிள்ளையா யிருந்தது முதல் தெய்வாதீனமாய் உயிர் தப்பித்துக்கொண்டு வந்தார். பொதுச் சேவையிலேயே தம்

ஜீவியத்தை அர்ப்பணஞ் செய்து வந்தார். தம் தேச மக்கள் பிறதேசங்களில் வசிப்பது அகௌரவம் என்னும் மனப்பான்மை உடையோர். அப்படியே அதைச் செய்தும் காட்டினவர். ஆண்டவனால் தமக்குத் தெரிவிக்கப் பட்டவையென்று சொல்லும் 10 கற்பனைகளை வெளியிட்டவர். தம் குடிகளுக்கு நீதி சாஸ்திரத்தை எழுதித் தந்தவர். இவர் பெரிதும் மதச் சம்பந்தமாய்ச் சீர்திருத்தம் செய்த ஒரு சர்வாதி காரியாவார்.

* * *

ஆதியில் ஒரு மருந்துக் கடையில் வேலை பார்த்து வந்தவர். சென்ற மகா யுத்தத்தில் போர் முனைக்குச் சென்றார். ராணுவச் சேவகர்களுக்கு அடுத்த படியான தலைவரானார். தொழிலாளர்களிடையே மிகுந்த நட்புக்கொண்டவர். தொழிற் கட்சியிலிருந்து வேலை பார்த்தார். அரசியலில் புகுந்து வேலை செய்தார். அரசாங்கத்தினர் 13 மாதம் சிறைப் படுத்தினர். தேசிய இயக்கத்தில் சுமார் பத்து வருட காலம் இடைவிடா முயற்சியுடன் உழைத்து வந்தார். பின்னால், குடி யரசுத் தலைவரால் முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டார். காலச் சக்கரத்தின் வேகத்தால் தம் கொள்கைகள் பலித்து வந்தன. குடி அரசுத் தலைவர் இறந்துவிடவே, தாமே சர்வாதிகாரியாக நியமித்துக் கொண்டார். இவர் தம் ஆட்சியில் ஒரு வகுப்பாரை இம்சித்து நாட்டைவிட்டு ஓட்டுகிறார். அநேக தேசங்கள் இவர் நடத்தையை வன்மையுடன் கண்டிக்கின்றன. எவ்விதத்தும் இவர் ஓர் கீர்த்திபெற்ற சர்வாதிகாரிதான்.

மேலே பிரஸ்தாபிக்கப்பட் சர்வாதிகாரிகள் :

சின்சினேட்டஸ் (Cincinnatus 438 B. C.); சீலா (Syila 81 B. C.); முசோலினி (Musolini); சீசர் (Cesar 49 B. C.); நப்போலியன் (Nepolian); மோயீஸ் (Mois); இட்லர் (Hitlar)

(பிரஞ்சு மொழி பெயர்ப்பு)

---

# அறிக்கை

அன்பர்கள் பலர், எண்ணிறந்த கட்டுரைகளை நம் 'தமிழரசுக்கு' வரைந்தனுப்பி யுள்ளனர். இவை யனைத்தினையும் வெளியிடப் போதிய இடமின்மையால், நாளாவட்டத்தில் பிரசுரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# சோதர வாஞ்சை

[புதுவை-எஸ். நடனம்]

திங்கள் ஐந்தும் நிறையாக் குழந்தை
தொங்கும் ஏணையில் தூங்கு கின்றான்.
மாந்தளிர் மேனி மலர்முகம் செவ்வாய்
காந்தள் மலர்க்கை கரிய இளங்குழல்
வார்சிலை போன்ற அவ்விளங் குழந்தையின்
நேர்மூத்த சுந்தரன் வந்தான் அங்கே.
வந்தவன் கண்வளர் தம்பியைப் பார்த்துக்
குன்றுபோல் நின்றான் குறையுடை மனத்தான்.
கூறுவான் தனக்குள். கூறுவேன் அதையே:
'நன்றடா நன்றடா உன்செயல்! முன்பென்
இன்னுயிர் வளர்த்த அன்னையின் முலைப்பால்
இன்றுநீ யுண்கிறாய் எனக்களிக் காமலே
அதோடு நிற்க மனமிலை மேலும்
இதோஉன் படுக்கையும் விட்டெனு பார்என
அதையும் கொண்டே அயர்ந்து தூங்கினாய்.
அதுமாத் திரமோ? ஆ! ஆ! உன்றன்
கூச்சலைக் கேட்டதும் ஆச்சென வரூஉம்
அன்னையின் வேகம் என்னென்று சொல்வேன்!
நானமூ தாலெனை ஏனெனக் கேட்கவும்
அன்னைக் கெண்ணம் பிறப்ப தில்லை.
இத்தனை பெருமையும் நீஅடைந் தாய்என்
சித்தம் துடிக்குதே! ஆயினும் நீயோ
சிறுவன்; உனக்குத் தீமை செய்வதும்
சிறுசெயல் என்றன் சிந்தையும் நெகிழ்ந்தது; உன்
தோற்றமும் அழகும் தொட்டென் மனதை
மாற்றிய விதந்தான் மாயமோ என்னவோ!
ஆறா மனப்புண் உண்டோநீ நகைத்தால்?
மாறா மனமும் உண்டோநீ மருண்டால்?
இந்நாள் எனக்குநீ கண்ணான தம்பி?
பின்னாள் எனக்குநீ பெருமைசேர் வலத்தோள்!
ஆதலால், உன்றன் மீதுநான் கொண்ட
பொறாமை தவிர்த்தேன். பூண்டேன் அன்பு!
யாரா வதுனக்குத் தீமைசெய் தாலவர்
வேரறுத் திடுவேன்., என்றே சுந்தரன்
நின்று நினைந்தான்; பின்பு
சென்றான் தெருவினில் கன்றெனத் துள்ளியே.

# இலங்கை

[தேவகோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

கல்வி கேள்விகளில் யாழ்ப்பாணம் ஒரு பொற் குடம்! நமது நாவலர் அதற்கு ஒரு பொட்டு! எனவே பொற் குடத்திற்குப் பொட்டிடப்பட்ட பிரதேசம் அந்த யாழ்ப்பாணம்! கொழும்பிலிருந்து சுமார் 250 மைல் தூரத்தில் அது ஒரு தட்டையான உலர்ந்த பூமி. மழை குறைவு. நெல், புகையிலை, பனை, காய் கரி வகைகள் அங்கு மிகுதி. பனையின் உபயோகத்தை வெளிப்படுத்த அண்மையில் ஆங்கொரு காக்ஷி நடத்திக் காண்போர் வியப்புறும் வண்ணம் பனைப் பொருட்களைப் பரப்பி யிருந்தனர்!

அங்கு இன்னொரு விஷயம் குறிப்பிடத் தகுந்தது. நமது நாட்டுக் கிழடுகளுக்கு ஊன்றுகோல் வேண்டுமெனில், யாழ்ப்பாண முருங்கைக் காய்க்கு ஆர்டர் கொடுத்துவிட்டால் போதும்! அடே அப்பா! எவ்வளவு நீளம்! எவ்வளவு பருமன்! இன்னும் சொல்ல வேண்டுமானல் சிலம்ப விளையாட்டிற்கு வேண்டிய தடிகளுக்குப் பதிலாகக்கூட அவைகளை உபயோகப் படுத்திக் கொள்ளலாம்! உருவம்தான் அப்படி என்றால், உதி பெருத்து உத்திரத்திற்கு உதவாமலிருப்பது போலென்று எண்ணுகிறீர்கள்! இல்லை! ருசியில் நம் நாட்டு முருங்கைக் காய்களை அந்தக் காய்களின் காலில் கட்டி அடிக்க வேண்டியதுதான்! ஆனல் கால் இல்லையே! இனி மேல் நோக்குவோம். யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் பத்து மைல்களுக்கப்பால் கீரிமலை என்ற க்ஷேத்திர மொன்றிருக்கிறது. அங்கு கடலை அடுத்து குளம் போல் ஒன்று கட்டப் பெற்றுள்ளது. அதற்கும் கடலுக்கும் போக்கு வரத்துண்டு. அக் குளத்தின் ஒரு மூலையில் தூம்பு போன்ற ஒரு சிறு துவாரமிருக்கிறது. அதன் வழியே நீர் சிறிதாக வந்துகொண் டிருக்கிறது. அது எங்கோ இருந்து அவ்வூர் ஆலயத்தின் கண்ணுள்ள கிணற்றில் கலந்து, இக் குளத்திற்கு வருவதாகச் சொல்லுகிறார்கள். அத் தண்ணீரைமட்டும் தனியாக ருசித்தால் உப்பின்றி நன்னீராக இருக்கிறது. குளத்தில் கலந்தபின் எல்லாம் உப்பு நீர்தான். பல்லோர் தினே தினே இதில் குளிக்கின்றனர், சுகாதாரத்திற்கு ஏற்றதெனச் சொல்கிறார்கள். இந்துக்களின் மனப்பான்மையின்படி பல கோயில்களும், தர்ம சத்திரங்களும் அமைந்திருக்கின்றன. இங்கு குறிப்பிடத் தகுந்த வேறு விசேஷமில்லை.

கீரிமலைக் கருகில் காங்கேசன் துறை அவ்வழியே வரும் கப்பல்களுக்காக தீபஸ்தம்ப மொன்றுடனும், இளைப்பாறும் இல்ல மொன்றுடனும் (Light house and Rest house) விளங்குகின்றது. மற்றும் குறிப்பிடத் தக்க புதினம் ஒன்றும் காண்பதற்கில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் நல்லூர் என்ற ஊர் ஒன்றுண்டு. அங்குள்ள கந்தசுவாமி கோயிலில் பக்த கோடிகள் எள் விழவும் இடமின்றிக் குழுமி, கல்லும் கசிந்துருகும் வண்ணம் அழகுத் தெய்வம் முருகனை வந்தனை வழிபாடாற்றும் முறை, ஒரு நாஸ்திகனுக்கும் ஆஸ்திகத் தன்மையை உண்பிக்குமாறு அவ்வளவு பக்தி மயமாய் விளங்குகின்றது.

யாழ்பாணத்தையும் அதனை அடுத்த சில சிற்றூர்களையும் நாங்கள் பார்த்த அளவில் அப் பிரதேசத்தின் நிகழ் கால நிலைமையை ஒருவாறு அறிந்துகொண்டோம். அங்கு பெரும்பாலும் தமிழ் மக்கள் உரைகின்றனர். இந்து மதத்ினரே அதிகம். எல்லோரும் கூடுமானவரையில் பரிசுத்தர்களாகவும், தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் திகழ்கின்றனர். எளிய வாழ்வில் விருப்புள்ளவர்களாகவும், கல்வி யறிவுடையவர்களாகவும் காணப் படுகின்றனர். பெண் மக்கள் திருமுகங்களில் மஞ்சள் பொலி வுற்றதே தவிர, கொழும்புமா நகரில் பெரும்பாலோர் போல் பவுடர் அடித்துக்கொண்டு திரியக் காணவில்லை! அவர்களிடம் பெண் களுக்குரிய நால்வகைக் குணங்களும் மிளிர்ந்தன. இன்னனைய மாதர்களைக் கண்ட நாங்கள் திரு. வி. கலியாணசுந்தரனாரின் 'பெண் தெய்வங்கள்' என்ற பதத்திற்கு இவர்களும் இலக்கானவர்கள் என்று முடிவு கொண்டோம்.

மற்றும் வாலிபப் பிள்ளைகளைக் கண்டோம். நல்லமாதிரி இடுப் புடை; நீளமான சொக்காய்; மடிப்புக் குலையாத நெடுந்துயில் அங்கவஸ்திரம்; துவிச்சக்கரவண்டி; மேல் நாட்டுப் புகை; இவை யன்றி அவர்களைத் தனியாகக் காண இயலாது. அதிகம் கூறப் புகுந்தால் அவர்கள் கோபத்திற் காளாக நேரிடும். ஆதலால் அவர்கள் திருந்த வேண்டும் என்று மட்டும் சொல்லி மேல் செல்லுவோம்.

பலவகையில் திருப்தி யளித்த யாழ்ப்பாணத்தில் ஒரு பெருங் குறை உளது. அது ஜாதிக் கொடுமை! ஒரு வகுப்பாரை 'இழக்க ஜாதி' எனத் திருநாமமிட்டு ஒதுக்கி மிகவும் கேவலமாக நடத்து கின்றனர். யாழ்ப்பாணத்தின் சிறப்புக்கு முக்கியஸ்தர்களாகப் பல வகையானும் உதவும் அம்மரபினரைக் கொடுமையாக நடத்துதல் அடுக்காத செயலாகும். வழியில் அவ் வகுப்புப் பெண்களைக் கண்டோம். தலையில் கனத்த சுமையுடன் சந்தையில் வியாபாரம் செய்யப் போய்க்கொண் டிருந்தனர். அவர்கள் மார்பைமூட இரவிக்கை யில்லை! வாங்க வசதி உண்டு. ஆனல்,....ஆனல் அணிந்து கொள்ள மேல் ஜாதியார் என்று சொல்லப்படும்,—இவ் வேழை மக்களின் உழைப்பால் உண்டுகளித்து உறங்கும் மக்களின் அனுமதி

யில்லை! ரவிக்கை வேண்டாம்; போகட்டும்; உடுத்தும் துணியால் மார்பு முழுமையும் மூடிக்கொள்ள அனுமதி கொடுத்தால் என்ன முழுகிவிடும்? கொடுமை! சீர்திருத்தவாதிகள் இம் மாசு ஓடி மறையப் பாடுபட முன் வருக! அவர்கள் வரவு நல்வரவாகுக!

யாழ்பாணத்தில் ஸ்ரீ இராமநாதனவர்களால் நிறுவப் பெற்ற பெண்கள் பாடசாலை குறிப்பிடத் தக்க பல அம்சங்களுடன் விளங்கா நிற்கின்றது. முதற்கண் சுகாதாரத்திற்கு உகந்த இடத்தில் நல்ல பரப்பில் இப் பள்ளிச்சாலை அமைந்துள்ளது போற்றத் தக்க தாகும். அடுத்ததாக, ஏட்டுப் படிப்போடு நிறுத்தாமல் மாணவி களுக்குச் சமையல் செய்யும் முறை, இல்வாழ்கைக்கு வேண்டிய சாதனங்கள், குழந்தை வளர்ப்பு, நோயைத் தடுத்தல் இவை போன்றவைகளையும் கற்றுக் கொடுப்பது சிலாகிக்கத் தக்கதாகும். 'மேற்படி பாடசாலையில் படிக்கும் மாணவிகள் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்து குளித்தல், ஆடைகளைத் தோய்த்தல் முதலானவைகளைச் செய்து முடித்து, நீலவர்ணமான ஓர் பொட்டை அணிந்துகொண்டு, பரிசுத்த மனதோடு கடவுளைத் தொழுதுவிட்டு, ஆகாராதிகளை உண்டு தங்கள் தங்கள் வகுப்புகளுக்குச் சென்று பாடங்களை ஒழுங்காகப் படித்து வருவதைப் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. சுமார் அந்தப் பள்ளிக்கூடத்தில் 400 பெண்கள் இருப் பார்களென நினைக்கிறேன். 5, 6 வயது முதல் 20, 25 வயது வரையில் உள்ள மாணவிகள் தேசீய உணர்ச்சியோடு தமிழர்களின் முறைப்படி கல்வியைக் கற்றுவருகின்றனர். இந்தியாவில் இத்தகைய முறை எப்போது ஏற்படுமோவென ஏக்க முறலானேம்' என்று நமது தமிழரசு ஆசிரியர் ஸ்ரீ மே. மா. அவர்கள் தமது இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தில் சொல்லுவது உண்மையே யன்றி வேறல்ல.

இனி, அடுத்த இதழில் உங்களை இரு ஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன்.

(தொடரும்)

---

ஒருவன் வெகு காலத்திற்குமுன் இறந்துபோன தன் நண்ப னது புகைப் படத்தைச் சித்திரகாரன் ஒருவனிடம் கொடுத்து அதைப் பெரிதாக எழுதி வரும்படி சொன்னான். மேலும் தலையில் வைத்திருந்த தலைப்பாகையை அகற்றி விடும்படி சொன்னான்.

சித்திரக்காரன்:—ஐயா! தலையில் மயிர் எல்லாம் சரியாக எழுதி விடுவேன். அவர் கிராப்புத் தலையா, குடுமியா?

அவன்:—(யோசனை செய்து) எனக்கு இப்போது சரியாக ஞாபகமில்லை. அதனால் என்ன, நீதான் தலைப்பாகை எடுக்கும்போது பார்த்துவிடேன்.

—P. கதிர்வேல்

# ராஜமாலிகா

[நாகூர். ரே. தியாகசம்பந்தம்.]

நடுக்காடு. எங்கு பார்த்தாலும் இருள்மயம். ஆந்தைகளின் அரசாட்சியின் உச்சநிலை. ராஜஸிம்மன் மனம் படாத பாடு படுகிறது. வனதேவதையைப் பூசித்த வண்ணமாகவே ஒரு மரத் தடியில் படுத்துறங்கலானான். பின் காணும் நிகழ்ச்சிகளைக் கனவில் கண்டனன். 'கிருஷ்ணஜயந்திக் கொண்டாட்டம். மக்களின் குதூகல மனப்பான்மை. கொண்டாட்டத்தின் களைப்பால் மக்கள் எல்லோரும் துயில்கின்றனர், ராஜஸிம்மனுக்கு மாத்திரம் தூக்கம் வந்தபாடில்லை. அங்குமிங்கும் அலைவதைப் போலிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னை அந்நகரின் அரண்மனையில் காண்கின்றான். அங்குள்ள அழகே உருவெடுத்த ஓர் அணங்கைக் கண்டு காதல் கொள்கின்றான். இலகுவாக அவளை முத்தமென்னும் அரக்கால் சீல் வைக்கின்றான்.' திடீரென விழிப்படைந்து தான் கண்ட கனவை நினைத்து நினைத்து ஆனந்த பரவச மடைந்தவனாய், காட்டை யடுத்த ஒரு கிராமத்தை அடைந்தான் நம் கதாநாயகன் ராஜஸிம்மன்.

அக்கிராமத்திலுள்ள ஓர் சத்திரத்தில் கலாநிதி கற்பக சாஸ்திரியார் 'குலத்தொழில்' என்ற பொருள் பற்றி மா பெருங்கூட்டத்தினரிடையே சொற்பொழி வாற்றிக் கொண்டிருக்கக் கண்டு, ராஜஸிம்மனும் போய்ச் செவி மடுத்தான். எல்லாக் குலங்களின் தொழில் முறைகளைப்பற்றிச் சொல்லி முடித்தவுடன், கூட்டத்தை முடிப்பிக்கும் வகையில் பேசி வருவதைக் கண்ட ராஜஸிம்மன், ஒரு துண்டுக் காகிதத்தில் 'அய்யரே தங்களுடைய குலத்தொழிலையும் தெளிவாகச் சொல்லல் வேண்டுமென' எழுதியனுப்பினன். கற்பக சாஸ்திரியார் உடனே அவனை அருகிலழைத்து வாளா விருக்கும் படி வேண்ட, அதன் பயனாக இருவருக்கும் அத்யந்த நட்பு ஏற்படலாயிற்று.

ராஜஸிம்மன் சிறிது நாள் கற்பக சாஸ்திரி வீட்டிலிருந்து விட்டு கிராமத்தை அடுத்த 'வங்கநகர்' பட்டினத்தை அடைந்து, நடந்து வந்த களைப்பின் மிகுதியால் அங்குள்ள பூங்காவில் சிறிது நேரம் கண்ணுறங்கலாயினன். சிறிது நேரம் சென்று எழுந்தவுடன் தன்னை வெகு உருக்கமாக ஒரு வாலிபன் கூர்ந்து கவனிப்பதைக் கண்டு காரணம் கேட்டான். தன் சகோதரி ஒருவள் அரண்மனையின் அரசிளங் குமாரிக்குத் தோழியாக விருப்பதாகவும், அவள் ஒரு படமொன்றை வீட்டில் வைத்துக் கொண்டு சதா அதைப் பார்த்துக் கொண்டே யிருக்கின்றனள் என்றும், அப்படத்தின் சாயை ராஜஸிம்மனை ஒத்த வண்ணமாக விருக்கிற படியால், அவனைக் காணத் தன் சகோதரி களிப்படைவாளாகையால் வீட்டிற்கு வரல் வேண்டுமென்றும் வேண்டினன் அவ்வாலிபன்.

அவ்வாறே ராஜஸிம்மன் சென்று ராஜபோஜனம் உண்டு, அவ்வாலிபனின் சகோதரியாகிய விமலாவின் அறையை அடைந்து அன்னவளுடன் உரையாடலாகினன். விமலா ராஜஸிம்மனைக் கண்டவுடன் இப்படம் அவனை எவ்வகையிலும் ஒத்திருப்பதைக் கண்டு, மட்டில்லா மகிழ்ச்சி மடுத்தவளாகினள். அப்படத்தின் விருத்தாந்தத்தைத் தனக்கு விளக்கமாகச் சொல்லும்படி ராஜஸிம்மன் வேண்ட 'உத்தம நற்குண சீலரே! எங்கள் அரசிளங் குமாரி நவமாலிகா ஒரு கனவு கண்டனள். அக்கனவில் கண்ட நபரின் படமேயிது. அன்று முதல் நாளைவரை எங்கள் இளவரசியின் மனம் கனவில் தோன்றிக் காட்சியளித்த ஹிருதய நாதனின் பால் சென்று வாடி நிற்கின்றனது. தங்களைக் காணில் மழைமுகம் கண்ட வாடிய பயிரைப் போலொப்பள்' என விவரமாக விரித்துரைத்தாள் விமலா. ராஜஸிம்மனுக்குத் தான் காட்டில் கண்ட கனவு நினைவிற்கு வரவே, தன்னைக் கண்ணுடியில் பார்ப்பதும், அப்படத்தைப் பார்ப்பதுமாக இருந்தான். சிறிது நேரம் கழித்து, தான் ஒரு இளவரசனே யாயினும், காட்டில் வதிந்து வரும் தன் நிலைமையால் நவமாலிகா கரங்களைக் காணல் இயலா, ஆனல், எப்படியாகிலும் அவளையே மணப்பது அல்லது மரிப்பது என்று உறுதி கொண்டவனாய் விமலாவையும், அவள் சகோதரனையும் தனக்குக் கடாசிவரையில் உதவிபுரிய வேண்டினன். பின் தன் நண்பன் கற்பக சாஸ்திரியாரின் இருப்பிடத்தை அடைந்தான்.

ராஜஸிம்மன் தான் கண்ட கனவினையும் வங்கநகரில் நடந்த நிகழ்ச்சிகளையும, ஆதியோடந்தமாக, கற்பக சாஸ்திரிக்கு எடுத்தோதி ஆவன செய்ய வேண்டினன். சாஸ்திரி ராஜஸிம்மனை ஒரு பெண் வேடம்தாங்கச் செய்து வங்கநகர் அரசன் அவைக்களத்திற்கு அழைத்துச் சென்றனன். போகும் வழியில் தான் மேற்கொண்ட யோசனைகளை ராஜஸிம்மனுக்கு எடுத்தோதினன். ராஜஸிம்மனும் மனக்களிப் பெய்தி, இருவருமாக அரசன் சபையை அடைந்து, அரசனை நோக்கி, 'மன்னர் பிரானே இதோ தங்கள் முன்னிலையில் நிற்கும் பெண் என தருந்தவப் புதல்வி. இவளை யான் ஒரு நற்குண கலாவல்லுனனான வாலிபனுக்கு மணம் செய்து தருவதாக வாக்களித்துள்ளனன். அவ்வாலிபன் மணவிழாவிற் கான பொருள்தேட வெளிநாடு சென்று நாட்கள் பலவாகி வந்தானில்லை. இனிமேல் என் பெண்ணை சும்மா வைத்துக் கொண்டிருப்பது நியாயமில்லை. ஆகையால், நான் அவனைத் தேடிப்பிடித்து அழைத்து வரும்வரை, குடிகளின் தாயும் தந்தையுமாய தாங்கள் என் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென' வேண்டினன் சாஸ்திரி. அரசனும் அவ் வேண்டு கோளுக்கிரங்கி, அப்பெண்ணை அந்தப் புரத்திலிருக்கும்படி கட்டளையிட்டான்.

நாளடைவில் அரசிளங் குமாரி நவமாலிகா பெண் வேடம் தரித்த ராஜஸிம்மனை அளவுகடந்து நேசிக்கலாயினள். காரணம் கனவில் கண்ட தன் ஆசை நேசனின் தங்கை போல் பொலிவுற்று விளங்கியதேயாகும். விமலா தன் சகோதரனால் கொணரப்பட்ட நபரே இங்கு பெண் வேடம் தாங்கி நிற்கின்றனன் என அறிந்தும், காரியசித்தியை முன்னிட்டு சும்மாயிருந்தனள். தான் கனவில் கண்ட புருடனை நினைந்து, நினைந்து உருகுவதையும், படத்தைச் சதா பூசித்துக் கொண்டிருப்பதையும், அவனைப் பற்றியே எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பதையும் கண்ட ராஜஸிம்மன் மனம் எவ்வாறிருத்தல் வேண்டு மென்பதை விளக்கவும் வேண்டுமோ?

கிருஷ்ண ஜயந்தி நாள். நகரெங்கும் ஒரே அலங்காரம், மந்திரி பிரதானிகள் புடைசூழ அரசன் அந்தப்புரப் பெண்களுடன் வழக்கப்படி ஆற்றங்கரைக்கு நீராடச் செல்கின்றன். ராஜஸிம்மனும் தான் கொண்ட கருத்தை மறந்திலன். பூசை முடித்து நீராடலாயினர் எல்லோரும். அதுதான் சமயமென ரரஜஸிம்மன் ஆற்றில் மூழ்கி, தன் உடையை அவிழ்த்து நடுத்தண்ணீரில் விட்டு விட்டு, அக்கரையை ஒருவருக்கும் தெரியாமல் அடைந்து, தன் வரவிற்குக் காத்திருந்த கற்பக சாஸ்திரியாருடன் வீடடைந்தான். சிறிது நேரத்திற் கெல்லாம் பெண்வேடம் கொண்ட ராஜஸிம்மனைக்காணு நவமாலிகா திடுக்குற்று, கூவிக் கூவி அழைக்க அரசனுள்பட எல்லோருமே தேடலாயினர். அகப் பட்டாளில்லை. மனக்கவலை கொண்டவராய் வீடுதிரும்பினர் ராஜ தம்பதிகள்.

நாட்கள் சில சென்றன. ராஜஸிம்மனை ஒரு அரசிளங் குமாரனை ஒப்ப நல்லாடை உடுப்பித்து வங்கநகர் அரசன் அவைக்கு அழைத்துச் சென்றனன் கற்பக சாஸ்திரி. 'அரசே, இதோ என்னுடன் நிற்கும் வாலிபனுக்கே என் பெண்ணைத் தருவதாக வாக்களித்துள்ளனன். இவரும் போதிய பொருளுடன் வந்துள்ளார். நாளை மறுநாள் மணம் செய்ய நினைவு கொண்டுள்ளனன். ஆகையால் என் மகளைக் கூட்டி அனுப்பல் வேண்டும்' என கற்பக சாஸ்திரி அரசனை வேண்டினன். அரசன் வாய்மூடி மௌனியாகினன். மந்திரிகளில் ஒருவர் சாஸ்திரியாரிடம் நடந்ததைச் சொல்லவே ஓவெனக் கதறி 'ஐயோ என் செல்வியா மரித்தனள் என் செய்வேன். என் வாக்கை எப்படி நிறைவேற்றுவேன். என்னிடம் வேறு பெண்ணும் கிடையாதே, தவமிருந்து பெற்றேனே. இதுதானு ராசநீதி, குடிகளைக் கண்கள் போல் காக்க வேண்டாமா? அவர்கள் மனம் நோவ நடத்தலாமா—மணமகன் என்ன நினைப்பான். நாளதுவரையில் நான் வாக்குத் தவறியது கிடையாதே, உமது மகளையாகிலும் இவருக்கு மணமுடித்துவையும், சாத்திரமும் அதற்கு இடமளிக்கிறது' எனப் பலவாறு புலம்ப, அரசன் வெருண்டு

சபையை விட்டு சாஸ்திரியையும் அவ்வாலிபனேயும் வெளியேற்ற உத்தர விட்டனன்.

மறு நாட்காலை. அரன்மனை வாயிலில் மா பெரும் அக்னி குண்டம். கற்பக சாஸ்திரி அக்னியைச் சுற்றி வருகின்றார். நான் சொன்ன சொல் நிறைவேற வில்லை. ஆதலின் என்னுயிர் இந்நெருப்புக்கு அர்ப்பணம் என்று சொல்கிறார். கண்டார் காவலன். உயிர்ப் பழிக்கு ஆளாகலாதென நினைவு கொண்டு சாஸ்திரியை அழைத்துத் தன் மகளை அவ்வாலிபனுக்கு மணமுடித்துத் தருவதாக ஒப்புக் கொண்டனன். மட்டில்லா மகிழ்ச்சி யடைந்தார் சாஸ்திரி.

மணவிழா நாள். நவமாலிகா தான் அரசவம்சத் திலுதித்தும் அந்தண குலத்தினருக்கு வாழ்க்கைப் பட வேண்டி யிருக்கின்றதே என்ற வருத்தம் ஒருபுறம், தான் கனவில் கண்ட கணவனை அடைய முடிய வில்லையே என்ற கவலை மற்றொருபுறம் வாட்ட, வாடிய முகத்துடன் மணமேடைக்கு வந்தனள். ராஜஸிம்மன் தன் கருத்தின்படி கடவுள் தனக்கு நவமாலிகாவை அளித்ததற்கு நன்றி செலுத்தியவனாய் மேடைக்கு வந்து, அங்கு குழுமி உள்ளவர்களை நோக்கி, தான் காட்டில் கண்ட கனவும் அதன் முடிவும் என்ற பொருள் பற்றி எடுத்துரைத்து நவமாலிகாவிற்கு—மாலை யணிவித்தான். ராஜஸிம்மனும்—நவமாலிகாவும் வங்கநகரரசனும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவுண்டோ? எல்லாம் அந்தணர் கொண்ட அன்பின் பெருக்கன்றோ!

---

கட்டுரையாளர்:—(ஆசிரியரைப் பார்த்து) என்ன ஐயா என்னுடைய கதையைவிட மோசமான கதைகளைப் பிரசுரிக்கிறீர்களே என்னுடையதை மட்டும் ஏன் பிரசுரிக்க மாட்டேன் என்கிறீர்கள்.

ஆசிரியர்:—அப்படியானால், உம்முடைய கதை அவைகளைவிட மோசமானது என்று அர்த்தம். —S. ரத்தினம்

ஒருவன்:—ஐயா, வைத்தியரே தங்கள் பற்பொடியால் என் பற்கள் யாவும் தங்கமாகி விட்டது.

வைத்தியர்:—(சந்தோஷத்தோடு) அப்படியா!

ஒருவன்:—ஆம், நேற்றுத்தான் பல் வைத்தியர் என் பற்களைப் பழுது பார்த்துப் புதியதாகப் பற்கள் பொன்னால் செய்து கட்டினார். —T. S. சிவநேசன்

மகன்:—அம்மா, நம் அப்பாவை யாரோ தெருவில் வந்து பிடித்துக் கொண்டுபோய் விட்டார்கள்.

தாயார்:—ஐயோ! யார்! போலீஸ்காரனா?

மகன்:—அல்ல போட்டோ எடுப்பவன். —N. பஞ்சாபகேசன்

# மணாளனை வஞ்சித்த மனைவி

[தண்டலம் கிருஷ்ணபுரம். G. கண்ணுசாமி கிராமணி]

**வா**லிபப் பிராய முள்ள பெரியசாமி, கார்த்திகை தீப உற்சவத்திற்காக போளூரிலிருந்து திருவண்ணுமலை என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்குப் போனுன். அவன் கோவிலின் உட்புறத்திலுள்ள குளத்தண்டை வந்து குளக்கரையின் மேல் உட்கார்ந்து கொண்டு குளிக்கும் பெண்களின் அழகைப் பார்த்த வண்ணமிருந்தான்.

ஸ்நானம் செய்து கொண்டிருந்த பெண்களுள் அமிர்தவல்லி என்பவள் அழகில் மிகுந்திருந்ததால் அவளையே இமை கொட்டாமல் பார்த்து ஆனந்த மடைந்தான்.

அமிர்தவல்லி, குளித்த பிறகு ஆடைகளைச் சரிவரக் கட்டிக் கொண்டு, முன்னுடியே குளித்து விட்டு வந்த தன் கணவனுடன் சுவாமி தரிசனத்திற்காக, கோவிலுள் இருக்கும் மூலஸ்தானத்திற்குப் போனுள்.

பெரியசாமி, குளிக்க நேரமில்லாமையால், தலையில் தண்ணீரைத் தெளித்துக் கொண்டு, கற்பூரம் வாங்கிக் கொண்டு அமிர்தவல்லியைப் பின் தொடர்ந்து மூலஸ்தானத்திற்கு வந்து கடவுளை வணங்கினுன். அமிர்தவல்லியும் அவளுடைய மணாளனும் அண்ணுமலைக் கடவுளை வணங்கிய பிறகு வீட்டுக்குத் திரும்பினுர்கள்.

பெரியசாமியும் கடவுளை வணங்கி அமிர்தவல்லி போகும் வழியைக் கவனித்தபடியே வழிநடந்தான். அமிர்தவல்லியும் அவள் கணவனும் இல்லத்திற் கேகினர். பெரியசாமி, அவர்கள் நுழைந்த வீட்டின் நெம்பரையும் தெருவின் பெயரையும் தான் வைத்திருந்த சிறுபுத்தகத்தில் குறிப்பிட்டுக் கொண்டான்.

உயர்ந்த குடும்பத்தில் பிறந்த விவாக மாகாத பெரியசாமி எவ்விதம் அமிர்தவல்லியை அடையலாமென்று பற்பல விதமாக யோசனை செய்தான்; கடைசியில் அமிர்தவல்லியின் இல்லத்தில் ஓர் வேலைக்காரனுக அமர வேண்டுமென்று அவனுடைய அறிவு அவனுக்கு அறிவித்தது; வேலைக்காரனுக அமர்ந்தால் அவளுடைய நட்பைப் பெறவும், அவளுடன் பழகவும் அநுகூலமா யிருக்குமென்று, உடனே தான் பழைய வஸ்திரங்களை உடுத்திக் கொண்டான். அவன் வேலைக்காரனுகப் பாவனை செய்து அமிர்தவல்லியின் வீட்டில் வந்து, தனக்கு வீட்டு வேலை செய்யத் தெரியுமென்றும், தன்னை ஓர் வீட்டு வேலைக்காரனுக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், தான் மிகவும் ஏழை யென்றும் அமிர்தவல்லியின் கணவனைக் கேட்டான். வீட்டு வேலை செய்திருந்த வீராசாமி

இறந்துபோய் இரண்டு நாட்களானபடியால் பெரியசாமியை வீட்டு வேலைக்காரனாக நியமித்துக் கொண்டார்.

பெரியசாமி தன் பெற்றோர்களைக் கனவிலும் எண்ணாமல், காதல் மோகத்தால் பித்துக்கொண்டு ஒழுங்குடன் வீட்டு வேலைகளைச் செய்து, அமிர்தவல்லியை அன்றாடம் பார்த்து ஆவல்கொண்டு அவளிடம் பேசி, தான் வந்திருக்கிற வேலை எப்போது கைகூடும் என்று எதிர் பார்த்திருந்தான். அவன் நன்றாகக் கல்வி கற்றிருந்ததால் வீட்டுக் கணக்குகளைக் கூடச் சரிவரப் பார்த்துத் தன் எஜமானர் தன் பேரில் திருப்தி யடையும்படி நடந்து வந்தான். வீட்டு எஜமானர் ஆபீஸ் வேலையில் இருக்கும்போது, வீட்டில் அமிர்தவல்லியும், பெரியசாமியும் சொக்கட்டான் விளையாடுவார்கள். சொக்கட்டானாடுவதில் வேணுமென்றே தோல்வி யடைவான் பெரியசாமி. ஓர் நாள் இவ்விதம் விளையாடிக்கொண் டிருக்கும் போது, பெரியசாமி அமிர்தவல்லியை நோக்கி, 'அம்மா! நான் தங்களிடத்தில் ஓர் விஷயத்தைச் சொல்ல ஆவலுள்ளவனா யிருக்கின்றேன். அவ்விஷயம் உமக்கு அதிக நன்மையைப் பயக்கும். தாங்கள் அதைச் சொல்லச் சொன்னால் உடனே தெரிவிக்கச் சித்தமா யிருக்கின்றேன். ஆனால், நான் கூறும் ரகசியமான விஷயத்தை நீர் ஒருவருக்கும் வெளிப்படுத்தக் கூடாது; அவ் விஷயத்தைப்பற்றித் தாங்கள் ஒருவருக்கும் சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்தால், நான் உமக்குக் கூறுவேன்' என்று பெரியசாமி சொன்னான்.

இரகசியத்தை அறிய ஆவல் கொண்ட அமிர்தவல்லி, முன் பின் யோசிக்காமல் அவன் கூறியபடியே சத்தியம் செய்து கொடுத்தாள். பெரியசாமி, தான் யாரென்பதை விவரமாக எடுத்துரைத்தான்; கோவிலில் கண்ட விருத்தாந்தங்களை யெல்லாம் கூறினான். அவன் அவளை நோக்கி, 'என் இன்பக் களஞ்சியமே! நான் உன்பேரில் காதல் கொண்டு, உனக்கு வேலைக்காரனாக அமர்ந்திருக்கின்றேன். என் தாய் தந்தையர்களை விட்டு உன் திருப்பாதங்களில் விழுந்திருக்கின்றேன். நீ என் காதலை நிராகரித்து விடுவாயேயானால், சத்தியமாய் நான் இறந்து போக வேண்டியவனே. என் உயிர்க் காதலி, என் வாலிப உடல், பொருள், உயிர் மூன்றையும் உனக்கே அர்ப்பணம் செய்திருக்கின்றேன். விவாகமாகாத என்னை ஆட்கொள்ள வேண்டிய கடமை உன்னிடத்தி லிருக்கிறது; இது தான் நான் உனக்குக் கூறும் இரகசிய விஷயம்', என்று கூறினான்.

இதைக் கேட்ட அமிர்தவல்லியின் மனம் படாதபாடு பட்டது. ஆயினும், அவள் கற்பின் திறமைக் கருத்து சாம்பலாயிற்று; பதி பக்தி அன்னிய புருஷனுடைய கள்ள நட்பில் மோதியது. அவன் நயவஞ்சக வார்த்தைகளால் மோசம் போனாள். வேலைக்காரன்

கூறிய வார்த்தைகளால் அவள் மனது அவன் பேரில் காதல் கொள்ளச் சம்மதித்தது. சம்பாஷணை முடிந்ததும் அவரவர் அலுவல்களைக் கவனிக்கலானார்கள்.

ஒரு நாள் மைசூருக்கு வீட்டு எஜமானர் தசரா உற்சவத்திற்காகப் போயிருந்தார்; உற்சவத்திற்குப் போனவர் ஆறு நாட்களாகியும் வீட்டிற்கு வரவில்லை. அமிர்தவல்லி, அது தான் சமயமென்று நினைத்துப் பெரியசாமியை, ஒரு நாள், இரவு ஒரு மணிக்குத் தன் படுக்கை அறையண்டை வரும்படி உத்திர விட்டாள்.

பக்கத்துத் தெருவில், ஓலை வீட்டில் வசித்துவந்த பெரியசாமி அன்று இரவு ஒரு மணி எப்போது வருமென்று எண்ணியவாறு படுக்கையில் படுத்தவண்ணம் தூங்காமல் விழித்துக்கொண்டேயிருந்தான். பக்கத்து வீட்டில் உள்ள கடியாரத்தில் பன்னிரண்டு மணி அடித்த சப்தம் அவன் காதில் கேட்டது. அரைமணி நேரம் கழித்த பிறகு அவன் அமிர்தவல்லியின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டான்.

அன்று இரவு 12 மணிக்கு மைசூருக்குப் போன வீட்டு எஜமானர் தன் வீட்டுக்கு வந்தார். அவர், தான் இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்துவிட்டதாத் தன் மனைவிக்குக் கூறினார்.

அமிர்தவல்லிக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. 'ஒரு மணிக்குப் பெரியசாமி படுக்கை அறையண்டை வந்துவிட்டால் எப்படி அவனை ஒளித்து வைப்பது! ஐயோ! அண்ணாமலைக் கடவுளே!! நீர்தான் எனக்குத் துணை' என்று தன் மனதில் பலவாறு எண்ணிக் கொண்டிருந்தாள்.

மைசூருக்குப் போய்வந்தவர் கட்டிலின்மேல் படுத்து அயர்ந்து நித்திரையிலாழ்ந்தார்.

காம இச்சையில் வீழ்ந்த பெரியசாமி ஒரு மணிக்கு அமிர்தவல்லியின் வீட்டுக் கதவண்டை வந்து நின்றான். தெருவின் கதவும் படுக்கை அறையின் கதவும் முன்னடியே அமிர்தவல்லியால் திறந்து வைக்கப் பட்டிருந்தன. பெரியசாமி திடீரென்று உள்ளே நுழைந்து படுக்கை அறையில் போடப் பட்டிருந்தக் கட்டிலின் மேல் படுத்தான். வீட்டின் எஜமானர் கட்டிலின் பேரில் படுத்துறங்குவது கூடத் தெரியவில்லை. அவன் கட்டிலின் மேல் படுத்துத் தன் காலை நீட்டும் போது, அதே கட்டிலின் மேல் உறங்கிக் கொண்டிருந்த எஜமானர் மேல் அவனுடைய இரண்டு கால்களும் பட்டன. உடனே எஜமானர் விழித்துக் கொண்டார். எழுந்து உட்கார்ந்தார். அவர் தன் மனைவியை நோக்கி, 'என்னடி நான் தூங்கும்போது எழுப்புகிறாய்! நன்றாய்த் தூங்கினபிறகு தான் என்னை, நீ எழுப்பக் கூடாதா! என்றார்.

அமிர்தவல்லி தன் புருஷனைப் பார்த்து, 'நான் எதற்கு உங்களை எழுப்பினேன் தெரியுமா? தெரியாவிட்டால் நான் கூறும் விஷயத்தைக் கவனியும். நம்முடைய வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரர்களில் யாரிடத்தில் நீர் அதிக விசுவாசமா யிருக்கிறீர், என்று கூற வேண்டும்' என்றாள். ஏன் இந்த இரவில் அவ்விதக் கேள்வியைக் கேட்டாய்? உண்மையாய்ப் பாடுபடும் பெரியசாமியிடம் தான் நான் அதிகப் பிரியமும் விசுவாசமும் வைத்திருக்கின்றேன். இப்பொழுது அதற்கென்ன?' என்று தன் பத்தினியிடம் சொன்னான்.

உண்ட வீட்டில் பெண்டாள நினைத்த பெரியசாமி கட்டிலின் கீழ் பயத்துடன் பதுங்கி நடுங்கிக்கொண்டு, அவள் தன்னைக் காட்டிக் கொடுப்பாளோ என்று விசனமுற்றிருந்தான். அவன் மெதுவாக ஓடிவிட முயன்றான். ஆனால், அமிர்தவல்லி தன் கால்களினால் கட்டிலின்கீழ் இருந்த பெரியசாமியின் கழுத்தைக் கெட்டியாகப் பின்னிக் கொண்டாள்.

புருடன் கூறிய பதிலுக்கு அமிர்தவல்லி கூறியதாவது :— அன்பரே! பெரியசாமியை நீரும் நானும் இதுவரையில் நல்லவன் என்று நினைத்திருந்தோம். ஆனால், அந்த அயோக்கியன் இன்று இரவு என் கற்பைக் கெடுக்க வந்திருப்பது உமக்குத் தெரியாதா! அவன் என்னை விபசாரி என்று நினைத்துக் கொண்டானோ என்னவோ, ஒன்றும் விளங்கவில்லை. அத் திருட்டுப் பையன் வந்திருக்குமிடம் உமக்குத் தெரியாதா? என்றாள்.

'என்ன? அப்படியா! அந்த அயோக்கியன் உன்னையா கெடுக்க வந்திருக்கிறான்! அவன் வந்திருக்கு மிடத்தை உடனே சொல். அவனைச் சரியானபடி தண்டிக்கிறேன்' என்று பதில் கூறினார். இந்தச் சமயம் பெரியசாமியின் உயிர் உடலைவிட்டுப் பிரிவது போன்றிருந்தது அவனுக்கு.

பிராணபதி, நீரில்லாத சமயப் பார்த்து அவன் என்னிடத்தில் காதல்கொண் டிருப்பதாக என்னிடம் சொல்லி, இன்று இரவு ஒரு மணிக்கு வருவதாகச் சொன்னான். அவனைப் பிடித்துத் தங்களிடத்தில் ஒப்புவிக்க உபாயம் செய்து அவனை நமது வீட்டின் பின்புறத்தில் உள்ள சமவெளியில் இருக்கும் அத்திமரத்தடியில் வந்திருக்கும்படி சொல்லி நான் அவனை அனுப்பினேன். இன்று இரவு ஒரு மணிக்கு அவன் கட்டாயம் வந்திருப்பான். ஆகையால் நீர் என்னுடைய புடவையும், ஜாக்கெட்டையும் உடுத்திக்கொண்டு தலைக்கு முக்காடு போட்டுக்கொண்டு அத்திமரத்தின் அடியில் போய் நிற்கவும். நான் வந்திருப்பதாக நினைத்து அவன் என்னை அணைய வருவான். அப்போது நீர் ஒரே பிடியாக அவனைப் பிடித்துக் கொண்டு என்னைக் கூப்பிடவும். நான் விளக்கேற்றிக் கொண்டுவந்து

அவனைத் துடைப்பத்தால் அடிக்கின்றேன். பிறகு உமது கைவரிசைகளை அவன்மேல் காட்டுங்கள்; இதுதான் அவனை நேரில் பிடிப்பதற்குண்டான வழி, என்று படுமோசக்காரியான அமிர்தவல்லி தன் கணவனுக்கு உளவு கூறினாள்.

ஒன்றுமறியாத அவன் தன் மனைவி கூறினபடியே ஸ்திரீயைப் போல் உடை உடுத்திக்கொண்டு, அதிகக் கோபத்துடன் அத்தி மரத்தடியில் சென்று நின்று கொண்டிருந்தான்.

அவள், புருடனை வெளியே அனுப்பி விட்டு எல்லாக் கதவுகளையும் மூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். கட்டிலின் கீழ் பயத்துடன் பதுங்கியிருந்த பெரியசாமிக்கு இப்போது கொஞ்சம் பயம் தெளிந்தது; ஆபத்துக் காலத்தில் தன்னைக் காட்டிக் கொடுக்காதபடி தனக்கு உதவி செய்த அமிர்தவல்லிக்குக் கணக்கின்றி முத்தங்கள் கொடுத்தான்.

இருவரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கிய பிறகு அவள் பெரியசாமியை நோக்கி, 'என் அருமைக் காதலரே, என் கணவன் வந்திடுவான்; ஆகையால், நீர் அத்தி மரத்தடியில் சென்று பெண் வேஷத்திலுள்ள என் கணவனை, நான் கொடுத்தனுப்பும் தடிக்கோலால் இரண்டு அடிகள் அடித்த பிறகு, புருஷனை வஞ்சிக்கும் பாதகி என்று சொல்லி உடனே உம் வீட்டுக்குப் போய்விடும்' என்று கூறினாள்.

பெரியசாமி அவள் கூறியபடியே அத்தி மரத்தடியில் சென்று பெண் வேஷத்தில் நின்று கொண்டிருப்பவரைப் பார்த்து, 'அம்மா! தாய்க்குச் சமானமாகிய எஜமானியே, இப்படியும் நீர் வரலாமா! என் எஜமானருக்குத் துரோகம் செய்யும் உன்னை, நான் பதிவிரதை என்று நினைத்தேனே! நான் உன் கற்பைச் சோதித்தால் இப்படியும் உன் மனம் மாறுபடுமா? உன் திருட்டுத் தனத்தை என் எஜமானருக்குத் தெரிவிக்கின்றேன்' என்று சொல்லிக் கொண்டே போலி வேஷத்திலிருந்தவரை இரண்டு அடிகள் தடிக்கோலால் அடித்த பிறகு அவன் தன் இல்லத்திற் கேகினன்.

அடிபட்ட எஜமானன் ஒன்றும் பேசாமல் தன் மனைவியிடம் ஓடி வந்து நடந்த சமாசாரங்களைக் கூறினர். அவர் தன் மனைவியை நோக்கி, 'அடி பைத்தியக்காரி! அவன் உனது கற்பைச் சோதிக்க உன்னிடம் வருவதாக கூறினனும். நீயே போயிருந்தால் என்பால் விழுந்த அடிகள் உன்பால் விழிந்திருக்கும்; வேலைக்காரனென்றால் பெரியசாமிதான் உண்மைக்குப் பாடுபடும் வேலைக்காரன்! அவன்பால் ஒரு பிசகும் கிடையாதடி. இனிமேல் நாமிருவரும் முழுமனதுடன் அவனை நம்பலாம்' என்றான்.

புருடன் கூறியபடியே அவள் சம்மதித்தாள். அவள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லே. மறுநாள் எஜமானர் பெரியசாமியைத் தன் இல்லத்திலேயே குடியிருக்கக் கட்டளே யிட்டார். அது முதல் பெரியசாமி அவ்வீட்டிக்குப் பெரியசுவாமியாக விளங்கினன்; சர்வ அதிகாரமும் அவனுக்கே கிடைத்தது.

காலச்சக்கரத்தின் வேகம் சுழன்று ஓர் ஆண்டு ஆயிற்று. 'பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான்' என்ற நீதி மொழிக் கிணங்க ஒரு நாள் இரவு பெரியசாமியும், அமிர்தவல்லியும் படுக்கையறையில் இருப்பதை, வீட்டு எஜமானன் வெளியூருக்குப் போய் வந்தவர் ஜன்னலின் வழியாகப் பார்த்து, அடங்காக் கோபமும் ஆச்சரியமும் கொண்டார். எல்லாவற்றிகரும் தன் மனேவியே காரணமென்று அவர் தன் உள்ளத்தில் சிந்தித்தார். உடனே கதவைத் தட்டினர். கதவு திறக்கப்பட்டது. வீட்டுக் கதவு திறப்பதற்குள் பெரியசாமி தன் படுக்கை யறைக்குப் போய் விட்டான். எஜமானன் பெரியசாமியை அழைத்து அவனேப்பிடித்துத் தான் வைத்திருந்த கத்தியால், அவன் கழுத்தில் கனைக்கின்றிக் குத்தி அவன் உயிரைப் போக்கினர். தன் மனேவியையும் சேர்த்து அவனுடன் எமபுரம் அனுப்பினர்.

---

சுப்பன்:—அடே கையில் என்னடா கடுதாசி?

குப்பன்:—ஒன்னுமில்லேடா ஒரு கடுதாசி அதைப் பக்கத்தூர் தபால் பெட்டிலே போடப் போறேன்.

சுப்பன்:—நம்மூர் தபால் பொட்டிலே போடேன்.

குப்பன்:—இந்த ஊரு போஸ்ட் மாஸ்டர் எங்கிட்டே பாலு வாங்கரதில்லே. நான் மட்டும் அவன் போட்டிலே பொடுவேனு?

—வேப்பேரி K. B. துரைசாமி

என்னடா எப்பொழுது பார்த்தாலும் புஸ்தகம் படிக்கும் வேலேயே சரியாக இருக்கிறது. சாப்பிடும் போது கூடவா 'தமிழரசை' கையில் வைத்துக் கொள்ள வேண்டும்?

துரைசாமி:—நம் பெரியோர்கள் சொல்லி யிருக்கும் பழமொழி உங்களுக்கு தெரியாதாக்கும். 'பாடை யேறினும் ஏடு கைவிடேல்' என்று சொல்லி யிருக்கும்போது நீங்கள் சாப்பிடும்போது கைவிடச் சொல்லுகிறீரே!

—S. பெரியதுரை பல்லடம்

லேகியம் விற்பவர்:—இந்த லேகியத்தை ஒரு மண்டலம் சாப்பிட்டால் மன்மதனுகிவிடலாம்.

லேகியம் வாங்குபவர்:—மன்மதனுகிவிட்டால், சிவபெருமானது நெற்றிக் கண்ணுக்குத் தப்பவேண்டுமே?

—S. ரத்தினம்

# முதலாளித் தன்மையின் அந்திய காலம்

[தோழர்கள் G. Bonnet, Trigoulan
எழுதிய பிரஞ்சு நூலின் மொழி பெயர்ப்பு]

முதலாளிகள் வசிக்கும் நாடுகளில் நிலைமை?

பாமர மக்கள் ஏன் பசியால் தவிக்கின்றார்கள்?

முதலாளி உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடியினுல் தவிக்கின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடி 10 அல்லது 12 வருடத்திற்கு ஒரு முறை, சுழல் காற்று வீசுவதுபோல் எல்லாத் தேசங்களிலும் தலைவிரித்தாடும். 1929-ம் ஆண்டில் தொடங்கிய பொருளாதார நெருக்கடி இன்றைய வரையிலும் ஒழிந்த பாடில்லை. காரணம் என்ன?

பண்டைக் காலத்திலிருந்த சமுகத்தை அநேகவிதமாகப் பிரித்திருந்தார்கள். இயந்திரங்கள் தோன்றிய காலம் முதல் (19-ம் நூற்றாண்டு) நமது சமுகத்தை இரண்டு விதமாகத்தான் பிரிக்க முடியும். ஒன்று சோம்பேறி வர்க்கம்; மற்றொன்று தொழிலாளி வர்க்கம். பொருளாதார நெருக்கடியினுல் தேசத்தின் க்ஷேமம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் திடீர் திடீரென்று சாத்தப்படுகின்றன. தொழிலாளிகள் வேலையின்றி, உணவின்றித் தெருக்களில் நடமாடுகின்றனர். கடைகளில் வியாபாரம் க்ஷீணித்துக் கொண்டே போகின்றன. பாங்குகள் கதவடைக்கப்படுகின்றன. ரயில்களுக்கும் கப்பல்களுக்கும் வேலை குறைகின்றது. விவசாயிகள் பசிப்பிணி பொறுக்க முடியாமல் பிச்சையெடுக்கிறார்கள். பொய், களவு, கொலை அதிகரித்துக் கொண்டே போகின்றன. பொருளாதார நெருக்கடிதான் இவ்வித நிலைமைக்குக் காரணம்.

1929-ம் ஆண்டில் தொடங்கிய பொருளாதார நெருக்கடி இன்றைய வரையிலும் ஒழிந்த பாடில்லை. இது என்றைக்குத்தான் ஒழியும் என்றும் சொல்வதற்கில்லை. பொருளாதார நெருக்கடியினுல் வியாபாரமும் கைத்தொழிலும் க்ஷீணித்துக்கொண்டே போகின்றன. 1929-ம் ஆண்டுக்கு முன், 100 ரூபாய் விற்ற கடை இன்றைக்கு 50 ரூபாய்கூடச் சரியாக விற்கவில்லை. 100 ஆர்டருக்குப் பதிலாக 75 ஆர்டர்கள்தான் ஆலைகளில் வருகின்றன. வியாபாரம் $\frac{1}{2}$ பங்கும், கைத்தொழில் $\frac{1}{4}$ பங்கும் க்ஷீணித்து விட்டது. காரணம் என்ன?

கடைகளில் நல்ல சரக்குகளில்லையா? உற்பத்திப் பொருள்களும் விளைபொருள்களும் குறைந்து கொண்டே போகின்றனவா?

இஞ்சினியர்களெல்லாம் சோம்பேறிகளாகி விட்டார்களா? சாமான்களெல்லாம் துருப்பிடித்து விட்டனவா? இல்லை! இல்லை!! இல்லை!!!

இன்றைய உலகத்தில் பல கோடித் தொழிலாளிகளும், அநேக லக்ஷம் நிபுணர்களும் வேலையில்லாமல் பசிப்பிணியால் வாடுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அவர்களைக் கொல்லுகிறது. ஆலைகள் யந்திரங்கள் எல்லாம் நல்ல நிலைமையில்தானிருக்கின்றன. மேற்கூறிய கருவிகளைக் கொண்டே, நாம் இன்றைக்கு உற்பத்தியாகும் சாமான்களைவிட இரண்டு மடங்கு உற்பத்தி யாக்கலாம். இயற்கைப் பொருள்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றன. சாமான்களின் உற்பத்தி அதிகரிக்கின்றனவே யொழிய, வாங்குவோர் கிடையாது. ஏன்?

இன்றைய உலகம் அதிக உற்பத்தியினால் தவிக்கின்றது. நம்முடைய வறுமைக்குக் காரணம் அதிக உற்பத்தியும் முதலாளிகளின் போட்டியுமேதான். இயந்திரங்களினால் செய்யப்பட்ட சாமான்களின் மதிப்புக் குறைகின்றதா? இல்லை. இயற்கைப் பொருள்களின் கதி என்ன? அரிசி, கோதுமை, பால், கறி, முட்டை, காப்பி இவைகள் வாங்குவோரில்லாமல் கிடக்கின்றன. தானியங்களும் பதார்த்தங்களும் காலால் மிதிக்கப்பட்டுக் கடலில் எறியப்படுகின்றன. ஏன்? வியாபாரம் நாளுக்குநாள் க்ஷீணித்துக் கொண்டே போகின்றன. நாமெல்லோரும் நன்றாகச் சாப்பிடுவதற்கும் அலங்கரித்துக் கொள்வதற்கும், வேண்டிய சாப்பாடும் உடுப்பும் கிடைக்கின்றதா? யாருக்கும் ஏதேனும் தேவையில்லையா? இல்லை. உண்மையிலேயே இல்லை.

உற்பத்திப் பொருள்களை வாங்கிச் செலவழிக்கக் கூடியவர்கள் கோடிக் கணக்கான பாட்டாளி மக்கள். பாட்டாளி மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமானால் (அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால்) இன்னும் அநேக ஆலைகள் கட்ட வேண்டும். அநேக கடைகள் திறக்கவேண்டும். உண்மை என்னவென்றால் மானிடராய்ப் பிறந்த நம்மில் பலருக்குத் தேவையான பொருளை வாங்குவதற்குப் பணமில்லை. இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நமக்கு மார்க்கமில்லை. நம்முடைய குழந்தைகள் பள்ளியை வெறுத்துப் பசியால் தவிக்கின்றார்கள்.

அதிக உற்பத்தியினால் பாதிக்கப் படுகின்றவர்கள் பாட்டாளி மக்கள்தான். முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் உயர்ந்த விலைக்கு விற்கவேண்டு மென்கிற ஒரே நோக்குடன், தாங்கள் சேமித்திருக்கும் பொருள்களி லொருபாகத்தை நாசமாக்கி விடுகின்றார்கள். அதனால் தொழிலாளிகளும் விவசாயிகளும் பசியால் வாடுகிறார்கள். அவர்களுக்கு நல்ல உடுப்புகள் கிடையா. அவர்கள் வசிக்கும் வீடுகள் சுகாதார முறைமைக்கு மாறாக அமைக்கப்பட்

டிருக்கின்றன. சூரியனும் சந்திரனும், மழையும் வெய்யிலும் தாராளமாக அவர்கள் குடிசைகளில் பிரவேசிக்கின்றன. ஏன்? இன்றைய சமூக அமைப்பில் பெருவாரியான பாட்டாளி மக்கள் ஏழைகளாக இருக்கின்றனர். ஆனால், ஒரு சிறிய கூட்டம் மாத்திரம் உலக சுகபோகங்களை யெல்லாம் அனுபவிக்கின்றன. காரணம் என்ன?

### சுரண்டல் என்னும் நோக்கமே முதலாளி வர்க்கத்தின் அடிப்படையான லக்ஷியம்

ஆலை, யந்திரம், ரயில், சுரங்கம், நிலம், கப்பல் பாங்குகளெல்லாம் இன்றைய சமூகக் கட்டுப்பாட்டின்படி ஓர் சிறு கூட்டத்தார் கையிலிருக்கின்றன. இக் கூட்டத்திற்குத் தான் முதலாளி வர்க்கம் என்று பெயர். ஓர் ஆலை முதலாளி தன்னுடைய இயந்திரத்தில் செய்யும் சாமான்களை அதிக விலைக்கு விற்க விரும்புகிறான். பாட்டாளி மக்களைத் திருப்தி செய்வதற்கா? இல்லை. சொந்த உபயோகத்தைக் கருதி அவன் அவ்வாறு செய்கிறானா? இல்லை. லாபம் என்னும் பேராசையினால் மதிமயங்கி அவன் அவ்வாறு செய்ய முன் வருகின்றான். என்றி போர்டு (Henry Ford) தினம் ஓர் புதிய காரில் சவாரி செய்தாலும் அவருக்கு மாதம் 30 கார்தான் வேண்டும். வருடம் 1-க்கு 365 கார் அவருக்குப் போதும். ஆனால், அவர் 1930-ம் ஆண்டுக்கு முன் ஆண்டு ஒன்றுக்கு 50,000 கார் உற்பத்தி செய்தார். இன்றைக்கு 20,000 கார் உற்பத்தி செய்கின்றார். வருடந்தோறும் முதலாளிகளால் செய்யப்படும் ஒவ்வொரு பொருளும் கடைக்கு வந்தே தீரவேண்டும். மார்க்கட்டில் அந்தப் பொருள்களெல்லாம் விற்கப்பட வேண்டும்; அல்லது வாங்கப்பட வேண்டும். முதலாளியின் லாபம் வியாபாரியின் லாபம். ஆனால், வியாபாரியின் லாபம் முதலாளியின் லாபமல்ல.

ஒரு சக்கிலி தன்னுடைய சொந்த உழைப்பினால் செருப்புகளும் ஜோடுகளும்தானே தைத்துக் கடைத் தெருவில் விற்கின்றான். அவனுடைய லாபம் வியாபாரியின் லாபமே தவிர முதலாளியின் லாபமல்ல. அவன் ஓர் உழைப்பாளி. அதாவது உற்பத்தி செய்யும் யந்திரம். ஆனால், அதே சக்கிலி ஓர் முதலாளியாகிவிட முடியும். எப்பொழுது? அவன் கீழ் இரண்டு குமஸ்தாக்கள் வேலை செய்வார்களானால், அவனை ஓர் முதலாளி என்று அழைக்கலாம். இந்த இரண்டு குமஸ்தாக்கள் அவனை ஓர் சுரண்டுபவனாக்கி விடுகின்றார்கள்.

ஒரு பயிரிடுபவன் தன்னுடைய உழைப்பினால் சில தானியங்களை உற்பத்தி செய்விக்கின்றான். பயிரிடுபவன் ஓர் உழைப்பாளி. அதற்கு மாறாக ஓர் மிராசுதாரன் பாட்டாளி மக்களைச் சுரண்டுகின்றான். சுரண்டுவதற்கு அநேக உபாயங்களிருக்கின்றன. அவ்வுபாயங்களை யெல்லாம் மிராசுதாரன் உபயோகப் படுத்துகிறான்.

ஆனால், உழைப்பவனுக்கு இவ்வழி யெல்லாம் தெரியாது. (1) நிலத்தைக் குத்தகைக்கு விடுவது. (2) பணத்தை அக்கிரம வட்டிக்குக் கொடுப்பது. (3) மடாதிபதிகளான சுவாமிகளின் பெயரைச் சொல்லி ஊரில் பகற் கொள்ளை யடிப்பது. இந்தப் பணமூட்டைகளால் நாட்டிற்கு ஏதாவது உபயோகமுண்டா? இவ்வர்க்கத்தினரின் ஆசைக்கு நாம் கருவியாக விருக்கின்றோம். இவர்கள் பட்டம் பதவி மோகங் கொண்டு அலைகின்றார்கள். இவர்களுக்கு அரசியல் ஞானம் கிடையாது. இவர்கள் பதவியில் வருவதற்கு நம்மில் அநேகர் உயிர் துறக்க வேண்டும். இச் சிறிய கூட்டத்தினர் நம்மைக் குதிரைகள் என்றும் ஏணிகளென்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய களஞ்சியமும் பொக்கிஷமும் நம் திரவியத்தாலும் பணத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கின்றன. இவர்களிடத்தில் ஆலை, கடை, நிலம், பெரிய மண்டிகளிருக்கின்றன. இவர்கள் உரிமையைப் பாதுகாக்க அரசாங்கமும் ராணுவமுமிருக்கின்றன. நாமோ பிழைக்க வழியின்றி நம்முடைய உழைப்பின் பலனில் 7½ பகுதியை இந்தக் கூட்டத்திற்குச் செலவழிக்கின்றோம். நமது சமுகம் ஒரு பெரிய பட்டாளத்தைப் போன்றது. நம்முடைய பட்டாளத்திற்குப் பாட்டாளி மக்கள் படை என்று பெயர். இன்றைய சமுகத்தில் உழைப்பின் சக்தி ஓர் வியாபாரப் பொருள். பாட்டாளி அப் பொருளையோ எனில், தான் உயிர் வாழவேண்டி ஓர் முதலாளியிடம் விற்கிறான். உழைப்பின் சக்தியை விற்கும் பட்டாளம் பெரிது. இன்னும் அது பெருகிக் கொண்டே போகின்றது.

சின்ன முதலாளிகள், வியாபாரிகள், நிலச்சுவான்தார்கள், மத்தியதர வகுப்பினர்கள் இன்றைக்குப் பெரிய முதலாளிகளின் போட்டியைச் சமாளிக்க முடியாமல் பாட்டாளி (ஏழை) மக்களாகி விடுகின்றார்கள். உடுப்பு, செருப்பு, கரி இன்னும் அநேக பொருள்களை விற்பதற்குப் பெரிய கடைகள் கட்டப்படுகின்றன.

முதலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் ஒன்றுக்கொன்று நேர் விரோதி யாகின்றன. முதலாளிகள் தொழிலாளிகளின் உழைப்பினால் அதிக லாபம் அடைகின்றார்கள். ஆலைகளில் தொழிலாளிகள் தங்களுக்குக் கொடுக்குங் கூலியைவிட அதிகமாக வேலை செய்கின்றார்கள். இதுதான் முதலாளி உலகத்தின் இரகசியம். தொழிலாளிகள் நான்கு மணி நேரம்தான் வேலை செய்யவேண்டும். ஆனால் அவர்கள் 8 மணி நேரம் வேலை செய்கின்றார்கள். முதாளிக்குத் தொழிலாளி 4 மணி நேரம் இனமாக வேலை செய்கிறான். இதைத்தான் உயர்ந்த மதிப்பு (Plus Value) என்பார்கள். லெனின் உயர்ந்த மதிப்பை அழகாகச் சித்தரித்திருக்கிறார்.

'உழைப்பாளி தன்னுடைய வேலையை (உழைப்பை) நிலச்சுவான்தாரனுக்கோ, ஆலை முதலாளிக்கோ விற்கின்றான். உழைப்




## சங்கீதப் பகுதி

# இசையின் அவசியமும் சிறப்பும்

[கீவளூர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை]

**மக்கள்** உயிர் வாழ்வதற்கு வயிற்றுணவை விடச் செவி உணவு மிக மிக வேண்டற் பாலது என்பது நமது பெரியோர்களின் முடிவு. தொல்காப்பிய அகத்திய மரபைப் பின்பற்றிய இன்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முன்னுள்ள அறபத்த நாவலர், இசை இன்பம் இல்லாமல் மக்கள் உயிர் வாழ்தலில் இன்பமில்லை என எண்ணி, அவ்வக்காலத்து மக்கட்கு வேண்டிய மட்டும் இலக்கணங் கள் அமைத்து இசை நூல் இயற்றியுள்ளார். நமது திருவள்ளுவரும் இசையின் அவசியத்தை வற்புறுத்தி,

'செவியில் சுவை உணரா வாயுணர்வின் மக்கள்
அவியினு மாழினும் என் ?'

எனக் கூறியுள்ளார்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன வென்றால், இசை இன்பம் மக்கட்கு மிக அவசியமாக வேண்டிற்பாலது என முடிவு கூற வேண் டியிருக்கிறது.

---

பாளி தன்னுடைய உழைப்பை, ஜீவனத்திற்கும் கூலிக்கும் உபயோகப் படுத்துவதுமன்றி, அதிகமாக வேலை செய்வதனால் அந்த உழைப்பு முதலாளிக்கு இனாமாகி விடுகிறது. இதனால் முதலாளி உயர்ந்த மதிப்புச் சம்பாதிக்கின்றான். இந்த உயர்ந்த மதிப்புத்தான் லாபத்திற்கும் பணக் குவியல்களுக்கும் காரணமா யிருக்கின்றது.

நம்முடைய சொந்த அநுபவ ஆராய்ச்சி உண்மைகளைக் கொண்டு, இசையானது எவ்வெக் காலங்களில் எவ்வெவ் வகைகளில் மக்கட்கு வேண்டற்பாலது என்று நோக்குங்கால்; நம் குழந்தையைத் தாலாட்டு மிடத்தும், நமக்குத் துன்பம் வந்தடைந்த போதும், கல்யாண காலங்களிலும், மற்றும் இவை போன்ற சுக துக்க காலங்களில் இசையானது மக்கட்கு இன்றியமையாத தாயிருக்கிறது. இப்படிப்பட்ட மிக உன்னதமான இசைக் கலையை நம் நாட்டினர் தற்போது போற்றி விருத்தியடையச் செய்யாது வாளாவிருப்பதால், நமது ஆன்றோர்கள் வகுத்த உண்மையான முறைகள் மாறி, மக்கட் கூட்டத்திற்கு நலந்தர முடியாது குறைந்து கொண்டே வருகின்றது. இசைக்கலையை முன் காலத்தில் வேந்தர்கள் வளர்த்துத் தாமும் இசைவாணர்களாகவே விளங்கினார்கள். தற்போது ஜனநாயக உலகமானதால் பொது மக்களாலேயே போற்றி வளர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இக்காலத்தில் மக்கட் பகுதியினர் இசைக்கலையை, எவ்வகையிலும் நம் முன்னோர் கருத்தறிந்து அதன்படி கையாண்டு போற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

விசேஷங்களில் கூடுமானவரை நல்ல இலக்கணப் பாகுபாடு அறிந்த பண்டிதர்களையே ஏற்பாடு செய்து இன்பத்தை அடைய முற்பட வேண்டும். அப்படிக்கில்லாத இணக்க முறையினாலோ, அல்லது விலக்க முடியாத சில காரணங்களாலோ நாம், இலக்கண வழுவமைந்த இசைப் பண்டிதர்களிடத்தில் இசை விருந்தை நாடுவது, நம் முன்னோர்களின் நோக்கிற்கு விரோதமாக முடிந்து துன்பத்தையே அளிக்கும்!

தற்காலத்தில் முறையில்லாது எல்லோரையும் கொண்டு இசையரங்கை அலங்கரிக்க முற்படுவது முற்றிலும் நமது நாட்டிற்கே பெருங் குறையாக முடிகிறது. எல்லோரும் இனியாகிலும் ஆவன செய்ய முன்வரவேண்டு மென்று கேட்டுக் கொண்டு, நம் முன்னோர்கள் வகுத்திருக்கும் இசையின் பிறப்பை, என் சிற்றறிவுக்கெட்டியவாறு சிறிது எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

பழந்தமிழ் மக்கள் முதன் முதலில் ஒலி வடிவமாகத் தோன்றிய, 'ஓம்' என்னும் பிரணவ நாதத்தில் இருந்தே சப்தஸ்வரங்களும் உற்பத்தி என்று கூறுகின்றனர். அதுவே, 'ச' 'ப' முறையாகவும் 'ச' 'ம' முறையாகவும் பன்னிரண்டு அரைச் சுரங்கள் ஆயிற்றென்றும், அவைகட்கு முறையே பிறக்குமிடம் இன்னின்னவைகள் என்றும் குறித்துப் பெயர்கள் வழங்கியுள்ளார்கள்.

முதன் முதல் சத்தமானது மூலாதாரத்தில் இருந்து, வாய்வும் அதற்குச் சமமாக அக்கினியும் தோன்ற இரண்டும் கலந்து ஒரு நாதமானது கிளம்பி, தொண்டையினின்றும் வெளிப் படுகிறது.

தொண்டையில் இருந்தே நாதம் வெளிப்பட முடிந்ததால், வந்த அந்தச் சத்தத்திற்குக் குரல் என மொழிந்தார்கள். இப்பெயரி லிருந்தே சப்தஸ்வரங்களில் முதலாயுள்ள 'ச' என்கின்ற நாத எழுத்தை ஒலிக்க வேண்டுமென்று கூறுவதாகவும் அறிகின்றோம்.

இக்காரணம் பற்றியே நம் முன்னோர் முதல் சத்தமாகிய 'ச' விற்குக் 'குரல்' என்று பெயர் கொடுத்தனர். இரண்டாவதாக, 'ரி' என்கின்ற சத்தத்திற்கு 'துத்தம்' என்று மொழிந்தார்கள். இதற்குக் காரணம் அதுபிறக்கும் நிலையே எனக் குறிப்பிட்டுள்ளனர். அதா வது, துத்தம் என்கின்ற பதத்திற்குச் சிதறல் பொருளாதலால், இங்கு நாதசிதறல் நிலையை 'ரி' அடைந்ததால் அதற்குத் துத்த மென்று கூறினர். எப்படி எனில் மூலாதாரத் திலிருந்து பெருத்து வந்த நாதமானது நாக்கின் நுனியில் நின்று சிதறுவதால் துத்த மென்று நாதச் சிதறலைக் குறித்தார்கள்.

மூன்றாவதான 'க' என்கிற சத்தத்தை 'கைக்கிளை' என்று கூறினார்கள். அதாவது, மேல் அண்ணமும் கீழ் அண்ணமும் தொடும் நிலையில் இருந்தே 'க' பிறப்பதால் கைக்கிளை என மொழிந் தார்கள். நான்காவதான 'ம' என்பதற்கு 'உழை' என்றார்கள். முன்போல புறப்பட்ட சத்தம் உச்சிவரையும் சென்று, மூக்கின் வழியாகத் திரும்பி வெளிப் படுகிறது. அடி பெருத்து நுனிசிறுத்து மேற் பகுதியில் சிறிது வளைந்து இருக்கும் ஒரு கோட்டிற்கு உழை என்று கூறுவது வழக்கம். அந்நிலையில் வெளிப்படும் சத்தத்திற்கு அது பிறக்கும் நிலை உணர்த்தியே உழை என்றனர்.

ஐந்தாவதான 'ப' என்கிற சத்தத்திற்கு இளி எனக் கூறினர். இளி என்ற பதத்திற்கு பேதமை என்பது பொருள். 'ப' வானது மூக்கின் முடிவான நெற்றியினிடத்திருந்து, குறுகிய இடத்தில் முட்டி வெளிப்படுவதால் இளி என்று மொழிந்தார்கள்.

ஆறாவதான 'த' ஸ்வரத்தை 'விளரி' எனக் கூறினர், விளரி என்றால் அதிர்ச்சி எனப் பொருள். அந்நாதமானது சரீரத்திற்கு மிக முக்கியமான இருதயத்தி லிருந்து மோதி வெளிப் படுவதாலும் அந்நாதத்தை ஒலிக்கு மிடத்து சரீரம் முழுவதிலும் ஓர் அதிர்ச்சி ஏற்படுவதாலும் அதற்கு அப்பெயர் கொடுத்தனர். கடைசியாக 'நி' என்கின்ற ஸ்வரத்திற்கு 'தாரம்' எனப் பெயர் வழங்கினர். தாரம் என்பதற்கு உயர்ந்தது எனப் பொருள். இசைப் பாகுபாட்டிற்கு ஒத்த முறையில் 'குரல்' எப்படி முதல் சத்தமோ, அதுபோல ஒரு ஸ்தாயியில் முடிந்த சத்தம் 'நி' ஆதலாலும், இரண்டாவது ஸ்தாயி யின் தொடக்கத்திற்குத் தொட்ட நாதமானதாலும், உயரக்கிளம்பி மூக்கின் நுனி சிறுத்து மூக்கின் நுனி யிலிருந்து பிறப்பதாலும் தாரம் எனக் கூறினர்.

இவை யாவும் முறையே பிராண வாய்வும் அனலும் சேர்ந்து 'ஓம்' என்றும் அதனின்று முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற சப்தநாத பேதங்களும் பிறந்து அமைந்தன. இதை ஊர்ந்து நோக்கு மிடத்து ஒவ்வொரு நாதங்களும் பிறக்கு மிடத்தை, நம் பெரியார் நம்பால் கருணை கூர்ந்து நாம் எளிதில் உணர்ந்து கொள்ள வேண்டி, முறையே பிறப்பிடங்களைக் குறித்துப் பெயர்களியற்றி விரித்துரைத்துள்ளனர். எனவே இதைக் கண்ணுறும் பொது மக்களும் இசை யபிமானிகளும் இசையின் அவசியத்தையும், இசைக்கு நம் முன்னோர்கள் நாம் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு இயற்றி யுள்ள முறைகளையும் பார்த்தும் கேட்டும் ஆனந்திக்க வேண்டு மென்பதே நோக்கம். நம் முன்னோர்கள் நம் நலங் கருதி இயற்றிப் போந்த இசைப் பாகுபாட்டை ஆதரிப்போமாக.

---

## மதிப்புரை

ஆசிரியர் 'வித்வான்' சம்பு. ஐ. நடேச பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு, ஊர்கம் (கே. ஜி. எப்) பாரதி பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்ட 'பசுபதி' என்னும் சமூக சீர்திருத்தக் கதை வரப் பெற்றோம். மற்றும் அவரால் இயற்றப் பெற்ற 'நன்மதி மாலை' 'சிறுமியர் பாட்டு'ம் கிடைத்தன. பசுபதி விலை 0—4—0 சிறுமியர் பாட்டு 0—1—6 நன்மதி மாலை 0—2—0 கிடைக்குமிடம்:— பாரதி பிரசுராலயம், ஊர்கம் (கே. ஜி. எப்) ச. மா. வி. நாயகம் கம்பெனி, தில்லை விலாசம், பொன்னேரி.

---

பண்ணையாள்:—சாமி சம்பளம் தரேன், தரேன் என்று சொல்லிப்புட்டு, மூன்று மாசமா வயித்திலே மண்ணடிக்கிறீர்களே?

முதலாளி:—என்னடா உளறுகிறாய், கண்மாயில் தண்ணீர் பெருகினதால் புன்செய்க்குத் தண்ணீர் ஏறி, பயிர்களை எல்லாம் அழித்துவிட்டது. அதற்கே இன்னும் மண்ணடித்துக் கரையை உயர்த்தவில்லை. அப்படி யிருக்க உன் வயிற்றுக்கு மண் அடிக்க நான் எங்கேயடா போவேன்?

—S. ரத்தினம்

கிருஷ்ணன்:—நான் எப்பொழுதும் முதல் வகுப்பில்தான் பிரயாணம் செய்து வருகிறேன்.

நண்பன்:—(குறும்பு) நியாயந்தானே! உனக்குக் கடன் கொடுத்தவர் களெல்லாம் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்கிற படியால், அவர்களிடமிருந்து தப்பவேண்டாமா! அதனால்தான்.

—T. S. சிவநேசன்

# வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை

[A. வாசிமலை]

(All rights reserved with the author)

[முன் கதைச் சுருக்கம்:—காதலர்களான ராமகிருஷ்ணனும் வனிதாவும் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். காதலன் மறுநாள் பக்கத்தூரிலுள்ள தன் நண்பன் வீட்டுக்கு விருந்துக்குப் போவதாகவும் அதற்குக் காதலி வருவதற்காக 8 மணிக்குக் கார் அனுப்புவதாகவும் சொல்கிறான். வேலையில்லாது இராமகிருஷ்ணனின் உதவியால் ஜீவித்து வரும் கோவிந்தனும் ரங்கநாதனும் வனிதாவை ஏமாற்றி நகைகளை அபகரிக்க எண்ணினர். மறுநாள் தாங்கள் திருவனந்தபுரம் போவதாக நண்பனுக்குக் கடிதம் அனுப்பினர். டிரைவருக்குப் பதிலாக கோவிந்தனால் ஓட்டப்பெற்ற கார் வனிதாவை ஏற்றிக்கொண்டு சென்றது. வழியில் ரங்கநாதனும் சேர்ந்தான். சாகசமாக அவள் பக்கம் அமர்ந்து, மயக்க மருந்தை முகத்தில் காட்ட மயக்கமுற்று அவன் கையிலே சாய்ந்தாள். கார் போய்க் கொண்டிருக்கிறது. பள்ளிக்கூட மீட்டிங்கிற்குச் சென்றிருந்த ராமகிருஷ்ணன், தன் கார் வழக்கம்போல் அங்கு இல்லாதது கண்டு காத்திருக்கிறான். ஓடிவந்த டிரைவர் மூலம் கார் திருடப்பட்டது என அறிகிறான். தன் வீடு சென்று விசாரித்தும் பலனின்றி, வனிதாவைக் காணச் சென்றான். அவன் பெற்றோர் இவனிடம் வனிதாவைப்பற்றிக் கேட்டனர். இவன் அழைத்துக்கொண்டு போகவில்லை என்பது தெரிந்ததும், இதில் ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று எண்ணினர். ராமகிருஷ்ணன் போலீசுக்கு அறிவிக்கச் சொல்லிவிட்டுத் திரும்பி விட்டான். வனிதாவின் பெற்றோர் மிகக் கவலையுற்று ஓர் நற்செய்தி கிடைக்காதா என்று ஏங்கி யிருந்தனர். போலீசார் தீவிர முயற்சி எடுத்தனர். ஓர் நாள் ராமகிருஷ்ணன் 'வனிதா கொலை செய்யப்பட்டாள்' என்று வெளி வந்த செய்திப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். போலீஸ் அதிகாரிகள் அவனை அப்போது ஸ்டேஷனுக்கு அழைத்தார்கள். அச்சமயம் ஒரு சிறுவன் கொடுத்த கடிதத்தின் மூலமும், பிரேத சோதனையில் அகப்பட்ட சாமான்களின் மூலமும், சாக்ஷிகளின் வாக்கு மூலத்தாலும் ராமகிருஷ்ணனே கொலையாளி எனத் தீர்மானித்தனர்.]

ராமகிருஷ்ணன் சிறிதுநேரம் மௌனம் சாதித்தான். மாமனுக்கு அப்படி என்ன கடிதம்தான் அச் சதிகாரர்கள் (ஏனெனில் கொலையாளிகள் சின்னவர்களாய்த் தானிருக்க வேண்டுமென்று ஒருவாறு அவன் ஊகித்தறிந்து கொண்டான்.) எழுதினர்களோ என்று அவன் நினைத்தான். அவனுக்கு இனிமேல் இவ்வுலகத்திலிருந்து வாழவேண்டும் என்ற ஆசை இல்லாமற் போய்விட்டது. அவனுக்கு இவ்வுலக வாழ்க்கை சிறிதும் பிடிக்கவில்லை. எனினும் அவன் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. பின்னும்

இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து 'என்ன மௌனம் சாதிக்கிறாய்? கொலை செய்தது வாஸ்தவம்தானா?

ரா-கி:—இன்ஸ்பெக்டர்வாள்! எல்லாம் முடிந்தது. இனிமேல் யாரிடத்திலும் ஒன்றும் சொல்லிக் கொள்ளப் போவதில்லை.

இன்ஸ்பெக்டர், 'அப்படியானால் இதில் கையொப்பமிடு' என்று ஏதோ எழுதப்பட்டிருந்த ஒரு காகிதத்தை அவன்முன் நீட்டினார். ராமகிருஷ்ணன், 'இன்ஸ்பெக்டரவர்களே! என்னிடத்தில் கையெழுத்து வாங்கிவிட்டதால் நான்தான் கொலையாளி என்றுமட்டும் நீர் தீர்மானித்து விடவேண்டும். ஏன்? நீர் எப்படி நினைத்துக் கொண்டால்தான் எனக்கென்ன? நான் களங்கமற்றவனென்று நீர் அறிந்தாலும் சரி; அறியாவிட்டாலும் சரி எனக்கதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், நான் அப் பரமன் நாட்டிற்கே போகப் போவதால், எல்லாம் வல்ல அந்த சர்வேசுவரன் என் களங்கமற்ற தன்மையை அறிந்தால் போதும், என்று சொல்லி அதில் எழுதியிருக்கும் விஷயத்தைச் சற்றும் பார்க்காமல் அதில் கையெழுத்திட்டான்.

இன்ஸ்பெக்டர் சிறிதும் இரக்கமின்றி, ஒரு சுயேச்சையாய்த் திரிந்த இளஞ் சிங்கத்தைக் கூண்டில் போட்டு, விசாரணை நடக்கும் நாள் வரை அடைத்து வைத்திருக்கும்படி உத்தரவிட்டுச் சென்றார். ராமகிருஷ்ணன் சந்தோஷத்துடன் உள் நுழைந்தான். ஏனெனில் அவனுக்கு 'நாம் நமது காதலியைக் கூடிய சீக்கிரத்தில் சந்தித்து விடலாம்' என்ற ஊக்கம் ஏற்பட்டது.

## அத்தியாயம் 6.

இரவு மணி 9½ ஆனது. போலீஸ் ஸ்டேஷனில் இரவு 10 மணி வரைக்கும் காவலாக நின்ற கான்ஸ்டேபிளை மற்றொரு கான்ஸ்டேபிள் வந்து மாற்றுவது வழக்கம். அதேபோல் அன்று 10 மணிக்கு வந்து காவல் வேலையை ஒப்புக்கொள்ளும் கான்ஸ்டேபிள் ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனைப் பின் தொடர்ந்தே வந்து கொண்டிருந்த ஒரு மனிதன் 'உங்கள் ஸ்டேஷனில் வேலை பார்த்துவரும் குருசாமி நாயுடுவை இப்பொழுது ஸ்டேஷனில் பார்க்க முடியுமோ?' என்றார். அம் மனிதனைப் பார்த்து கான்ஸ்டேபிள் 'எந்தக் குருசாமி நாயுடு?' என்றான்.

'அவர்தான், அந்த லக்ஷ்மிபுரத்திலிருந்து இங்கு மாற்றிக் கொண்டு வந்தாரே. அவர் இங்கு வந்துகூட ஆறு மாசந்தானச்சு'

'ஓகோ, அவரா! அவர் இப்பொழுது இங்கில்லையே. அவரை மறுபடியும் லக்ஷிமிபுரத்திற்கே மாற்றி விட்டார்கள். அவர் உமக்கு எப்படித் தெரியும்?'

'நான் அவர் சிறிய தகப்பனுர் குமாரன்தான்' என்ருர் வந்தவர். இப்படியே வார்த்தையை வளர்த்துக்கொண்டு போய்க் கடைசியாக ஒரு வெற்றிலை பாக்குக் கடையண்டை வந்து சேர்ந்தவுடன் 'வாருங்கள், கொஞ்சம் சர்பத் சாப்பிட்டுவிட்டுப் போய் விடலாம்' என்று சொல்லி, சிறிது மறுத்த கான்ஸ்டேபிளேயும் வலிய அழைத்துச் சென்று அவருக்கும் சர்பத் வாங்கிக் கொடுத்து தானும் பருகிக் கொண்டார். அந்தோ பாவம்! கான்ஸ்டேபிள் பேச்சின் மும்முரத்தில் கடைக்காரன் அவருக்குத் தயாரித்த சர்பத்தில், ஏதோ ஒரு பவுடரைப் போட்டதை எங்கு கவனித்திருக்கப் போகிருர்?

சர்பத் அருந்தினவுடன் கான்ஸ்டேபிளுடன் வந்த மனிதர் ஸ்டேஷன் வரைக்கும் வந்து 'போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். 'கான்ஸ்டேபிளும் ஸ்டேஷனுக்குச் சென்று தனக்கு முன் இருந்த கான்ஸ்டேபிளை அனுப்பிவிட்டு தன் வேலையை ஒப்புக்கொண்டான்.

மணியும் சரியாகப் பனிரெண்டு ஆனது. கான்ஸ்டேபிளுக்குத் தூக்கம் வந்து கண்ணைச் சொக்கியது. இங்குமங்கும் சிறிதுநேரம் உலாத்திப் பார்த்தான். நடந்த பாடில்லை. கடைசியாகத் தூங்கிக் கொண்டே உலாவும் நிலைமைக்கும் வந்துவிட்டான். பின்பு ஒரு ஆசனத்திலாகிலும் சிறிது உட்காரலா மென்றெண்ணி நாற்காலியொன்றில் அமர்ந்தான். அவ்வளவுதான்! அப்படியே ஆசாமி கண் அயர்ந்து விட்டான்.

மூன்று மணிக்கு வந்து வேலையை ஒப்புக்கொள்ளும் கான்ஸ்டேபிள் வந்து, காவல் செய்யும் கான்ஸ்டேபிள் உட்கார்ந்தவாறே தூங்குவதைக் கண்டு 'இந்தாய்யா, சொக்கலிங்கம்! என்ன இப்படி உட்கார்ந்து கொண்டே தூங்குகிறீர். கொலைக்கேசுக் கைதியை வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருக்கிறீரே எழுந்திருமையா, எழுந்திரும். கையெழுத்துப் போட்டுவிட்டு வேண்டுமானுல் நிம்மதியாய்த் தூங்குங்கள்' என்று சொல்லிக்கொண்டே கைதியாகிய ராமகிருஷ்ணனை அடைத்திருந்த அறையைப் பார்த்தான். ராமகிருஷ்ணன் அம்மனிதன் கண்ணில் தென்படவில்லை! 'எங்கே கைதியைக் காணேம்?' என்று சொல்லிக்கொண்டே அருகில் போய்ப் பார்த்தான். தூக்க மயக்கத்திலிருந்த கான்ஸ்டேபிள் சொக்கலிங்கத்தின் காதில் 'கைதியைக் காணேம்' என்ற வாக்கியம் இலேசாக விழவே 'என்ன கைதியைக் காணேமா!' என்று சொல்லிக் கொண்டே நாற்காலியை விட்டுத் துள்ளியெழுந்தான். இருவரும் அறையின் பக்கத்தில் சென்று பார்த்தனர். உண்மையாகவே அங்கு ராமகிருஷ்ணனைக் காணேம். இவர்கள் போட்ட சத்தத்தில் அங்கு தூங்கிக்கொண்டிருந்த மற்ற இருகான்ஸ்டேபிளும் கூட எழுந்து

கொண்டனர். எல்லோருமாகச் சேர்ந்து அறையைத் திறந்து பார்த்தனர். கைதி எவ்வழியாகப் போயிருப்பானென்றே ஒருவருக்கும் தெரியவில்லை. அண்ணாந்து பார்த்தனர். ஒரு மனிதன் தாராளமாய் நுழைந்து செல்லும்படியான ஒரு துவாரத்தின் வழியாக வானத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்த்து, அவைகளின் அழகில் மயங்கியோ அல்லது வேறு காரணம்பற்றியோ வாயைத் திறந்தவாறு நின்றிருந்தனர்.

மானிடர் அஞ்சும் மையிருட்டு வானமாகிய தடாகத்தில் நக்ஷத்திரங்களாகிய தாமரை மலர்கள் பூத்து, கடவுளது சிருஷ்டியின் அற்புதத்தைத் தெள்ளென விளக்கிக் காட்டி நின்றது. தடாகத்தில் பாசி படர்ந்திருப்பது போல் மேகமாகிய பாசியானது மேற் சொல்லிய தடாகத்தில் மிதந்து, இளந்தென்றலின் உதவியால் தன் இஷ்டம்போல் சஞ்சரித்து நக்ஷத்திரங்களோடு போராடி நின்றன. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஆனால் வனிதாவின் வீட்டில் மட்டும் இருவர் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் நடந்த தர்க்கம் இரவு மணி $1\frac{1}{2}$ ஆகியும் முடிந்தபாடில்லை. வார்த்தை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. கோபால் முதலியார் மிகுந்த ஆத்திரத்துடன், 'என் மகள் விபசாரியாயு மிருப்பாள் தேவடியாளுமாயிருப்பாள். இவனுக்கென்னடி அதைப்பற்றிக் கவலை? இவனை நான் என் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ளும்படிக் கெஞ்சினேனா?' என்றார்.

மனைவி:—என்னமோ, காலக்கிரஹம் பாதி நாளையிலேயே அவள் இப்படி அக்ரமம் செய்யவும், அவன் இவளைக் கொன்று விட்டு இப்படிப் போலீஸ் ஸ்டேஷனில் அடைபட்டுக் கிடக்கவும் வேண்டுமென்று கடவுள் அவர்கள் தலையில் எழுதிவிட்டார் போலிருக்கிறது அன்றெழுதியவன் அழித்தெழுதப் போகிறானா? எல்லாம் விதியின் பயன். விதியை வெல்ல யாரால் முடியும்?

கணவர்:—இன்னும் பார்; நீயுமா அப்படிச் சொல்கிறாய்? என் மகள் எவனோடு பேசிக்கொண்டிருந்தபொழுது நீயும் அவனும் பார்த்தீர்கள்? இவன் அப்படியாகிலும் 'இவள் இன்னாரோடு பேசிக் கொண்டிருந்தபொழுது நான் பார்த்தேன்' என்று யாரிடம் சொன்னான்? இன்னும் இவனுக்கு என்ன அக்ரமம் பாரேன். அன்னியனாகிய எவனோ இவனுடைய நண்பனுக்கு, கடிதத்தின் மூலம் வனிதா விபசாரி யென்றும், அவளைப்பற்றித் தன்னிடம் ஒன்றும் கேட்க வேண்டாமென்றும் எழுதி யிருக்கின்றானே. இவன் என் மகளை அநியாயமாகக் கொன்றது மல்லாமல் என்னையும் ஊரெல்லாம் சிரிக்கும்படி செய்து விட்டானடீ!

மனைவி:—என்னமோ, நான் அவன் தான் கொலை செய்திருப்பானென்று இன்னும் நிச்சயமாய் நம்பவில்லை. ஏனென்றால் அவன் இரண்டு மூன்று நாளாக அன்னுகாரம்கூட உட்கொள்ளாமல் புலம்பிக் கொண்டே யிருந்தானென்று, கார் டிரைவரே மிகவும் ஆத்திரப்படுகிறான்.

கணவர்:—ஏண்டீ! அவன் அப்படிப் பாசாங்கு செய்து என்னை ஏமாற்றப் பார்க்கக் கூடாதோ? அப்படி வீட்டில் வருத்தப்பட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுதவன் போலிருந்து கொண்டே, ஒருநாள் இரவு சென்று என் புத்திரியைக் கொன்று போட்டு வந்து விட்டான். மேலும் அவன் அவள் இறந்து விட்டதைப்பற்றித் தான் விசனப்பட்டானே, அல்லது எங்கே நாம் கொலை செய்ததை யாராவது பார்த்திருந்து நம்மைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்து விடுகிறார்களோ என்று வருந்திக் கொண்டிருந்தானே; அவன் பயத்தால் புலம்பிக்கொண்டு அன்னுகாரம் உட்கொள்ளாம லிருந்திருக்கலாம். யார் கண்டது?

மனைவி:—'என்ன இருந்தாலும் நம்மையே நம்பி யிருந்த அந்தத் திக்கற்ற ராமகிருஷ்ணனை, நாமே சர்க்காரிடம் காட்டிக் கொடுத்து விட்டோமே யென்றுதான் என் மனது அடிக்கடி வருந்துகிறது. பாவம்! சந்தோஷமாகக் கஷ்டமின்றி, வருத்தமின்றி வாழக்கூடிய நாளில் அவனுக்கு இக்கெதியா ஏற்பட வேண்டும். ஐயோ! அவன் இப்பொழுது யாருமற்ற அனுதையாகி விட்டானே' என்றாள். அவள் இப்படிச் சொல்லி வாய் மூடியவுடன் 'இல்லை, மாமி! நான் முற்பிறப்பில் எக்காதலர்களுக்காயினும் இடையூறு செய்தவனு யிருப்பேன். அக்காதலர்கள் இட்ட சாபத்தினுலேயே நான் என் காதலியை இப்பொழுது இழந்து தவிக்க வேண்டியிருக்கிறது' என்று யாரோ கூறிய சத்தம் கேட்டது. இவ்வார்த்தைகளைக் கேட்ட தம்பதிகளிருவரும் திடுக்கிட்டுச் சத்தம் வந்த திசையை நோக்கினர். போலீஸ் ஸ்டேஷனில் அடைபட்டுக் கிடந்த ராமகிருஷ்ணன், தன் வீட்டிலேயே கண்ணீர் ததும்பிய கண்களுடன் நின்று கொண்டிருக்கவும், அவன் பக்கத்தில் இன்னொருவர் நிற்கவும் கண்டார் கோபால் முதலியார். அவர் கண்கள் கோபத்தால் சிவந்தன. 'அடே குலத்துரோகி! நீ என் மகளைக்கொன்று போட்டுப் போனது மல்லாமல், மறுபடியும் இங்கு வந்து உன் கருமம் பிடித்த முகத்தைக் காட்டவா வந்தாய்? போலீஸ் ஸ்டேஷனிலிருந்து தப்பிவிட்டோம் என்ற மமதையா உன்னை இங்கழைத்து வந்தது. இப்பொழுது நீ இங்கிருந்து செல்கிறாயா, அல்லது போலீஸாரைக் கூப்பிடட்டுமா? என்ன சொல்கிறாய்?

ரா-கி:—மாமா! அநியாயமாக என்னை நிந்திக்க வேண்டாம் உங்கள் மனமும் இப்படி மாறிவிட அக்கொலை பாதகர்கள் என்ன

சூழ்ச்சி செய்தார்களோ அறியேன். இப்பொழுது தாங்கள் என்ன முகாந்திரத்தைக்கொண்டு வனிதாவை நானே கொலை செய்தேன் என்று சொல்கிறீர்கள்?

கோ-முதலியார்:—ஏண்டா, நீ ரகசியமாய்க் கொன்று போட்டு விட்டால் அது எனக்குத் தெரியாமற் போகுமென்று நினைத்தாயா? நீ கொன்றதுமல்லாமல் இப்பொழுது என்னையே குறுக்கு விசாரணை செய்ய வந்துவிட்டாயோ? பலே பேஷ்! நீ கொல்லாமல் என் பெண்ணை பின்பு யாரடா கொன்றது? உன்னைப் பார்க்கும்போது என் வயிறு பற்றி எரிகிறதடா. இப்பொழுது என் வயிற்றெரிச்சலைக் கிளப்ப இங்கெதற்காகடா வந்தாய்?

ரா-கி:—மாமா! நான் தங்களைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டு மென்று வரவில்லை நான் குற்றமற்றவன் என்பதைத் தங்களுக்கு ரூபித்துக் காட்டி விட்டுப் போகவே யிங்குவந்தேன். உண்மையில் நான் வனிதாவைக் கொல்ல வில்லை. வேறு யாரோ சிலரால் அவள் கொலை செய்யப் பட்டிருக்கிறாள். அவர்களை அதிவிரைவில் பிடித்துத் தண்டனைக் குள்ளாக்கவே, என்னை இவர் போலீஸாரிட மிருந்து தப்புவித்துக் கொண்டு போகிறார்.

பக்கத்தில் நின்றிருந்தவர்:—ஆமய்யா, இவர் சொல்வது வாஸ்தவம்தான். இவர் கொலை செய்யவில்லை யென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். கொலை செய்தவர்கள் வேறு என்றும், அவர்களோடு ராமகிருஷ்ணன் சம்பந்தப்பட்டு ஏதொரு காரியமும் செய்யவில்லை யென்றும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அநேகமாக இன்னும் கொஞ்சகாலத்துக்குள் குற்றவாளிகளைப் பிடித்து விடுவோமென்றே நினைக்கிறேன்.

தம்பதிகள் இருவரும் யாதொன்றும் பேசாது மவுனமாய் நின்றுவிட்டனர். 'அநியாயமாக நாம் ஒருவனைப் புறக்கணித்து வெறுத்தோமே' என்று அவர்கள் மனம் மிகவும் வேதனை யடைந்தது. கோபால் முதலியார் கண்ணில் நீர் ததும்ப 'அப்படியானால், உண்மையாகவே நீ கொலை செய்யவில்லையா? நீ களங்கமற்றவனென்று நான் நம்பலாமா?' என்றார். ராமகிருஷ்ணன் முன்னிலும் அதிகமாகக் கண்ணீர் வடித்து, 'மாமா! நான் உண்மையாகவே யாதொரு பாவமும் செய்தறியேன். என்னை இனித் தங்களால் பார்க்க முடியாதாகையால், கடைசியாக தங்களைப் பார்த்துவிட்டு நான் நிரபராதி யென்றும் தங்களுக்குத் தெரிவித்துவிட்டுப் போகவே இங்கு வந்தேன். எனவே, எனதருமை மாமன் மாமிகளே, தங்கள் வாயால் 'நீ நிரபராதிதான்' என்று ஒரு வார்த்தை சொல்லி எனக்குப் போக உத்தரவு கொடுங்கள். நான் சந்தோஷமாகப் போகிறேன்' என்றான்.

(தொடரும்)

## முதல் தரமான

# உயர்ந்த சந்தனக் கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக் கட்டையை நாங்கள் வரவழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனத் தூள் | 1 | பவுன் பெட்டி | 0—9—0. |
| ,, | ½ | ,, | 0—5—0. |
| ,, | ¼ | ,, | 0—3—0. |

**பழனியாண்டவர் கம்பெனி,**
சந்தன வியாபாரம்,
**220,** கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## (ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனுகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணு தான். தபால் செலவு அணு 2. 10 அணு ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம் :

**'தமிழரசு' புத்தகாலயம்,**
**31,** வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# கோல்டனூல்

நண்பர்களே! இந்த மருந்தானது தங்கம் முதலான விலையுயர்ந்த வஸ்துக்களினுல் தயார் செய்யப்பட்டது. இதனை அநேகர் உபயோகித்து வருகின்றனர். இதன் உயர்ந்த குணத்தைப் பலரும் புகழ்கின்றனர். சிறுவர்கள் முதல் வயோதிகர் வரையில் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம். தாது விருத்திக்கு நல்ல மருந்து. மலேரியா என்னும் விஷ சுரத்தினுலாவது அல்லது வேறு எந்த சுரத்தினுலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே சொல்ல வேண்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி அதிகரிக்கும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்தபாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் இரு பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

இம் மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் பலசாலிகளான புத்திரர்களைப் பெறலாம் புத்திர சந்தானம் உண்டாவதற்கு இம் மருந்தை ஆண் பெண் இருபாலர்களும் சாப்பிட வேண்டும்.

**புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.**

## கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆராத இரணங்களுக்கு முக்கியமானது.

**புட்டி 1-க்கு விலை அணு 8.**

# கார்டோலின்

## (ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்)

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது. ஈளை இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

மக்கள் சுவாசக் குழாயிலுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால் துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டு விதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில் பிரான்கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக் காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்த நிலைமையில் இருந்தாலும் இம் மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையன்றி இம் மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

---

அன்புள்ள, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலினால் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமா இருக்கின்றான்.

சென்னை பெரியமெட்டு கண்டிராக்டர் நா. கனபதி முதலியார்.

**இதன் விலை புட்டி 1 - க்கு ரூபா 10.**

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றூர்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப் பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினுல் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானுலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

**வேண்டுவோர் 6 அணு தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.**

## நற்சாட்சி பத்திரம்

---

வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற் றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானர்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்பரொருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந்தினல் மேற் கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களானல் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மையுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக!

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26-12-34.

---

ம-ள-ள-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்து (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப்பிய 7 அணு ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னுமொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச் சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.
District Munsiff, Tanuku.

**ஒரு பவுன் புட்டி விலை ரூ. 2.**

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜகட்டி கள் (சைன்ஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினேக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்ப ரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக்கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது இதை உபயோகித்துப் பாருங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே, அறையாப்புக் கட்டி இவைகளேயும், எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினல் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னே கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலேயில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தியடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக்கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனன் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு :—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

**விலை புட்டி 1-க்கு ரூபா 1.**

m211,N30TA
N38 10.3

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**
**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

207675

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் இயற்றிய
அரிய நூல்கள்

# அனுபவ வைத்திய நூல்

(2 - ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

இதன் விலை ரூபா 2. தபால் சார்ஜ் வேறு.

# ஜீவ இரகசியம்

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப் பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை —தேகம் சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களில் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந் நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1. தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

'TAMIL ARASU' RGD. M. NO. 2559.

# கார்டோலின்

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்டரோகத்தைத் தீர்த்திருக்கிறது.

க்ஷய இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.




30, 40 வருடங்களாகக் காச நோயால் கஷ்டப்பட்டவர்களை இம்மருந்து காப்பாற்றி இருக்கிறது.

ஆஸ்துமாவுக்கு அரிய ஔடதம். விலை புட்டி 1-க்கு ரூபா 10.

விலாசம் :—டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.